தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை

# இருக்கிறம்

ඉරුක්කිරම්

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 12

20.06.2011

## கணவனை பூசா முகாமுக்கு பறிகொடுத்த பெண்ணின் கதை

## அழிவடையும் அட்டாளைச்சேனை 'ஹிறா' கிராமம்

## சுற்றுச்சூழல் தினத்தில்... மின்சாரத்துக்காக தறிக்கப்பட்ட பனை மரங்கள்




## வலி. வடக்கு மீள்குடியேற்ற சவால்கள்

# இளம் பெண்மீது பாலியல் வன்புணர்வு முன்னாள் போராளி கைதுசெய்யப்பட்டார்

இளம்பெண் ஒருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திக் கொலைசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினரை, தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதிபதி சிறிநிதி நந்தசேன உத்தரவிட்டுள்ளார்.

பருத்தித்துறை, புலோலி தெற்கைச் சேர்ந்த அரியநாயகம் துளசி என்றப் பெண் கடந்த வருடம் நவம்பர் மாதம் கிணறு ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

அப்பெண் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டமை விசாரணைகள் மூலம் தெரியவந்தது. இக்கொலை வழக்கில் குற்றவாளியாகக் கருதப்பட்ட குறித்த சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக பருத்தித்துறை காவல்துறையினர் நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்தனர். இதனை கருத்திற்கொண்டே இவரது விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் குறித்த பெண்ணைக் கடத்தி 5 நாட்கள் அறையொன்றில் அடைத்து பாலியல் வன்புணர்வு செய்து, பின்னர் கொன்று கிணற்றில் வீசியதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர் பேச்சுவார்த்தை நடத்தியவர் புலனாய்வுத் துறையினரால் விசாரணை

வடபகுதி மீனவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்தச் சென்ற தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் அமைப்பாளர் டபிள்யு. ஹேமக்குமார புலனாய்வு காவல் துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

தென்பகுதி மீனவர்களுக்கும் வடபகுதி மீனவர்களுக்குமிடையே பரஸ்பர நம்பிக்கையையும் நட்புறவையும் ஏற்படுத்தும் வகையில் பேச்சுவார்த்தை ஒன்று கடந்தவார இறுதியில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கசமாஜங்களின்சம்மேளனத்தின்தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டமை தொடர்பாகவே இவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பேச்சுவார்த்தை இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம் புலனாய்வுத் துறையினர் அவ்விடத்தில் நோட்டமிட்டுக் கொண்டிருந்ததாகவும் பேச்சுவார்த்தை முடிவடைந்த பின்னர் தன்னை அவர்கள் விசாரணைக்கு உட்படுத்தியதாகவும் ஹேமகுமார குறிப்பிட்டார்.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் இப்படியான சந்திப்புகளை மேற்கொள்ளும் முன்னர் தங்களுக்கு அறிவிக்க வேண்டுமென புலனாய்வுத் துறையினர் தனக்கு அறிவுறுத்தியுள்ளதாக ஹேமகுமார மேலும் தெரிவித்தார்.

# கிழக்கு மாகாண ஆசிரியர்கள் இடமாற்றம் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிப்பு

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆசிரியர் இடமாற்ற விடயத்தால் மாகாணத்தின் கல்வி நடவடிக்கைகள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மாகாணத்திலுள்ள அனைத்து அரச பாடசாலைகளிலும் இடமாற்றம் செய்யப்படவுள்ள ஆசிரியர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் எப்பொழுது இடமாற்றம் செய்யப்படுவார்கள் என்ற விபரம் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில் கடந்த ஜனவரி மாதம் இது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருப்பதாக மாகாண கல்வித் திணைக்களம் அறிவித்தது. பின்னர், ஜூன் மாதமென அறிவிக்கப்பட்டது. ஆனால், இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் பாடசாலைக்கு வரும் ஆசிரியர்கள் தங்களது இடமாற்ற சிந்தனையில் இருப்பதாகவும் கற்பித்தல் நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபடுவதில்லை எனவும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்ஆசிரிய இடமாற்ற விடயத்தால் பெரிதும் பாதிக்கப்படுவது இவ்வருட சாதாரண மற்றும் உயர்தர மாணவர்களே. ஆகவே, இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் மேற்கொள்ள வேண்டுமென மாணவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# வலி வடக்கு, வலித்தூண்டல் மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு இராணுவத்தினர் தடை

வலி வடக்கு, வலித்தூண்டல் கிராம மக்கள் தங்களது மீன்பிடித் தொழிலை மேற்கொள்வதில் இராணுவத்தினரிடமிருந்து சிக்கலை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

மீன்பிடிப் படகுகளை கடலுக்கு விடாமல் இராணுவத்தினர் தடுப்பதோடு, கடலுக்கு மக்கள் செல்வதை தடைசெய்யும் வகையில் மண்ணெண்ணெய் பரல்களின் மூலம் தடைகளையும் ஏற்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் பலமுறை இராணுவத்தினரிடம் கிராம மக்கள் பேச்சுவார்த்தை நடாத்தியும் எவ்விதமான பலனும் இல்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் இராணுவத்தினரோடு பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரியவருகிறது. ஆனால், இத்தடை நிரந்தரமாகவே போடப்பட்டுள்ளதாகவும் இதனால் தமது வாழ்வாதாரம் அபாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஆசிரியர்கள் இடமாற்றம் சம்மாந்துறையில் பதற்றம்

கிழக்கு மாகாணத்தில் அறிவிக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தினால் மாகாணக் கல்விப் பணிப்பாளர் சம்மாந்துறை பிரதேசசபையில் வைத்து பொதுமக்களால் கடந்தவாரம் முற்றுகையிடப்பட்டார்.

கிழக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்டுள்ள ஆசிரியர் இடமாற்றத்தினையிட்டு சம்மாந்துறை பிரதேச சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, இந்த இடமாற்றத்தை நிறுத்தக்கோரி பொது மக்கள் பிரதேச சபையை முற்றுகையிட்டுள்ளனர்.

பின்னர் அம்பாறை மாவட்ட பொலிஸ் ஏ.எஸ்.பி. ஆளுநருடன் பேசி டிசம்பர்வரை இந்த இடமாற்றத்தை ஒத்தி வைத்ததையிட்டே பொதுமக்கள் இரவு 11 மணியளவில் கலைந்து சென்றுள்ளனர். இதற்காக, பாடசாலைகளிலும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளன.

# சிறுமி கிணற்றுக்குள் மரணம்

நாவற்குழி, முந்நூறு வீட்டுத்திட்டப் பகுதியில் 6 வயதுச் சிறுமி ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

சென்ற வாரம் மாலை 5.30 மணியளவில் அன்ரனி திலகா என்ற அந்தச் சிறுமி கிணற்றில் முகம் கழுவச் சென்ற சமயம் தவறி வீழ்ந்து மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# கிளிநொச்சி மக்கள் சொந்தக் காணிகளுக்கு செல்ல இராணுவத்தினர் அனுமதி தேவை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பொது மக்களின் பல காணிகளுக்குள் படையினரின் அனுமதியின்றி செல்ல முடியாதிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அங்கு காணப்படும் காணிகளில் 'உத்தரவின்றி உட்பிரவேசிக்க வேண்டாம்' என்ற பதாகைகள் படைத்தரப்பினரால் தொங்கவிடப்பட்டிருப்பதாகவும் இதனால் தமது சொந்தக் காணிகளுக்கே செல்ல முடியாதிருப்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் காணிகள் முன்பு இராணுவ முகாம்களாக இருந்தபோதிலும் தற்போது அங்கிருந்து இராணுவத்தினர் வெளியேறியுள்ளனர். இந்நிலையில் தங்களை ஏன் காணிகளுக்குச் செல்ல அனுமதிக்கவில்லையென பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

# சிங்களமயமாகும் கிழக்குப் பல்கலைக்கழகம் உயர் பதவிகளைக் கைப்பற்றவும் முயற்சி

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உயர் பதவிகளுக்கு சிங்களவர்களை நியமிப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தை சிங்கள மயமாக்கும் நடவடிக்கைகளை உயர்கல்வி அமைச்சு மேற்கொண்டு வருவதாக மாணவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


பல்கலைக்கழகத்தின் பேரவை கலைக்கப்பட்டு முக்கிய பொறுப்புகள் யாவும் பேராசிரியர் அத்தநாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. முக்கிய முடிவுகள்அனைத்தையுமேஅவர்தன்னிச்சையாகவே மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளை, பல்கலைக்கழகத்தின் மாணவர்களை கண்காணிப்பதற்கும் நிர்வாகத்தை கண்காணிப்பதற்குமான அதிகாரியாக உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் தம்பி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் மாணவர் உள்வாங்கல் நடவடிக்கையிலும் தற்போது சிங்கள மாணவர்களை கூடுதலாக உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர்.

கலைப்பிரிவில் போதானா மொழியாக சிங்களம் இல்லை என்றபடியால் அப்பிரிவுக்கு சிங்கள மாணவர்கள் உள்வாங்கப்படுவதில்லை, எனினும் ஏனைய துறைகளுக்கு சிங்கள மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதம் அதிகரிக்கப்படுவதாக கலைத்துறை இறுதியாண்டு மாணவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

# இருப்பு




'அபாயம்'

# 'பேசாமல் முள்ளிவாய்க்காலிலேயே செத்திருக்கலாம் போலக் கிடக்கு'

## கணவனை பூசா முகாமுக்கு பறிகொடுத்த அபலைப் பெண்

உறவின் கதை

கைது செய்யப்பட்டு பூசா தடுப்பு முகாமில் இருக்கும் தன் கணவனைப் பார்த்துவிட்டு வந்து, தன் வீட்டுக்குப் போவதற்காக வவுனியா பஸ்நிலையத்தில் காத்துக்கொண்டிருந்தார் வனஜா. சுட்டெரிக்கும் வன்னி வெயிலில் நெற்றியிலிருந்து வழிந்த வியர்வையின் சூடுகூட அறியாது சோர்ந்துபோய் அமர்ந்திருந்தார். மடியில் அவரது கடைசி மகன் தலை வைத்து படுத்திருந்தான். பார்க்கவே பரிதாபமாக இருந்த அவரிடம் அவரது நிலைமையைக் கேட்டுத் தெரிந்து கொண்டேன்.

இரண்டு துளி கண்ணீர்தான் அவரது உரையாடலை ஆரம்பித்து வைத்தது.

'எண்ட அவர் பூசாவிலதான் இருக்கிறார். இப்ப பூசாவுக்குத்தான் போட்டு வாறம். நாலு பிள்ளையளில ஒண்டைத்தான் இந்தத் தடவை கூட்டிக் கொண்டு போய்ட்டுவாறன். எல்லாப் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு போய்வரேலாது. இன்னொரு ஆள் துணைக்கு வேணும். எல்லோரும் போய்வாறதெண்டால் கனக்கக் காசும் வேணும்..' என்று இடை நிறுத்தியவரின் மௌனம் என்னை தொடர்ந்து பேசத்தூண்டியது.

'இவரும் இல்லாமல் நான் தனியக் கஸ்ரப்படுறன். செலவுக்கு அப்பாவும் தம்பியவையுந்தான் ஏதோ கொஞ்ச உதவி செய்வினம். அவையிட்ட எல்லாத்துக்கும் கேட்க ஏலாது. அதைவிட எல்லாப் பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு போகப் போறன் எண்டால் அதுக்கு எப்படிப்போய் உதவி கேட்கிறது. அவையும் இப்பத்தான் மீள் குடியேற்றத்தில வந்து தொழில் செய்யினம். மற்றப் பிள்ளையளைக் கூட்டிக் கொண்டு போகேல்லை எண்டு இவருக்குக் கவலையும் கோவமும். ஆனால், நான் என்ன செய்யிறது? வீட்டில பிள்ளையளும் தகப்பனைப் பாக்கப் போறம் எண்டு ஒரே கரைச்சல். ஒருமாதிரியாகச் சமாளிச்சு அம்மாவுடன் விட்டிட்டுப் போய் இப்ப வாறன். இதுகளை நினைச்சால் பேசாமல் முள்ளிவாய்க்காலிலயே செத்திருக்கலாம் போல கிடக்கு..' மேலே பேசமுடியாமல் அந்தத் தாயின் கண்களிலிருந்து கண்ணீர் வழியத் தொடங்கியது.

'இதெல்லாம் ஆருக்குத் தெரியும். கலியாணம் கட்டின ஆக்கள் எண்டு கொஞ்சப் பேரை விட்டிருக்கினம். இன்னும் ஒரு கொஞ்சப் பேரை விடப்போகினம் எண்டு பதிவெடுத்திருக்கினம். ஆனால், எப்ப விடுவினம் எண்டு தெரியாது. முந்தியும் இப்படி இரண்டு தடவை இந்தா விடுகிறம் எண்ட மாதிரிச் சொல்லிப் போட்டுக் கடைசியில விடேல்ல'

மௌனத்தைக் கலைத்த அவர் தொடர்ந்தார். 'இவர் இயக்கத்தில இருக்கவேயில்லை. தோட்டந்தான் செய்தவர். எங்கட அப்பா குடிக்கிறவர். அதால நான் மூத்தபிள்ளையாக இருந்தும் படிக்கேலாமற் போட்டுது. நான் சின்ன வயசிலயே வேலைக்குப் போகத் துடங்கிட்டன். வேலைக்குப் போன இடத்திலதான் இவரைப் பார்த்து, கலியாணம் நடந்தது. அப்ப எனக்கு 19 வயது. எல்லாமாக நாலு பிள்ளையள். மூண்டாவது பிள்ளை செத்துப் போச்சு. முகாமில காய்ச்சல் வந்தது. இவரும் அப்ப இல்லை. எனக்கும் துணையில்லை. மற்றப் பிள்ளைகளைக் கவனிக்கிறது எப்படி? இந்தப் பிள்ளையைக் காப்பாத்திறது எப்படி எண்டு எனக்கு விளங்கேல்ல. இந்த நிலைமையிலதான் பிள்ளை செத்தது'

'..இது எங்களுக்குத் தீராத கவலை. நான் இவரைப் பார்க்கப் போனபோது, இதுக்காக இவர் என்னோட கதைக்கேல்ல. நான் என்ன செய்யிறது? என்ரை பெற்ற வயிறு எரியுது. அந்தப் பிள்ளையை நினைச்சு அழாத நாளே இல்லை' என அந்தத் தாய் அழும்போது என் கண்களும் பனித்தன. 'இவர், முந்தி எல்லைப் படையில பயிற்சி எடுத்தவர் எண்டு ஆரோ சொல்லிப் போட்டினம். இவர் எல்லைப் படையில இருந்தவர்தான். அப்ப ஆர்தான் அப்படி இருக்கேல்ல. இப்ப ஆளை ஆள் காட்டிக் குடுத்துக் கொண்டிருக்கினம். அப்படி இருந்தும் இவர் ஆருக்கும் எந்தத் தீங்கும் செய்யேல்ல. ஆனால், விடுகிறாங்கள் இல்லை'



'இவரைக் கலியாணம் செய்த பிறகுதான் நாங்கள் மூண்டு நேரமும் சாப்பிட்டிருக்கிறம். கொஞ்சம் கஸ்ரமில்லாமல் இருந்திருக்கிறம். இவர் நல்ல உழைப்பாளி. ஒரு நேரமும் சும்மா இருக்கமாட்டார். எண்ட அப்பாட குறைகளை எல்லாம் இவர்தான் தீர்த்து வைச்சார். அதால வீட்டில இவருக்கு நல்ல மரியாதை. இவ்வளவுக்கும் இவர் கூலிக்குத்தான் போகிறவர். வீட்டில கொஞ்சமாகத் தோட்டமும் வைச்சிருந்தம். இப்ப ஒண்டுமில்ல. எனக்குக் கொஞ்ச உதவி கிடைச்சிருக்கு. அதை ஒழுங்கு படுத்திச் செய்யிறதுக்கு ஆளில்ல. உதவியும் இல்ல' பெருமூச்சுடன் நினைவுகளை மீட்டத் தொடங்கினார்.

'கடிதங்கள், மகஜர்கள் எண்டெல்லாம் பலருக்கும் குடுத்திருக்கிறன். நான் மட்டும் இல்ல. என்னைப் போலபலபேர் அப்படிக் குடுத்திருக்கினம். சிலபேர் விடுவிக்கப்பட்டிருக்கினம். சிலபேரை வேற இடங்களுக்கு மாத்தியிருக்கினம். என்ன நடக்குதெண்டு எங்களுக்கு விளங்கேல்ல. இப்ப இவரை வேற இடத்துக்கு மாத்தாமல் விட்டாலே போதும். புது இடமெண்டால், அந்த இடத்தைத் தேடிப் போறது கஸ்ரம். பிறகு அங்க போய்வாறதுக்குப் பழகவேணும். அங்க இருக்கிற ஆக்களோட சாப்பாட்டுக்கும் உதவிக்கும் எண்டு புதிசா பழகவேணும்.'

'போர் நடக்கேக்கையே நாங்கள் அலையத் தொடங்கீட்டம். அப்பயிருந்து இண்டைக்கு வரைக்கும் அலைச்சல் தான். இது இன்னும் எவ்வளவு காலம் தொடரும் எண்டு தெரியேல்ல. போர் முடிஞ்ச பிறகு இன்னும் என்ரை கணவர் சிறையில இருக்கும்போது நான் எப்படி நிம்மதியா இருக்கமுடியும்? இவரை வெளியில எடுக்கிறதுக்கு லோயரிட்ட (சட்டத்தரணியிட்ட) போய்ப் பதிஞ்சு வழக்கைப் போடுங்கோ எண்டு சிலபேர்' சொல்லுகினம். அப்படிச் சிலபேர் செய்யினம். நாங்களும் அப்படிச் செய்யலாம். ஆனால், அதுக்குக் காசு வேணுமே. காசிருந்திருந்தால் எவ்வளவையோ செய்யலாம். ஆளை வெளிநாட்டுக்கும் அனுப்பியிருக்கலாம். எங்களிட்ட காசில்லாமற் போனதாலதான் பெத்த பிள்ளைகளையே தகப்பனிட்டக் கூட்டிக் கொண்டு போய்க் காட்ட முடியாமல் இருக்கு' மனதில் தேக்கி வைத்திருந்த அத்தனை வேதனைகளும் கண்ணீராய் வெடிக்க, வனஜா தேம்பி அழுதார். நான் மௌனமாக இருந்தேன்.

'நான் எட்டாம் வகுப்போட படிப்பை நிறுத்திப் போட்டன். முந்தி அட்டைக்குப் போவன். இப்பவும் அந்தத் தொழில் தெரியும். கறி தெரியப் போறது. கடற்கரைக்குப் போனால் ஒரு நாளைக்கு 200 ரூபாய் தருவினம். சொந்தக்கார ஆக்கள் தொழில் வைச்சிருக்கிறதால பிரச்சினையில்லை. ஆனால், இந்த வருமானம் போதாது. எண்டாலும் இதை விட்டால் வேற வழியில்லை. இவருக்கு இப்படி நான் கஸ்ரப்படுகிறது விருப்பம் இல்லை. ஆனால், இப்ப வேற வழியில்லை எண்டு தெரியும். அதால ஒண்டுஞ்சொல்ல மாட்டார். நானும் இதைப் பற்றி இவரிட்ட எதையும் கதைக்கிறதில்லை..'

'நாங்கள் இப்படியே காலம் முழுக்கக் கவலைப்படத்தான் பிறந்திருக்கிறம் போலை. வன்னியில பிறந்ததாலை நாங்கள் படுகிற பாடும் கஸ்ரமும் கொஞ்சமில்லை. எண்ட கணவர் சொல்லுவார் சிலபேருக்கு இன்னும் குடும்பங்களோடயே தொடர்பில்லையாம். கைதியெண்டால் பிறகு சொல்ல வேணுமே. அதிலயும் இப்ப இவையளைப் பற்றி ஆரும் கேட்கவோ கதைக்கவோ ஆளில்ல எண்ட நிலையில இருக்கேக்கை சொல்லவே வேணும்? எங்கட கணவரோட நாங்கள் சந்தோசமாக இருக்கிற காலம் ஒண்டு வரவேணும். எங்களுக்காகக் குரல் குடுக்கிறதுக்கு உண்மையா ஒருத்தரும் இல்ல. இதத்தான் அங்க - பூசாவில இருக்கிற ஆட்களும் சொல்லுகினம். பாவம் அங்க இருக்கிற பெடியள். இப்படியெல்லாம் நடக்கும் எண்டு தெரிஞ்சிருந்தா எதையாவது வித்தோ சுட்டோ நாட்டை விட்டுப் போயிருக்கலாம். இஞ்ச இருந்து படுகிற பாட்டைச் சொல்லேலாது.'

'சண்டை முடிஞ்சாலும் நாங்கள் அலைஞ்சு கொண்டிருக்கிறது முடியேல்ல. இவர் வந்திட்டால் நாங்கள் எப்படியோ முன்னேறிவிடுவம். ஆனால், இவரை எப்படி வெளியில எடுக்கிறது எண்டுதான் தெரியேல்ல. நாட்டுப்பிரச்சினை இப்போதைக்குத் தீரும் போல தெரியேல்ல. அநியாயமாக நாங்கள் தான் எங்கட வாழ்க்கையை இழந்து கொண்டிருக்கிறம். இவர் தெளிவாச் சொல்லிப் போட்டார், இனி எந்தப் பிரச்சினையிலையும் சிக்காமல் இருக்க வேணும் எண்டு. வெளியில வந்திட்டார் எண்டால் நாங்கள் எங்கட பாட்டைப் பாத்துக் கொண்டிருந்திடுவம்' அவரது முகத்தில் எதிர்பார்ப்புடனான நம்பிக்கைக் கீற்றுத் தென்பட்டது.

◄ என்.குருபரன் ►

ஒரு பக்கம் தன் பிள்ளையை பறி கொடுத்துவிட்டு எஞ்சிய மூன்று பிள்ளைகளுடனும் மறுபக்கம் தன் கணவன் சிறையில் வாடுவதையும் நினைத்து இந்தத் தாய் படும் வேதனை சொல்லில் அடங்காது. இது இவருக்கு மட்டுமல்ல, நடந்து முடிந்த யுத்தம் இன்று எத்தனையோ கணவன்மாரை தங்களிடமிருந்து நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் பிரித்து வைத்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது. பிள்ளைகளுக்காகவேனும் வாழவேண்டுமே என்ற நிலையில் வனஜாவைப் போன்றவர்களின் வாழ்வு ஏனோதானோவென்று போய்க் கொண்டிருக்கிறது. இவர்களது இந்த நிலைக்கு எப்போது விமோசனம் கிடைக்கும்?

வாசகர்களே...!

**'இருக்கிறம்' பற்றிய உங்கள் காத்திரமான விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம். வேறெதிலும் பிரசுரமாகாத உங்களுடைய சொந்தப் படைப்புக்களை எங்களுக்கு எழுதி அனுப்பலாம். அனுப்பவேண்டிய முகவரி,**

The Editor
'IRUKKIRAM'
# 03, Torington Avenue,
Colombo - 07

E-mail : irukiram@gmail.com
Skype : irukkiram
Tel : 011 3150836
Fax : 011 2585190
Website: www.irukkiram.tk

20.06.2011
காத்திருப்பு 01 | இருக்கை 12

# சாப விமோசனம்?

வணக்கம் என் உறவுகளே...!

கனத்த இதயங்களுடன் வாழும் எம் உறவுகளின் கண்ணீர், செந்நிலத்தில் மௌனமாய் கரைந்து கொண்டிருக்க, காற்றில் கலக்கும் அழுகுரல்கள் பல கொலைக் களங்களின் சாட்சிகளை மெல்ல மெல்ல விடுவிக்கத் தொடங்கியிருக்கின்றன.

சாட்சியத்தின் தூதுவர்களான பேனாக்களை நசுக்கி அவற்றை வேரோடு பிடுங்கி எறிந்தவர்களுக்கு சாட்சியமற்ற யுத்தத்தின் கோரமுகங்களை மறைக்கமுடியவில்லை. ஆனாலும் கொலைகளும் கொலைக்களங்களும் எமக்கொன்றும் புதிதல்லவே. வரலாற்றுப் பாதையில் பயணிக்கப்பட்ட எம்உறவுகளின் மூச்சுக்கள் மௌனிக்கப்பட்டாலும் அவர்களது வலிமிகுந்த பதிவுகளுக்கு காலம் ஒருநாள் பதில் சொல்லியே தீரும்.

சனல்-4 தொலைக்காட்சியில் கடந்தவாரம் வெளியிடப்பட்ட யுத்தக்குற்ற காணொளித் தொகுப்பு மனிதநேயமுள்ளவர்களின் கண்களை நனைத்திருக்கின்றது. பல வெளிநாட்டு அமைப்புகளும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் இக்குற்றங்களுக்கு முறையான விசாரணை செய்யப்படவேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். ஆனால், இக்காட்சிகள் அடிப்படை யற்றவையென அரசாங்கம் மறுத்திருக்கின்றது. எது எப்படியோ கொலைக்களத்தில் பலியிடப்பட்ட உறவுகள் இனி திரும்பிவரப் போவதுமில்லை, அவர்கள் வாயால் நடந்தவற்றைக் கூறப்போவதுமில்லை.

இன்னும் கடந்தகால நினைவுத்திரைகளில் மின்னி மறையும் அந்த மரணஓலக் காட்சிகளும் உடல் துண்டு பட்டறுந்து கிடக்கும் கோலங்களும் விழித்திரைகளைப் பனிக்கச் செய்கின்றன. சர்வதேச போர்ச்சட்டங்கள் மீறப்படும் எதிர்காலத்திலும்கூட ஐக்கிய நாடுகள் சபை நீதியாகச் செயற்படத் தவறுமானல், எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தப்போகின்றதென்பதை இக்கொலைக்களம் நன்றாகவே எடுத்துக் காட்டியிருக்கிறது.

1956களில் அம்பாறை இங்கினியாகலை கரும்பாலையில் பணிபுரிந்த தமிழ்த் தொழிலாளர்கள் 150க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டதிலிருந்து ஆரம்பமாகியது தமிழர்கள் மீதான கொலைத்தாண்டவம்.

அதற்குப்பின்னர் 1958 மே மாதத்தில் 300 தமிழர்கள் பலியாக்கப்பட்டனர். அதன் பின்னர் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டுக் கொலை, 1983 யூலைக் கலவரம், குமுதினிப் படகுக் கொலை, கிழக்கில் நடைபெற்ற கோரக் கொலைகள், செம்மணியில் 600க்கும் மேற்பட்டவர்களின் படுகொலை, ஆலயங்களில் நிகழ்த்தப்பட்ட விமானக் குண்டு வீச்சுக்கள், பாடசாலைகள், அநாதை இல்லங்கள், வைத்தியசாலைகள்மீது நடத்தப்பட்ட கோரமான விமானத் தாக்குதல்கள் என எங்களுடைய கொலைக் களங்கள் ஒவ்வொரு கால கட்டங்களிலும் பலவிதமான மாற்றங்களுடன் பரந்து விரிந்து இன்று முள்ளிவாய்காலில் உறவுகளின் கோரக் கொலையுடன் முடிந்து விட்டிருக்கிறது.


அழிக்கப்பட்ட வன்னி மண்ணில் தற்பொழுது துளிர் விடத்தொடங்கியிருக்கும் அபிவிருத்தி மீதமிருக்கின்ற உறவுகளைச் சென்றடையவேண்டும். மரணத்தின் வாயில் வரை சென்று திரும்பியிருக்கும் இந்த உறவுகளின் தொடர் கதை நல்லதொரு முடிவில் முற்றுப்பெற வேண்டும்.

கொலைக்களத்தின் இயக்குநர்களையும் சாட்சிகளையும் தேடுவது ஒருபக்கமிருக்க, இன்னுமின்னும் வதைமுகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் எமது உறவுகள் விடுவிக்கப்பட்டு அவர்களது குடும்பங்கள் ஒன்று சேரவேண்டும். மீளக்குடியேறியவர்களுக்கு பாரபட்சமில்லாது வசதிகள் கிடைக்கவேண்டும். மீதமிருக்கின்ற உறவுகளுக்கு போதிய வளங்களை அரசு பெற்றுக்கொடுப்பதன்மூலம் ஒருவேளை பாவவிமோசனத்தின் பலனைப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த இடத்தில் பகவத்கீதை ஞாபகத்திற்கு வருகின்றது. 'எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது', 'எது நடக்க இருக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கும்' இனி நடக்கவேண்டியவைகள் எவையென்றாலும் அவை 'நன்றாகவே' நடக்கவேண்டு மென்று உங்களுக்காகவும் எனக்காகவும் பகவானைப் பிரார்த்தித்தவாறு அடுத்த இதழுக்காக காத்திருக்கும்...

அருள் - சஞ்சீத்

ஆசிரியர்




# மீண்டும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள குடாநாட்டு மக்களின் பதிவு நடவடிக்கை

*யாழ். குடாநாட்டில் மீண்டும் பதிவு நடவடிக்கைகள் சர்ச்சைகளை ஏற்படுத்தி யுள்ளன. குடாநாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும், கடந்த சில நாட்களாக இராணுவம் மற்றும் சிவிலுடையில் செல்லும் பாதுகாப்புத் தரப்பினர் பொதுமக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த விடயம் யாழ். மக்களி டையே பெரும் பரபரப்பையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளதோடு பொதுமக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் சச்சரவுகளையும் தோற்றுவித்துள்ளது. அத்துமீறி வீடுகளுக்குள் புகுந்த படையினர் பொது மக்களிடம் குடும்ப அட்டைகளைத் தருமாறு வாங்கி பதிவுகளை மேற்கொண்டு வருவதோடு, அவர்களை படமும் எடுக்கின்றனராம். இதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கும் ஆளாகிவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.*

*இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் மக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபடவில்லை என யாழ் கட்டளைத் தளபதி மகிந்த ஹத்துருசிங்க கடந்தவாரம் தெரிவித்திருந்தார். எனினும் தற்போது யாழ். குடாவில் நடைபெற்றுவரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்காகவே பதிவு நடவடிக்கைகள் இடம் பெறுவதாகவும் அதற்காகவே புகைப்படம் எடுக்கப்படுவதாகவும் புது விளக்கமொன்றை அளித்துள்ளார்.*

*அதேவேளை, மக்கள் தொடர்பான தகவல்களை கணனி மயப்படுத்தவே பதிவு நடவடிக்கைகள் இடம்பெறுவதாக வட பிராந்தியத்திற்குப் பொறுப்பான பிரதி காவல்துறைமா அதிபர் காமினி சில்வா தெரிவித்திருக்கிறார்.*

*இது தொடர்பாக தனக்கு எந்தவிதமான அறிவித் தல்களும் வரவில்லையென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் இமல்டா சுகுமார் தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் முரணான கருத்துகள் தெரிவிக்கப்பட்டாலும் இதனால் பொதுமக்கள் அசௌகரியங்களுக்கு ஆளாகி வருகின்றனர். வீடுகளுக்குச் செல்லும் படையினர், புலிகள் எவராவது தடுப்பில் உள்ளார்களா? என பலவிதமான விசாரணைகளை மேற்கொள்வதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல்செய்த மனு மீதான விசாரணையில் பொதுமக்களைப் பதிவு செய்யும் நடவடிக்கை நிறுத்தப்பட்டு விட்டதாக சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு தெரிவித்திருந்தார். பதிவுகளை மேற்கொள்ளக்கூடாது என்று நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த பின்னர் படையினரும் பொலிஸாரும் மீண்டும் பதிவு வேலை செய்வது நீதிமன்ற உத்தரவை மீறுகின்ற நீதிமன்றத்தை அவமதிக்கின்ற செயலாகும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.*

*கடந்தகால கசப்பான அனுபவங்களிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டிய தருணத்தில் அவர்களை மேலும் சங்கடத்திற்குள்ளாக்குவது எவ்வகையில் நியாயப்படும். உண்மையில் இந்தப் பதிவு நடவடிக்கைகள் பாதுகாப்பு தரப்பின் ஆதரவில்லாமல் நடக்க வாய்ப்பில்லை.*

*குடா நாட்டில் முழுமையான சிவில் நிர்வாகம் திரும்பாத நிலையிலும் படையினரின் பிரசன்னம் காணப்படுகின்றது. மக்களுடைய நன்மதிப்பைப் பெறுவதே படையினருக்கு இனியிருக்கின்ற ஒரே வழியாகும். அதற்குரிய வழிகளை நாடாமல் இன்னுமின்னும் தமிழ் மக்களின் மனங்களை புண்ணாக்கும்படி நடந்து கொள்வது முறையற்றதே.*

இருக்கிறம்
ஒரு பொல்லாப்புமில்லை
வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.

3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk

ஆசிரியர் : அருளானந்தம் சஞ்சீத்
நிர்வாக ஆசிரியர் : சாந்தி சச்சிதானந்தம்
செய்தி ஆசிரியர்கள் : கலாவர்ஷ்னி கனகரட்ணம், தவநாதன் இரவிவர்மன்
நிருபர் குழு : தர்மராசா சிந்துஜா, கந்தலிங்கம் மாலா, சண்முகநாதன் பார்த்தீபன், அருமைத்துரை ஜசீகரன், ஜேசுதாசன் ஜீவராஜ்
கார்ட்டூன் : சஞ்சீத்
புகைப்படம் : யாத்ரா, தமிழியன்
பக்க வடிவமைப்பு : முஹம்மட் பிறவ்ஸ்

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.

மிஸ்டர். க்ரோ

# 'ஸ்ரீலங்காவின் படுகொலைக் களங்கள்'
# இனி எப்படி தப்பித்துக்கொள்வது?

அப்பப்பா! விளம்பரங்கள் என்ன, அறிவித்தல்கள் என்ன, வாரக்கணக்காய் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டவை யெல்லாம் சனல்-4வின் 'ஸ்ரீலங்காவின் படுகொலைக் களங்கள்' என்னும் நிகழ்ச்சியைப் பற்றித்தான். இணையத்தளங்களினூடாக மட்டுமல்லாமல், இங்கிலாந்தின் முன்னணிப் பத்திரிகைகளான த சண்டே ரைம்ஸ், த இன்டிபெண்டன்ட், மெயில்ஒன்சண்டே ஆகிய பத்திரிகைகளில் இரத்தக் கடல் பெருக்கெடுக்கும் கண்ணைப் பறிக்கும் படம் கொண்ட விளம்பரங்கள். (தமிழர்கள் மட்டுமல்லாது) வேற்று மொழியினரும் பார்க்கவேண்டிய படம் என்பதுதான் இந்த விளம்பரங்களெல்லாவற்றுக்கும் அடிநாதம். இதெல்லாம் பார்க்கும்போது ஏன் என்னும் கேள்விதான் நமக்கு முதலில் வரவேண்டும். இவ்வளவு அவலங்களும் நடக்கும்போது, நடந்தவையெல்லாம் அமெரிக்க செய்மதிப் படங்களினூடாக உலகத்திற்குத் தெரியவே நடந்தன. அப்போது ஒன்றும் செய்யாமல் இப்ப மட்டும் ஏன்?

ஒவ்வொரு சம்பவமும் நடக்கும்போது குறிப்பாக இராணுவத்தினரே சுற்றிச் சுற்றிப் படம் எடுத்தார்களே. யுத்தக் குற்றச்சாட்டு வழக்கிற்கு சாட்சியங்கள், தடயங்கள் தேவை என்று அப்போதே நினைத்து திட்டமிட்டுச் செய்த மாதிரி. அதிலும், சம்பந்தப்பட்ட இராணுவ வீரர் ஒருவரினதும் முகம் காட்டப்படவில்லை. ஏதோ யுத்தத்துக்குப் போகு முன்னரே யாரோ எல்லோரையும் அழைத்து நல்ல சக்தி வாய்ந்த படம் எடுக்கும் கையடக்கத் தொலைபேசிகளைக் கொடுத்து எப்படிப் படம் எடுக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்ததுபோல. இது எப்படி நடந்திருக்கலாம்? இதன் பின்னணி என்ன?

கடந்த ஜூன் 01ஆம் திகதி ஐரோப்பியப் பாராளுமன்றத்திலே இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பும் நோர்டிக் சூழல் பாதுகாப்புக் கட்சியும் இணைந்து ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிய மாநாடு ஒன்றை நடத்தின. இம்மாநாட்டின் முடிவில், 'தனிநாடு கோரிக்கை உட்பட, தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஆதரித்து' ஒரு பிரேரணையை வெளியிட்டன. தமிழர்களின் பாரம்பரிய தேசமான வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ள ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற்றப்படவேண்டும் என்றும், இடதுசாரிக் கட்சிகளின் கூட்டமைப்பின் பிரதிநிதித்துவமாக ஒரு உண்மை கண்டறியும் குழு இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும் என்றும் இந்த அறிக்கை கோரியது.

ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் மனித உரிமைகள் உபகுழுவின் தலைவரான ஹைடி ஹௌடாலாவும் பிரதான பேச்சாளராக இருந்த இம்மாநாட்டில், முன்னர் ஐரோப்பியப் பாராளுமன்றம் விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்தமை, சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அதிகார சமத்துவமின்மையை ஏற்படுத்த உதவிய தவறான நடவடிக்கை என்றும், இதனாலேயே இத்தனை அழிவுகளும் மனித உரிமை மீறல்களும் நிகழ்ந்தன என்றும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்தப் பிரேரணை, கடந்த காலங்களில் சில ஐரோப்பியப் பாராளுமன்ற உறுப்பு நாடுகள் இலங்கை அரசாங்கத்துக்கு ஆயுதங்களைக் கொடுத்துதவியமை விமர்சிக்கப்பட்டு, உடனடியாகவே சகல ஆயுத விநியோகங்களையும் வர்த்தகத் தொடர்புகளையும் நிறுத்தவேண்டும் என்கின்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது. இதுவரை காலத்தில், தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக விழிக்கப்பட்டு, அவர்களின் தனிநாட்டை நிலைநாட்டுவதற்கான உரிமையும் தமிழர்கள் அல்லாத இலங்கையர் அல்லாத ஒரு சபையில் அங்கீகரிக்கப்பட்டது இதுதான் முதல் தடவை எனலாம். இது ஏன் இப்போதுதான் நடக்க வேண்டும்?

சேர்பிய யுத்தத்தில் மிலோசவிச்சுக்கும் கிட்டத்தட்ட இப்படித்தான் நடந்தது. பொஸ்னியாவில் முஸ்லிம் மக்கள் படுகொலை செய்யப்படும் வரைக்கும் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்த உலகம் (அல்லது அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் என்று நீங்கள் வாசித்துக் கொள்ளலாம்), அவர் ரஷ்ய செல்வாக்கின் கீழ் தனது நாட்டைக் கொண்டுவர முற்பட்டபோதுதான் அவருக்கெதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்களை முடுக்கி விட்டு 'கழுவில்' ஏற்றியது. அக்குற்றச்சாட்டினை நிறுவுவதற்குரிய சகல ஆதாரங்களும் இப்போது நாம் பார்ப்பதுபோல அமெரிக்கா வசம் இருந்ததுதான் அழகு. ஈராக்கில் சதாமிற்கு எதிராக யுத்தம் புரிய வேண்டிய தேவை ஏற்பட்டபோது உடனே அங்கு வாழ்ந்த சிறுபான்மை குர்திஷ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளைப் பற்றி ஏறி விழுந்தார்கள். சதாம் அவர்களைக் குண்டு போட்டுத் தாக்கினார், இரசாயன ஆயுதங்கள் பாவித்தார் என்றெல்லாம் செய்திகள் வெளிவந்தன. தங்களது சுதந்திரத்துக்கானதொரு சன்மானமாய் அமெரிக்க இராணுவத்திற்கு உதவுவது என்று குர்திஷ் இன மக்களும் ஒத்துக்கொண்டனர். ஆனால் அமெரிக்கா ஈராக்கைக் கைப்பற்றிய பின்னர் இன்றுவரை நாம் குர்திஷ் மக்களைப் பற்றி ஒரு செய்தி தானும் வாசித்தறியவில்லை. அவர்கள் வசதியாக மறக்கப்பட்டு விட்டார்கள்.

மொத்தத்தில், மேற்குலக நாடுகள் இலங்கையின் ஆட்சியாளர்களைத் தூக்கில் ஏற்றுவது முடிவாகி விட்டது. இலங்கைக்கு சீனாவுடனான உறவுக்குக் கொடுக்கப்படும் விலை இது என்று கூறலாம். மெல்ல மெல்ல, நுண்ணிய பல பரிமாண ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் இது நடந்தேறுகின்றது.





'ஸ்ரீலங்காவின் படுகொலைக்களங்கள்' என்னும் இந்தப் படம் ஜெனீவா மனித உரிமைகள் சபையில் காட்டப்பட்டதும், இப்பொழுது வெளியுலகுக்கு இவ்வளவு விளம்பரங்களுடன் பறையடித்துக் காண்பிக்கப்படுவதும், ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கெதிராகப் பிரேரணை கொண்டுவரப்படும்பொழுது சீனாவினதும் ரஷ்யாவினதும் வாயை அடக்கத்தான் என்று உணர்ந்து கொள்ளலாம். எந்த அடிப்படையிலும் அவை இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாகப் பேசமுடியாதபடி செய்து விடவேண்டும். இது ஏற்கனவே நிகழ்ந்து விட்டது என்றுதான் கூற வேண்டும். ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையைப் பற்றி அரசாங்க அமைச்சரொருவர் இராஜதந்திரிகளுக்கு விளக்கம் அளிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பில் சீனா கலந்து கொள்ளவில்லை. வந்திருந்த ரஷ்யாவும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. பான் கீ மூனை அவமதித்தது போதும் என்று விரலையும் வேறு காட்டிவிட்டன.

சிலசமயம் இந்த யுத்தக் குற்றச்சாட்டானது சிங்கள சமூகத்தை 2000 வருடங்களுக்கு முன்பதான நிலப்பிரபுத்துவ ராஜதானி மனோநிலையிலிருந்து 21ஆம் நூற்றாண்டிற்குக் கொண்டு வருவதற்கு உதவலாம். எந்தவித அதிகாரப் பரவலாக்கல் கட்டமைப்பையும் ஏற்படுத்த முடியாது, இன்றும் துட்டகைமுனுவைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பவர்களைப் பற்றி வேறு எப்படித்தான் சொல்லுவது?

இன்றைய யுத்தங்களில் இவ்வாறான அத்துமீறல்கள் பல நடந்திருக்கின்றன. அதுவும் அமெரிக்காதான் அதில் முன்னணி வகித்திருக்கின்றது. ஆனால், அதன் ஆட்சியாளர்கள் இந்தச் செய்திகள் வெளிவந்த உடனேயே சில குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகளைப் பகடைக்காய்களாக்கி அவர்களைத் தண்டிப்பதுடன் கதையை சுமூகமாக முடித்துக்கொண்டனர். மனித உரிமைகள் குறித்த பண்பாடு வேரூன்றிய இக்காலத்தில் ஒரு யுத்தம் நிகழும்பொழுது களத்தில் நடப்பனவற்றுக்கும் தமக்கும் போதுமான தூரத்தைப் பேணி வரவேண்டியது ஆட்சியாளர்களுக்கு அவசியமாகும். அப்போதுதான் பிழைகளை யார் தலையிலாவது கட்டிவிட்டுத் தப்பலாம். ஆனால், இங்கோ நவீனகால துட்டகைமுனு என்பது மட்டுமல்லாமல், துட்டகைமுனுவின் சந்ததி வழிவந்தவர் எமது ஜனாதிபதி என்று புதிய சரித்திரமும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமல்லாது எங்கும் சிவில் நிர்வாகத்தையும் இராணுவமயப்படுத்தி தெற்காசியாவின் இன்னொரு பாகிஸ்தான் என்கின்ற பெயரையும் தட்டிக் கொண்டு விட்டோம். இனி எப்படித் தப்பிக் கொள்வது?

இந்த சம்பவக் கோர்வைக்குள் தமிழ் மக்களுக்குத்தான் மிகப்பெரிய படிப்பினை இருக்கின்றது. மகிந்த ராஜபக்ஷவை வீழ்த்தும்வரையில்தான் இந்த அனுதாப அலையும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையில் அக்கறையும் இருக்கப்போகின்றது என்பதைத் தெளிவாக ஞாபகம் வைத்திருத்தல் வேண்டும். அதற்குப் பிறகு குர்திஷ் மக்களுக்கு நேர்ந்த கதிதான் நமக்கும்.

எனவே அதற்கு முன்னாலேயே தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளுக்கான தீர்வினைப் பெற்றுக்கொள்ளும் மூலோபாயத்தினை அவர்கள் கண்டு பிடிக்க வேண்டும். இந்த நோக்கத்திற்கு இந்திய அரசாங்கம் எப்படியும் எதிராகவே செயற்படும் என்பதையும் முற்கூட்டியே உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ் நாட்டு அரசியல் நிலைமைகளையும் இலங்கையின் தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு சாதகமான அரசியல் சக்திகளை துணைக்கு அழைத்துக் கொள்வதன் மூலமும்தான் இதனைச் செய்யலாம். அதற்குரிய ஆற்றலுடன் இருக்கின்றனரா தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள்?

# மறைந்துபோகுமா மலையக கல்வி?

நேரடி ரிப்போர்ட்


கண்ணன்


சுசிகுமார்


ஆனந்தராஜ்
பரமேஷ்வரன்

'என்ட அம்மா, என்ட கன்ட சிய்யட பஹுய்' என்ற குரலில் கூவிக் கொண்டிருந்தார் கண்ணன். புறக் கோட்டை ஓல்கொட் மாவத்தையில் பழங்களை விற்பனை செய்வதுதான் இவரது தொழில்.

இப்படி எத்தனையோ மலையக கண்ணன்கள், ஏதோ ஒரு காரணத்திற்காக தங்களது கல்வியைத் தொடர முடியாமல் கொழும்பு மற்றும் புறநகர் பகுதிகளுக்கு சென்று கிடைக்கும் தொழிலைச் செய்து காலத்தை ஓட்டி வருகின்றனர்.

காலை வேளையில் வியாபாரம் சற்று சூடு பிடித்துக் காணப்பட்டது. அந்தப் பரபரப்பிலும் எங்களோடு பேசத் தவறவில்லை கண்ணன். எம்மோடு பேசிக்கொண்டே பழம் வாங்க வந்தவர்களையும் இவர் கவனித்தமை எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

23 வயதான கண்ணனின் சொந்த இடம் புசல்லாவை. 'கடந்த பல வருஷங்களாக கொழும்பிலதான் இருக்கன், எங்க குடும்பத்தில ஆறு பேர். படிப்பில் ஆர்வம் இருக்கல. கொழும்புக்கு வந்துட்டேன். முதல்ல டெயிலர் சொப்லதான் வேல செஞ்சேன். அங்க ஒழுங்கா சம்பளம் தரல. பிறகு ஒரு கடையில வேல செஞ்சன். அங்கும் சரிவரல. அதுக்கு அப்புறம் தான் இந்த வேலக்கி வந்தன். ரொம்ப பிடிச்சிருக்கு, எங்க பொஸ் சாப்பாடும் தந்து நல்ல சம்பளமும் தாறார். வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் வீட்டுக்குப் போவேன்' என கூறிக்கொண்டே தன் வியாபாரத்தில் ஈடுபட்டார்

படிப்பை இப்படி பாதியில் கைவிட்டுவிட்டு வந்து தொழிலில் ஈடுபடும் கண்ணன் அதற்காக தான் கூறும் காரணத்தை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. கல்வியின் மீது அக்கறை காட்டாமல் பாதியில் வந்து தொழில்செய்யும் கண்ணனை நினைத்து எனக்கு ஒரு பக்கம் கோபம். அவரைப் பற்றி சிந்தித்துக்கொண்டே நடக்கும்போது மதிய வெயில் மண்டையைப் பிளந்தது.

அதனை சற்றும் பொருட்படுத்தாமல் தனது வேலையில் மும்முரமாக இருந் தார் 24 வயதுடைய பரமேஸ்வரன். பழ விற்பனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இவர் எம்மை கண்டதும் சிரித்துக் கொண்டே கதைக்கத் தொடங்கினார்.

'நான் நுவரெலியா, எல்மா, சீட்டனைச் சேர்ந்தவன், கொழும்புக்கு வந்து ஒன்பது வருஷமாகுது. முதல்ல சப்பாத்து கடையிலதான் வேல செஞ்சேன், பிறகு தான் இங்க வந்தேன். முதலாளி நல்லவர், ஒரு நாளைக்கு 850 ரூபா சம்பளம் தாறார். சாப்பாடும் தாறார் என்றவர் தனக்கு இவ்வேலை பிடித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

க.பொ.த. சாதாரண தரம்வரை கற்ற இவரும் தொடர்ந்து படிக்க விருப்பமின்றி வேலைக்கு வந்திருக் கின்றார். தொடர்ந்து இந்த வேலையை செய்வதுதான் அவரது உத்தேசமாம்.

அப்படியே ஆமர் வீதி வழியே செல்லும் போது ஆனந்தராஜை சந்தித்தேன். இவரது சொந்த இடம் நுவரெலியா கந்தப்பளை. 25 வயதே ஆகும் ஆனந்தராஜ் பல தொழில்களை செய்திருக்கிறார்.

'நான் ஓ.எல். முடிச்சிட்டு நுவரெலியாவில ஒரு ரெஸ்டூரண்டில் வேலை செய்தேன். அது பிடிக்கல, பிறகு மெடிக்கல் ரெப்பா வேல. அதுவும் சரிவரல, ஊர்ல போய் விவசாயம் செய்தேன். அதுலயும் திருப்தியில்ல. அதுக்குப் பிறகு எல்லாத்தையும் விட்டுட்டு கொழும்புக்கு வந்தேன். இங்க வந்து ஒரு பாமசியில வேல செஞ்சேன். அப்புறம் யாழ்ப்பாணம் போய் உடுப்பு பிசினஸ் செஞ்சேன். இப்டி பல தொழில்கள் செய்தும் திருப்தி கிடைக்கல. லாஸ்ட்டா இப்ப ஸ்டோர் கீப்பரா இருக்கன். இதுவும் கொஞ்ச நாளுக்குத் தான்' என விட்டேத்தியாக பதில் தந்தார் ஆனந்தராஜ். எந்த தொழிலையும் நிரந்தரமாக செய்யாத இவர் தற்போது 'மாஸ் மீடியா' கற்கை நெறியில் 'மாஸ்டர் டிப்ளோமா' செய்து கொண்டிருப்பதாக குறிப்பிடுகிறார்.

தன் வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த சுசிகுமாரை பொரளை யில் சந்தித்தேன். 25 வயதான இவர் கட்டிட நிர்மாண நிறுவனமொன்றில் தொழில் செய்கிறார்.

'நான் கடந்த 10 வருஷமா கொழும்பிலதான் இருக்கன். அம்மா, அப்பா, தம்பி, தங்கச்சி என ஐந்து பேர் கொண்ட குடும்பம். ஓ.எல். முடிச்ச கையோட இங்க வந்துட்டேன். முதல்ல ஒரு சுப்பர் மார்கட்ல தான் வேல செஞ்சேன். அதுல என்னை வளர்த்துக்கொள்ற மாதிரி எதுவுமே நடக்கல. பிறகுதான் இங்க வந்து சேர்ந்தன். இங்க வந்ததுக்கு அப்புறம் இந்த வேல எனக்கு பிடிச்சிருக்கு. கட்டிட நிர்மாணத்துல பல விடயங்களை நான் வேல செஞ்சுகிட்டே படிச்சேன். இப்ப நான் ஒரு பாதி எஞ்சினியர்' என சிரித்துக்கொண்டே கூறுகிறார்.

வேலை நிமித்தம் கொழும்புக்கு வந்து தம் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு படிப்பிலும் அக்கறை செலுத்தும் சுசி போன்றவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால், இவர்களில் அதிகமானோர் கல்வியைத் தூக்கி எறிந்துவிட்டு எதிர்காலத்தை பற்றி சற்றும் சிந்திக் காமல் கிடைத்த தொழில்களை செய்துவருகின்றனர். தொழில் செய்வது குற்றமில்லை. ஆனால், இவர்களின் தொழில் நிரந்தரமானதா என்பதுதான் சந்தேகம்.

மலையகத்தில் வாழ்கின்ற ஒவ்வொரு குடும்பங்களுக்கும் ஒவ்வொரு பிரச்சனை இருக்கிறது. அவர்களில் பெரும்பாலானோர் தொடர்ந்து கல்வியைத் தொடர முடியாமல் வேலைத்தேடி தலைநகருக்கு படையெடுக்கிறார்கள். தலைநகரில் ஏதோ தனது குடும்பத்தை ஒரு நிலைக்கு கொண்டு செல்வதற்கு போதுமான சம்பளத்தைப் பெற்றுக்கொள்கின்ற எந்தத்தொழிலானாலும் சரி அதில் தம்மை ஈடுபடுத்தி அதைச் செய்கிறார் கள். உணவகங்கள், பலசரக்குக் கடை கள், நகைக் கடைகள் என்பவற்றில் தம்மை இணைத்துக் கொண்டு தமது குடும்ப வறுமையைப் போக்க முயற்சிக் கின்றார்கள். இதனால் கல்வியை இவர்களின் வறுமை தின்று விடுகிறது.


◄ ச. பார்தீபன் ►

மலையக தமிழ் இளைஞர்கள் கல்வியில் நாட்டம் காட்டினால்தான் வாழ்க்கையில் கரை சேர முடியும் என பலரும் வலியுறுத்தி வரும் நிலையில் அதில் அக்கறை கொள்ளும் இளைஞர்களின் தொகை குறைவாகத் தான் இருக்கிறது.

எதிர்கால சவால்களை வெற்றி கொள்ள மலையக இளைஞர் யுவதிகளின் கையிலிருக்கும் ஒரே ஆயுதம் கல்வி மட்டுமே. காலம் முழுவதும் அவர்கள் ஏனையோருக்கு அடிமைகளாக வாழக்கூடாது. இதனை யாரும் அவர்களுக்கு புரியவைக்க முடியாது. அதன் தாற்பரியத்தை உணர்ந்து அவர்கள்தான் கற்பதற்கு முன்வரவேண்டும். எதிர்காலத்தில் கல்வி அறிவுள்ள மலையக இளைஞர் சமுதாயமொன்றை உருவாக்க எத்தனைபேர் முன்வருவார்கள்?

## ஏக்கம்

பாட்டி உனை
காட்டி!
சோறுட்டியதும்,
அம்மா உனைக் காட்டி
உறங்க வைத்ததும்
பாடப் புத்தகத்தை
படிப்பதை விட்டுவிட்டு
நெஞ்சோடு அதை
உறங்கச் சொல்லிவிட்டு
உனையே பார்த்திருந்த
அந்த அழகான
நாட்களும்
அமிர்தமான
எங்கள் வாழ்க்கையும்
இப்போது எங்கே!
என்று
ஏளனமாய் கேட்காதே
நிலவே!



- பா. ரிசாந்தன், ஹொப்டன்

# வாழ்க்கை வாழ்வதற்கே!



வி.உமையாள்

உலகத்தை திருத்த நினைப்பது நாய் வாலை நிமிர்த்த நினைப்பது போன்றது. அதுவல்ல எங்களது நோக்கம். எங்களை வழி நடத்திக் கொள்வதும், எங்களை முன்னேற்றிக் கொள்வதும்தான் எங்களது நோக்கம். எங்களை நாம் மாற்றியமைக்கும்போது எங்களைச் சுற்றியுள்ள குடும்பம், சமூகம், உலகம் என்பன மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும்' என்கிறார் 'வேதாந்தா அக்கடமி' இலங்கைக் கிளையின் நிறுவுனர் வி. உமையாள்.

மனதை ஆட்கொள்ளும் அமைதியும் எம்மை சற்று சாந்தப்படுத்தியது. வேதாந்தம் பற்றி அவரிடம் பேச்சுக் கொடுத்தபோது அமைதியான ஒரு சிரிப்புடன் வேதாந்தம் என்பது வாழ்க்கை பற்றிய உண்மைகளை சொல்லித் தரும் ஒரு பாடமாகும். இதனை இன, மத, மொழி, நாடு வேறுபாடின்றி யாரும் கற்கலாம். வாழ்க்கையில் சரியான தெரிவினை (Choice of Action) மேற்கொள்வதற்கான வழிமுறையினை சொல்லித் தருவதுதான் வேதாந்த தத்துவம். இதில் மனவளக்கலை முக்கியமானது. மனவளக் கலை என்பது சுய முகாமைத்துவம் (Self Management) பொதுவாக நாம் மனது சொல்வதைத்தான் கேட்போம். உதார ணமாக காலையில் கடிகாரத்தில் அலாரம் அடிக்கும். ஆனாலும் மனதின் விருப்பப்படி இன்னும் கொஞ்சம் தூங்குவோம். இந் நிலையில் மனம் சொன்னதை கேட்பதால் பாரிய பின் விளைவுகளை நாம் சந்திக்க வேண்டி ஏற்படும். ஆக, புத்தியின் பால் நடக்க வேண்டும். உடல், மனம், புத்தி என்ற மூன்றினதும் பிரதிபலிப்புதான் மனிதன். உடலை நன்றாக வைத்திருப்பதற்கு யோகாச னம் உதவும். மனதை ஒரு நிலையில் வைப்பதற்கு பக்தி தேவைப்படுகிறது. புத்தியை சரியாக வளர்த்து சரியான முடிவுகளை எடுப்பதற்குத் தான் இந்த வேதாந்த தத்துவம் உதவுகிறது. உடலைக் கட்டுப்படுத்துவது மனமும் புத்தியும். மனதைக் கட்டுப்படுத்துவது புத்தி. ஆக எல்லாவற்றுக்கும் மேலானதுதான் புத்தி. இதனை விருத்தி செய்யும் போது மனம், உடல் இரண்டையும் கட்டுப்படுத்தி வழிநடத்தலாம்' என்று நீண்ட ஒரு விளக்கத் தைத் தந்தார்.


பிரகலாதன்

கொழும்பு இந்துக் கல்லூரியில் படித்துக்கொண்டி ருக்கும் 13 வயது நிரம்பிய பிரகலாதன் என்ற மாணவன் கடந்த ஒரு வருடகாலமாக இந்த பாடநெறியினை தொடர்ந்து கொண்டிருக்கிறார். அவர் தன் அனுபவங் களை இவ்வாறு பகிர்ந்துகொண்டார். 'இந்த பாட நெறியைப் படிப்பதால் புதிய விடயங்களை தெரிந்து கொள்வதற்கான வாய்ப்பிருக்கிறது. எம்மை நாமே வழிநடத்திக் கொள்வதற்கான அறிவு கிடைக்கிறது. ஒருவரை திருத்த முற்படும்முன் எம்மை நாம் முதலில் திருத்திக்கொள்ள வேண்டும். என்ற தத்துவத்தை நான் இங்கு உணர்ந்து கொண்டேன்' என்று இந்த வயதிலும் பண்பட்டு கதைக்கிறான் அந்தச் சிறுவன்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தெளிவாக யோசித்து சரியான முடிவுகளை எடுக்கும் பட்சத் தில்தான் எந்தச் செயலும் நூறு வீதம் நன்மை பயக்கும். இந்நிலையில் மனதின் விருப்பங்க ளுக்கும் எண்ணங்களுக்கும் அடிமையாகாமல் புத்தியின்படி நடக்க நாம் பழக வேண்டும். இதைத்தான் வேதாந்த தத்துவமும் எமக்கு சொல்கிறது.



## வேதாந்த அக்கடமியில் ஒரு சந்திப்பு

இதன் தலைமையகம் இந்தியாவின் பூனேயில் உள்ளது. வாழ்க்கை பற்றிய உண்மைகளை தெளிவு படுத்தும் இந்நிலையம் கடந்த ஒன்றரை வருடகாலமாக இலங்கையில் தடம்பதித்துள்ளது. இவர்களுடைய நோக்கம் மற்றும் செயற்பாடுகள் பற்றி அறிந்துவருவ தற்காக வெள்ளவத்தை ருத்ரா மாவத்தையில் இயங்கும் அவர்களது நிலையத்துக்கு சென்றிருந்தோம்.

இதன் நிறுவுநர் உமையாள் எம்மை இன்முகத்து டன் வரவேற்று உபசரித்தார். இலங்கையைச் சேர்ந்த இவர் மூன்று வருடங்கள் இந்தியாவில் தங்கியிருந்து வேதாந்தத்தைக் கற்று, பிறகு அங்கேயே தங்கியிருந்து தன்னை முழுமையாக தயார்படுத்தியிருக்கிறார். தான் கற்ற விடயங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும் நோக்கில் இப்போது வகுப்புகளை நடாத்தி வருகின்றார்.

சுற்றுச் சூழலும் அந்த மண்டபத்துள் நிலவிய ஒருவித அவருடைய மாணவர்கள் அமைதியே உருவாக அமர்ந்திருந்தனர். என்ன ஆச்சரியம் 13 வயது முதல் 60 வயது வரையானவர்கள் எவ்வித பேதமுமின்றி இவரிடம் மாணவர்களாக இருந்தனர்.

'வாழ்க்கையில் வெற்றி தோல்வியை சமமாக பார்க்கும் மனப்பாங்கை வளர்த்துக் கொண்டது இந்த வகுப்பிற்கு வந்த பிறகுதான். பெறுமதியான பகவத் கீதையை பற்றித் தெரிந்து கொள்ளக் கிடைத்தது உண்மையிலேயே பெரிய பாக்கியம். வாழ்க்கையில் தெரிவு என்பது முக்கியம். இளஞ் சமுதாயத்தினர்தான் இந்த விடயத்தில் சிக்கிக் கொள்கிறார்கள். இந்த பாடநெறியானது அவர்களுக்கு மிகவும் பொருத்த மானதாக அமையும். இங்கு வந்த பிறகுதான் எந்த ஒரு முடிவையும் தெளிவாக எடுக்கக்கூடிய மனத் தைரியம் கிடைத்திருக்கிறது' என்று பக்குவத்துடன் கதைத்தார் திருமதி அருமைநாதன்.

நாம் வாழும் இந்த வாழ்க்கையானது குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுபடுத்தப்பட்டதாகும். அந்த வாழ்க் கையை மற்றவர்களுக்கும் நன்மை தரக்கூடியதாகவும், வழிகாட்டக்கூடியதாகவும் அமைத்துக் கொள்வது சிறந்ததல்லவா. அதைத் தான் வேதாந்த அக்கடமியும் அதன் நிறுவுநர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். முடிந்தவரை நாமும் இவ்வாறான போதனைகளை ஏற்று அதன்படி ஒழுகி எம்மை சீர்படுத்திக்கொள்ளலாம்.

**சந்திப்பு: த.சிந்துஜா**
**படங்கள்: பார்தீபன்**

# சட்டம் பேசுகிறது

## கேள்வி–பதில்

**– செவே. விவேகானந்தன்**

**கேள்வி:** எனது தகப்பனார் ஆறுமுகம்பிள்ளை, 28 செப்டெம்பர் 1987 இல் காலமானார். அவருக்கு ஐந்து பிள்ளைகள். நான் ஐவரில் ஒருவர். எனது தந்தைக்கு திருகோணமலை உப்புவெளியில் காணி இருக்கின்றது. எனது பங்கை எனது உடன்பிறந்தவர்கள் தரமறுக்கின் றனர். நான் இலங்கையை விட்டுச்சென்று லண்டனில் வசிக்கின்றேன். எனது மூத்த சகோதரன் எனது பங்கைத் தராதது பிழையென்று கூறுகின்றார். மற்றவர்க ளுடன் கதைத்து எனது பங்கை பெற்றுத் தரலாமென்று கூறுகின்றார். மற்றவர்கள் தருவதற்கு மறுக்கின்றார்கள். அவர்களும் வெளிநாட்டில்தான் இருக்கின்றார்கள். நான் இலங்கைக்குப் போவதைத் தடை செய்திருக்கின்றார்கள். பயமுறுத்துகின்றார்கள். சட்டத்தரணிகளை ஒழுங்கு செய்தாலும் அவர்களுக்கும் தொந்தரவு கொடுத்து என் நிமித்தம் பேசவிடாது தடை செய்கின்றார்கள். எனது பங்குச் சொத்தை எப்படிப் பெறமுடியும்?

**பதில்:** உங்களது தந்தையாரின் சொத்தில் உங்க ளுக்கும் உரிமை உண்டு. அந்த உரிமையை யாரும் தடைசெய்ய முடியாது. உங்களுடைய உடன் பிறப்புக்கள் எந்தெந்த நாடுகளில் இருக்கின்றார்கள், அவர்கள் எவ்வாறு உங்களது உரிமையை மறுக்கின்றார்கள் என்ற விபரம் போதாது. நீங்கள் வெளிநாட்டிற்கு எப்பொழுது போனீர்கள், இலங்கைக்கு எப்பொழுதாவது வந்திருக்கின்றீர்களா, தந்தையார் திருகோணமலையிலா மரணித்தார், நீங்கள் அப்பொழுது இலங்கைக்கு வந்தீர்களா போன்ற விபரங்கள் வேண்டும். அத்தோடு தந்தையார் மரணித்த பொழுது இந்த ஒரு சொத்தை மட்டும்தான் விட்டுவிட்டு இறந்தாரா, அவருடைய சொத்தின் பெறுமதி என்ன, ஏன் இவ்வளவு காலமும் பூதல் வழக்கு (Testamentary Action) தாக்கல் செய்யவில்லை என்பவற்றிற்கு விளக்கம் வேண்டும். சில சட்டப்பிரச்சினைகள் இருக்கின்ற படியால் தகுதிவாய்ந்த சட்டத்தரணியின் உதவியை நீங்கள் நாடவேண்டும்.

நீங்கள் இலங்கைக்கு வருவதை யாரும் தடைசெய்ய முடியாது. நீங்கள் ஏதும் குற்றம் செய்திருந்தால்தான் அந்தக் குற்றத்தைச் சாட்டி எவரும் பயமுறுத்த முடியும். அவ்வாறு தவறேதும் இழைக்கப்பட்டிருந்தால் அத்தவறின் தன்மை பற்றிக் கூறினால்தான் அதற்குரிய சட்ட ஆலோ சனை வழங்கமுடியும். உங்களது உடன்பிறப்புக்கள் வேண்டுமென்றே தவறுசெய்து, உங்களுக்குரிய சொத்தை அபகரித்தால் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம்.

எத்தன்மையானவழக்குகள்தாக்கல்செய்யவேண்டும், வழக்குகள் தாக்கல்செய்ய வேண்டுமா அல்லது வேண் டாமா என்பவற்றை நீங்கள் சட்டத்தரணியுடன் ஆலோ சிக்க வேண்டும். சரியான சட்டமுறையில் உங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளை நீங்கள் அணுக வேண்டும். நீங்கள் வெற்றி பெறுவீர்கள். துணிவே துணை. எவ்வித பயமுறுத்தலும் உங்களுக்குத் தீங்கு செய்யமுடியாது. அநீதிக்கெதிராக வழக்காடத் துணியாத சட்டத்தரணியை விட்டு துணிவுகொண்ட சட்டத்தரணியை நாடுங்கள்.

# ‘புனித நகர்’ என்ற பெயரில் அழிவடையும் அட்டாளைச்சேனை ‘ஹிரா’ கிராமம்

நேரடி ரிப்போர்ட்

அக்கரைப்பற்று - கல்முனை நெடுஞ்சாலையில் பாலமுனைக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் முள்ளிக்குளத்து மலைவீதி வழியாக பிரதான வீதியிலிருந்து சுமார் 4 கிலோமீற்றர் சென்றால், குடியேற்றக் கிராமமான ‘ஹிரா’ நகரை அடையலாம். போகும் வழியெங்கும் பரந்துபட்ட நெற்காணிகள், வழிந்தோடும் நீரோடைகள் போன்ற வாய்க்கால்கள், குன்றும் குழியுமாகக் காணப்படுகின்ற வீதிகள், இக்கிராமத்தை அடைய முன்னே தெளிவாகத் தெரிகின்ற அழகிய முள்ளிக்குளத்து மலை என இயற்கை அழகின் மத்தியில் இக்கிராமம் அமைந்துள்ளது. ஒரு பள்ளிவாசல், ஏழெட்டு கிடுகுக் குடிசைகள், ஓரிரு தகட்டு வீடுகள் என ஆங்காங்கே தெரிய மக்கள் வயலில் வேலை செய்துகொண்டிருக்கின்ற ஒரு காலைப்பொழுதிலே நாம் அவ்விடத்துக்குச் சென்றோம்.

‘நான் ஏழு வயசிலருந்து வாப்பாவோட இங்கவந்து பயிர்செஞ்சி குடியிருந்திருக்கன். எனக்கிப்ப 55 வயசாச்சி 1957ஆம் ஆண்டில் வெள்ளத்தில இந்தப் பாலமுனை கிராம மக்கள் வந்து தங்கின எடமிது. எனக்கு நல்லா ஞாபகமிருக்கு. அந்தக்காலத்தில இருந்தே இத வெட்டி வெளிசாக்கி பயிர்பச்சயச் செஞ்சி பக்கத்து கிராமத்து மக்களுக்கும் வழங்கின இந்தப் பிரதேசத்தில வாழ்ந்த மக்கள் இப்ப அங்கயும் இங்கயும் திரியிறாங்க. தண்ணியில்ல, கரண்டில்ல, வளச்சி வயல் பிரதேசமாக இருக்கிறத்தால பாம்புக்கடி ஒருபக்கம், பள்ளக்காட்டுல இருந்துவாற யானையால தொல்ல. செல்லாத அமைச்சருகளுமில்ல, போகாத தலைவர்களுமில்ல’ என்று எம்மிடம் குறைபட்டுக் கொண்டார் பாலமுனை ‘ஹிரா’ குடியேற்ற விவசாயக் குழுவைச் சேர்ந்த வெள்ளக்குட்டி.

இங்குள்ள மக்கள் இரவில் தங்குவதற்கு பயந்து பாலமுனைக்கு சென்றுவிடுவார்களாம். இரவுவேளைகளில் வயல்களையும் தோட்டங்களையும் சேதப்படுத்திக் கொண்டிருந்த யானைகள் தற்போது பகலிலும் தங்களுடைய வேலைகளைக்காட்ட ஆரம்பித்து விட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

‘வயல் செய்ய வாய்க்காலூடாக தண்ணிய எடுப்பம் எண்டு பார்த்தா அதுக்கு யாரும் முன்வாரல. இந்த வாய்க்காலக்கூட சரியான மொறயில வெட்டி தண்ணியக் கொண்டுவாறத்துக்கு பட்ட கஷ்டத்த வார்த்தையால செல்லேலா. பிளேண்டி வாங்கிக் குடிக்கக்கூட வசதியில்லாத நிலையிலதான் நாங்க மிகவும் கஷ்டப்படுறம். இதன் அரசியல் வாதிகளோ, உயரதிகாரிகளோ சரியான முறையில கவனிச்சு குடியிருக்க வீட்டயும் நீர்வசதியையும் கரண்டயும் எடுத்துத்தந்து இந்த மக்கள்ட வாழ்க்கையில ஒளியேத்தணும்’ என்கிறார் இந்த வெள்ளக்குட்டி.

கடந்த 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு சுமார் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிசைகளை அமைத்து வாழ்ந்தார்கள். குடிசையைச் சுற்றிவர பயிர்களையும் வேளாண்மையையும் செய்துகொண்டு இருந்தபோது பிரச்சினை காரணமாக இவர்கள் வெளியேறவேண்டி ஏற்பட்டது. இன்று அவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளச் சின்னங்களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பாழடைந்த கிணறுகள், பெரும் தென்னந்தோட்டமாக இருந்த இடங்களில் ஒருசில மரங்களே எஞ்சியிருந்தன. இங்கு வாழ்ந்தவர்கள் காணி எல்லைக்காக போடப்பட்ட மரக்கட்டைகளையும் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலங்களையும் கண்ணுற்றோம். இப்படிப்பட்ட ஒரு கிராமத்தை இன்று ஒருசிலர் முன்னின்று மிகவும் உறுதியுடன் போராடி முழுக்கிராம மக்களையும் இங்கு குடியேற்ற தம்மாலான முயற்சிகளை செய்துகொண்டு வருவது மகிழ்ச்சிக்குரியது.

இந்த முள்ளிக்குளத்து மலை கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், கல்முனை போன்ற பிரதேச மக்களது வீட்டுக்குத் தேவையான அத்திவாரக் கற்களை தந்துகொண்டிருந்தது. அதன்பிறகு இதனை உடைக்கக்கூடாது என்று புதை பொருள் மற்றும் புராதன காப்பகத்தார் தடை செய்திருக்கிறார்களாம். அத்துடன் இந்த மலையைச் சுற்றிவர பயிர்ச்செய்கைக்கான நிலங்களுக்குள்ளும் தனியார்களின் காணிகளுக்குள்ளும் எல்லைக் கட்டைகளும் போடப்பட்டு ‘புனித பிரதேசம்’ என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இப்பொழுது யாரும் அவ்விடத்திற்குச் செல்ல முடியாதவாறு கண்காணிக்கப்பட்டு வருகின்றனராம். இது இவர்களது குடியேற்றம் தடைப்பட்டுள்ளமைக்கு ஒரு காரணமாக இருக்கலாம். ஒருபுறம், இம்மலைக்கு அண்மையில் தீகவாபி பிரதேசம், அஷ்ரப் நகரம், பள்ளக்காட்டுப் பிரதேசம் போன்றனவும் காணப்படுவதால் பெரும்பான்மைச் சமூகத்தின் பார்வைபட்டு முற்றாக இக்கிராமம் அழிக்கப்பட்டுவிடுமா என்ற கேள்வி




குடியிருப்பாளர் ஒருவரின் குடிசை



வெள்ளக் குட்டி ஜுனைதீன் கபூர் ஜாபிர்



கட்டப்பட்டுள்ள பள்ளிவாசல்



செழித்து வளர்ந்துள்ள விவசாயம்

எழுந்துள்ள நிலையில் எப்படியும் எங்களது வாழ்வோ, சாவோ இதிலிருந்துதான் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்ற விடாப்பிடியான நிலையில் ஜுனைதீன் தனது வீட்டை அங்கு அமைத்து கடந்த பல ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வருகின்றார்.

இவரிடம் இக்கிராமத்தின் தேவைகள், கடந்தகால வரலாற்றுப் பின்னணி போன்றவற்றைப்பற்றி வினவிய போது; ‘இக்கிராமத்தைச் சுற்றிவர வயல் பிரதேசமே காணப்படுகிறது. வளலவாய்குளத்துக்கண்டம், மலையடிக் கண்டம், பெரிய கண்டம், ஏழடப்பு போன்றவற்றிலதான் நாங்க வாழ்ற ஹிரா குடியேற்றக் கிராமமும் காணப்படுது. இது பெரிய கண்டத்தைச் சேர்ந்ததாக உள்ளது. சுமார் 800 ஏக்கர் காணியில் மாரிப்போகம் நெற்செஞ்சிக்கிட்டு வாறாங்க. அத்தோட சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட ஏக்கர் காணி குடியிருக்கிற நிலமாக காணப்படுகிறது. தற்போது சுமார் 25க்கும் மேற்பட்டவர்கள் குடியிருக்காங்க. இவங்க முழுமையாக அனைவரும் வந்திருக்க பயமா இருக்கெண்டு சொல்லிப்புட்டு இரவில பக்கத்துல இருக்கிற பாலமுனைக்கு போயிட்டு வாறாங்க.

கடந்த 21வருடங்களுக்கு மேலாக இப்படியேதான் நாங்க சீவிச்சிக்கிட்டு வாறம். நான் என்ன வந்தாலும் இங்கதான் இருக்கிற எண்டு நினைச்சி ஆட்டையும் மாட்டையும் வளர்த்திக்கிட்டு பயிர்பச்சய செஞ்சிக்கிட்டு உயிரைத் தியாகஞ்செஞ்சிக்கிட்டு ஏழெட்டு வருசத்திக்கு மேல இருக்கன். என்னப்போல இன்னும் கொஞ்சப் பேரும் இருக்காங்க. யானைப் பயம், கரண்டு இல்ல, தண்ணி இல்ல. இதுகளால மக்கள் இருக்கப் பயப்புடுறாங்க. இங்க இருந்த கிராமத்தை புதிப்பிச்சி தாறதா பல அரசியல் வாதிகளும் சொல்லியிருக்காங்க. குறிப்பா கிழக்கு மாகாண அமைச்சர் உதுமாலெவ்வை பள்ளிய திறந்த போது வீடும் கட்டி ஏனைய வசதிகளும் செய்து தாறன் எண்டு உறுதியளித்தார். அதனை இந்த மக்களுக்காக செய்துதந்தால் மிகவும் உதவியாக இருக்கும்’ என்றார் ஏக்கத்துடன்.

**எஸ்.எல். மன்சூர்**

‘இங்கு பள்ளிவாசல் ஒன்றை அமைப்பதற்கான உதவிகளை சில பரோபகாரிகள் செய்துள்ளனர். வணக்கஸ்தலம் என்பது முக்கியம்தான். ஆனால், அதைவிட மக்கள் வாழ்வதற்கு நிம்மதியான இருப்பிடமும் தேவை. ஆகவே, இங்கு பள்ளிவாசலைச் சுற்றியுள்ள நிலங்களில் மக்கள் குடியிருப்பதற்குரியவாறு வீடுகளையும் மின்சாரம், குடிநீர் வசதிக்கான ஏற்பாடுகளையும் செய்வது காலத்தின் தேவையாக உள்ளது. ‘அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் ஊடாக பல உதவிகள் செய்யப்பட்டு வந்தாலும் இக்கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமே அற்றநிலையில் மக்கள் வந்து வாழ்வதற்கு வழிதெரியாது நிற்கின்றனர்’ என்கிறார் இக்கிராமத்தின் கிராமசேவை அதிகாரியான எம். ஜாபீர்.


உண்மையிலேயே யுத்தத்தாலும் இயற்கை அனர்த்தங்களாலும் பாதிக்கப்பட்டபோது வெளிநாட்டு நிறுவனங்களோ, உள்ளூர் நிறுவனங்களோ இவர்களுக்கு உதவ முன்வராதது பெரும் கவலையைத் தருகின்றது. முழுமையான அபிவிருத்திகளைச் செய்வதில் அமைச்சர்கள்தான் உதவவேண்டும். அதுமட்டுமன்றி இந்தப் பிரதேசம் செழிப்பான நிலத்தைக் கொண்டதாக அமைந்திருப்பதனால் அரசின் ‘பயிர் வளர்ப்போம்’ திட்டத்தினூடாக உதவிகள் செய்து விவசாயக் கிணறுகளையும் அண்மையிலுள்ள படாரக்குளம் (அடங்காட குளம்) ஊடாக நீரைக் கொண்டுவரும்போது இப்பிரதேசம் முழுவதற்குமான காய்கறிகளை வழங்கமுடியும் என்றார் இன்னொரு விவசாயியான பாறுக்.

எனவே, இக்கிராமத்திற்கு அடிப்படை வசதிகளையும் ஏனைய உதவிகளையும் செய்து கொடுக்கின்றபோது இக்கிராமத்தின் எழுச்சிக்கு வித்திடுவது மட்டுமன்றி மண்ணையும் வளத்தையும் பிரயோசனப்படுத்தலாம். இன்றைய அரசின் பயிர்வளர்ப்பதற்குரிய தரமான நிலம் உள்ள நிலையில் இதனை வளப்படுத்தி, ஏழை மக்களின் வாழ்வில் நிலைபேறான அபிவிருத்தியை ஏற்படுத்துவதில் அனைவரும் உதவிடுதல் நன்மை பயக்கும்.

இல்லையேல் இக்கிராமம் முற்றாக அழிந்துவிடும் என்பதை தடுக்க முடியாமல் போய்விடுகின்றபோது புனிதப்பிரதேசம் என்கிற போர்வையில் இக்கிராமம் முழுமையான முள்ளிக்குளத்து மலைக்குரியதாக மாறி விட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகள், பரோபகாரிகள் இங்குள்ள மக்களின் வாழ்வில் ஒளியேற்றி ஒரு முஸ்லிம் கிராமம் அழிவதிலிருந்து பாதுகாக்குமாறு மக்கள் கோரிக்கை விடுகின்றனர்

ஊர் சுற்றி...

◀ எஸ்.எம்.கோபாலரத்தினம் (கோபு) ▶



# வாழ்க..! வளர்க..! மகிந்த சிந்தனை

கொழும்பிலுள்ள ரஷ்ய சீனத் தூதுவர்களைத் தாங்கள் சந்திக்க விருப்பதாக தமிழ்த்தேசிய கூட்டமைப் பின் நாடாளுமன்றப் பிரதிநிதியும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் சமீபத்தில் தெரிவித்திருந்தார். இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காண்பது சம்பந்தமாக ரஷ்ய சீன நாடுகளின் உதவியை நாடுவதற்காகவும் அந்த நாடுகளுக்குச் செல்ல விரும்புவதாகவும் பிரேமச்சந்திரன் கூறியிருந்தார்.

பிரேமச்சந்திரன் இப்படி தெரிவித்த செய்தி ஓர் ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இச்செய்தியைப் பார்த்து ஊடக மற்றும் தகவல்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அதிருப்தி தெரிவித்ததுடன் ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை சம்பந்தமாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் இந்த இரண்டு நாடுகளையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சந்திப்பதும் அங்கு செல்ல விரும்புவதும் நிச்சயமாகத் தேசிய நலனுக்கு பாதகமானதாகவே இருக்கும் என்றாலும் அவர்களுக்கு அந்த ஜனநாயக உரிமையுள்ளதால் அரசு எதுவும் சொல்லாது என்றும் அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்திருந்தார்.

ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வரவேற்ற போதும் ஆளும் தரப்பிலிருந்தும் வேறு சிலரிடமிருந்தும் அதிருப்தியும் வெறுப்பும் வெளிப்பட்டன. மனிதாபிமான நடவடிக்கை அல்லது மனிதாபிமான யுத்தம் என்றாலும் பயங்கரவாத ஒழிப்பு யுத்தம் என்றாலும் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் எத்தனையாயிரம் அல்லது எத்தனை இலட்சம் என்பது இன்னமும் எவருக்கும் தெரியாது. பயங்கரவாதத்தை பூண்டோடு அழித்து ஒழித்த ஒரே நாடு இலங்கை ம்ட்டும் தான் என்று ஆட்சியாளர்கள் பெருமையுடன் கூறிக்கொள்கின்றார்கள்.

பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதும் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்றும் சொன்னார்கள். இப்போது



தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருடன் ஆறு தடவைகள் சந்தித்துப் பேச்சு நடத்திய போதும் 'இனவாதிகளோ பிரிவினை வாதிகளோ கேட்பதை எம்மால் கொடுக்கமுடியாது' என்று நிறைவேற்று அதிகாரமுள்ள இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெளிவாகத் தெரிவித்துவிட்டார்.

ஜனாதிபதி மகிந்த கலந்து கொண்ட கொக்காவில் பன்முகக் கோபுரத் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியுடன் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தமது சொந்தப் பிரச்சினைகள் குறித்தே பேச்சு நடத்தி வருவதாக குறிப்பிட்டார்.

இனவாதிகள் பிரிவினைவாதிகள் யார் என்று ஜனாதிபதி குறிப்பிட்டுச் சொல்லவில்லை. அவர்கள் கேட்பதைக் கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார். இனங்களின் உள்ளங்களை இணைக்கக்கூடிய வகையில் தீர்வு காண அனைத்துத் தரப்பினருடனும் பேச்சு நடத்தி வருவதாகவும் கூறியிருக்கிறார்.

இனவாதிகள் பிரிவினைவாதிகள் என்று யாரை ஜனாதிபதி குறிப்படுகிறார். என்பது வெளிப்படையாகச் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்பதில்லை. இவர்களைத்தான் தங்கள் சொந்தப்பிரச்சினை பற்றிப் பேசுகிறார்கள் என்று அமைச்சர் சொல்லியிருக்கிறார். ஜனாதிபதிக்கும் கூட்டமைப்பினருக்குமிடையில் நடக்கும் பேச்சுக்களில் அமைச்சர் கலந்து கொள்வதில்லை என்பது தெரிந்ததே!

இதே சமயம் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரசாந்தன் திகிலிவட்டைக் கிராமத்தில் நடந்த பாடசாலைக் கட்டடத் திறப்பு நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தமிழ்பேசும் மக்களின் அரசியல் தீர்வுத் திட்டத்தினை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தெளிவுபடுத்த வேண்டும் என்று கேட்கிறார்.

தமிழ் மக்களின் நியாயமான தீர்வினைப் பெற்றுக்கொடுப்போம். தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்போம் என்று கூட்டமைப்பினர் கூறிவருகின்றனர். எனவே அரசியல் தீர்வுத் திட்டத்தை கூட்டமைப்பினர் வெளிபடுத்த வேண்டும் என்று பிரசாந்தன் கேட்டிருக்கிறார்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, உரிமையையும் அபிவிருத்தி யையும் இலக்காகக் கொண்டு ஜனநாயகப் பாதையில் பயணிக்கின் றனர் என்றும் இதைக் கூட்டமைப்பினர் விமர்சிக்கின் றனர் என்றும் பிரசாாந்தன் குற்றம் சாட்டியிருக்கிறார். தீர்வு யார் கையில்?

வடக்கில் கொக்காவில் பன்னோக்கு கோபுரத்திறப்பு விழாவில் பேசிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழ் மக்களுக்கு உரிமையைப் பெற்றுக்கொடுக்காமல் அரசியலில் இருந்து ஓய மாட்டேன் கூட்டமைப்பினர் ஜனாதிபதியுடன் சொந்த விடயங்களையே பேசுகின்றனர் என்று சொன்னார். 10க்கு உட்பட்ட வாக்குகள் பெற்றும் தேர்தலில் தெரிவான 9 பேர்களுடன் நாடாளுமன்றம் சென்ற அமைச்சர் டக்ளஸ் 1994ஆம் ஆண்டிலிருந்து பிரேமதாச, சந்திரிக்கா என்று வந்த எல்லா ஆட்சிகளிலும் அமைச்சராக இணக்க அரசியலைப் பின்பற்றி வருகிறார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் கலந்து கொள்ளும் நிகழ்வுகளில் அரசுடன் ஆறு தடவைகள் சந்தித்துப் பேசிய போதும் உருப்படியாக எதுவும் ஈடேறுவதாக காணோம் என்று கூறிவருகின்றனர். ஆனாலும் தொடர்ந்து பேசுகின்றனர்.

ஜுலை மாதம் 23ஆம் திகதி வடக்கு கிழக்கில் ஒத்திவைக்கப்ட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடைபெறுமென அறிவிக்கப் பட்டிருக்கிறது. இத்தேர்தல்களில் வெற்றி பெறுவதற்காகவே மீண்டும் தமிழ் மக்களின் 'உரிமைகள்' கையில் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். எத்தனை இலட்சம் தமிழர்கள் உயிர்ப்பலி கொடுத்தாலென்ன தேர்தலில் ஆசனம் பெறுவதற்காக தமிழர்கள் முட்டிமோதி அடித்துக் கொள்ளவும் ஆளை ஆள் காட்டிக் கொடுக்கவும் தமிழர்கள் பின்னிற்க மாட்டார்கள் என்பதும் இன்று உலகுக்குத் தெரியும்.

முன்பு காணி எல்லைக்காகச் சண்டை பிடித்து காணியையே விற்று வழக்காடிய பெருமை ஈழத் தமிழருக்கு இருக்கிறது. இன்று காணிகளையே இழந்து விட்டாலும் தேர்தலில் கதிரைகளுக்காக சண்டை போடுவதில் தமிழர்கள் சளைக்கவில்லை. இன்றும்கூட பேச்சு வார்த்தையில் அவர்கள் மட்டும் தானா பேச வேண்டும் பக்கத்திலேயே இருந்தாலும் எங்களுடனும் பேசித்தானாக வேண்டும் என்று 'உரிமையை' விட்டுக் கொடுக்காதவர்களல்லவா நாங்கள்.!

உலகிலேயே உரிமைக்காகப் போராடி தமக்குள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டும் காட்டிக் கொடுத்தும் அழிந்த போதிலும் நாற்காலிகளுக்காக மீண்டும் மீண்டும் சண்டை போட்டுத் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் ஒரே இனம் ஈழத் தமிழினம் தான் என்பதை நிரூபித்துக் கொண்டிருப்பது நாங்கள் மட்டும் தான்.

இதனால் தான் 'கொடிய பயங்கர வாதிகளை' ஒழித்த சகல வல்லமையும் கொண்ட நிறைவேற்று அதிகாரமுள்ள அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜக்ஷ இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் 'சகல தரப்பினரையும்' சந்தித்துக் காலம் கடத்தி வருகிறார். தமிழர்கள் தமக்குத் தாமே முட்டி மோதி தம்மைத்தாமே அழித்துக் கொண்ட பின் தீர்வு தானாகவே கிடைத்துவிடுமே! வாழ்க வளர்க மகிந்த சிந்தனை!

## ◀ நக்கல் நையாண்டிப் போடியார் ▶

*எப்புடி சுகமா இருக்கீங்களா...?*

*காத்தான்குடில இரிக்கிற மீரா பாளிகா பொம்புளப் பள்ளிக்குடத்துல ஒரு புராதன பொருள் இருக்கெண்டு காட்ட கூட்டிப்போனாங்க. நானும் அங்க போய்ப் பாத்தன். அப்படி ஒண்டையும் காணல. பக்கத்துல இரிக்கிற ஒரு பஸ்ஸக் காட்டி இதுதான் பொக்கிஷம் எண்டாங்க. நான் அப்படியே கடுப்பாயிட்டன். பொறகுதான் விசயம் தெரிஞ்சது.*


*போன சுனாமியில நிறுவனம் ஒண்டு அந்த ஸ்கூலுக்கு புள்ளயல ஏத்தி, இறக்க ஒரு பஸ்ஸக் குடுத்து இரிக்கி. அத ஒருக்காத்தான் 2006இல வெள்ளோட்டம் விட்டு, காத்தான்குடிய அந்த பஸ்ஸுக்கு ஒருக்கா சுத்திக் காட்டிருக்காங்க. அதுக்குப் பொறகு அந்த பஸ் 6 வருசமா 'புத்தர் சில'யப் போல நிப்பாட்டின மாதிரி ஒரே இடத்துல நிக்குது. அது கறள் புடிச்சி இப்பவும் அப்படியே கெடக்குது.*

*அந்த பஸ்ஸ பொத்திப் பொத்தி வெச்சிப் பாதுகாத்ததால அத எணக்க லெச்சக் கணக்குல செலவாகுமெண்டு பள்ளிக்குடத்து நிர்வாகம் கைவிட்டுடாங்களாம். இத சீ.ரீ.பி.ல பெயிண்ட் அடிச்சி ஓட விட்டிருந்தாக்கூட வாற வருமானத்துல ரெண்டு பஸ் வாங்கியிருக்கலாம். அல்லது அந்த ஸ்கூல் கெண்டினுக்கு குடுத்தாக்கூட அதுக்குள்ள சாமான வெச்சி புள்ளயளுக்கு வித்திருக்கலாம். ஒண்டும் தெரியாம இப்படி பொக்கிஷமா வெச்சா, ஒரு காலத்துல மியூசியத்துக்குத்தான் அனுப்பனும்.*

*மறுகாவும் வருவன்...!*



**பெண் :** வாழ்த்து அட்டை உள்ளதா?
**கடைக்காரர் :** இருக்கிறது.
**பெண் :** 'நான் உன்னை மட்டும் காதலிக்கிறேன்' என்று எழுதிய அட்டை உள்ளதா?
**கடைக்காரர் :** இருக்கிறது.
**பெண் :** அப்படியானால் '12' வாழ்த்து அட்டைகள் தாருங்கள்.



# நாடும் நடப்பும்

## விதானைமாரின் கெட்டித்தனம்

எங்கட விதானமார்ர சண்டித்தனங்களை ஆரிட்ட சொல்லி அழுறதெண்டு தெரியேல்ல. அவயளும் ஆமி பொலிஸ் மாதிரித்தான் நடக்கினமுங்கோ. அந்தக்காலத்தில விதானமார் உப்பிடி இல்ல தெரியுமோ. விதானமார் எண்டா சனத்துக்கு அவரில பக்தியும் வரும் மரியாதையும் வரும். அவயளும் சனத்தோட அப்புடித்தான் பழகுவினம். இப்பத்தய விதானமார் எதுக்கெடுத்தாலும் நிவாரணத்த வெட்டிப்போடுவன் தெரியுமோ எண்டல்லோ கேக்கினம்.

உப்புடித்தானுங்கோ போன கிழம 'ஐயா எதோ விதானையாரிட்ட பதியவேணுமெண்டு' மோள்க்காரி சொல்ல நானும் போய் போம் வேண்டிக் கொண்டு வந்தனானுங்கோ. அதில ஒரு கோதாரியும் விளங்கேல்ல. ஏதோ சுத்திச்சுத்தி கனக்கா கேட்டிருந்தாங்கள். அதப் பாத்தா பொலிசுக்காரங்கள் விசாரணைக்கு கேக்கிற மாதிரித்தானுங்கோ இருந்தது. என்ர பேரனப்புடிச்சு அவனால முடிஞ்சத நிரப்பிப்போட்டு விதானயாரிட்ட கொண்டுபோய் குடுத்தனுங்கோ. விதானயார் அத வாங்கி படிச்சுப்பாத்துட்டு என்னக் கண்டபாட்டுக்கு பேசத் தொடங்கீட்டாருங்கோ. உப்புடி போம பிழ பிழயா நிரப்பினா நாங்கள் என்ன செய்யிறது. வயது போன நேரத்துல ஏன் உங்களுக்கு வீண் வேல... ஆரன் படிச்ச ஆக்களிட்ட குடுத்து நிரப்ப வேண்டியது தானே. உங்களுக்கு திருப்பித்திருப்பி போம் தரேல்லாது எண்டு மனுசன் பேச எனக்கு சங்கடமாப் போட்டுதுங்கோ.

ஊரில எனக்கு ஒரு மதிப்பு இருங்குங்கோ. எங்க ஊரில முதல் அரசாங்க வேல செய்த ஆள் நான் தானுங்கோ. அப்ப றெயில்வேயில வேல செஞ்சனான். என்னப்பாத்து அந்தாள் இப்புடிக்கேக்குமெண்டு நான் நினைக்கேல்லயுங்கோ. நல்லகாலம் எனக்கு பெஞ்சன் இருந்ததால தப்பிச்சன். அல்லாட்டிக்கு என்ர நிவாரணத்த வெட்டுவன் எண்டுகூட அந்த மனுசன் சொல்லியிருக்கும்.

இத எல்லாம் நான் ஏன் உங்களுக்கு சொல்லுறன் எண்டு நீங்கள் கேப்பீங்கள் பாருங்கோ. இப்படித் தானுங்கோ. நாட்டில அதிகாரிமார் சண்டித்தனம் செய்யினம். விதான பதவி எண்டது ஊரில சனத்தோட நெருங்கிப் பழகுற நல்ல பதவியுங்கோ. அதுகளின்ர கஸ்ர நஷ்டங்கள கேட்டு அதுகளுக்கு உதவுறத்துக்கு அரசாங்கத்துக்கு சிபாரிசு செய்யிற புண்ணியமான வேலயுங்கோ. அந்தப் பதவியில இருந்துகொண்டு சண்டித்தனம் விடக்கூடாது தானயுங்கோ. விதானமார் போம் நிரப்பினா என்ன குறையுங்கோ. ஒண்டும் தெரியாத சனங்கள் ஆரிட்ட குடுத்து நிரப்புறது.

அது சரியுங்கோ அந்தப் போமெல்லாம் விதானயார் ஏன் தந்தவர் எண்டு சொன்னா என்மேல பலபேர் கோவப்படுவினமுங்கோ. அது பொலிசுக்காரர் குடுத்த போமாமுங்கோ. பொலிசுக்காரர் சனத்திட்ட வந்து வீடு வீடா பதிஞ்சா கோட்டில வழக்கு கிழக்கு எண்டு எங்கட எம்.பி.மார் போட்டு வாங்களெண்டு விதானமார வச்சுப் பதியினமுங்கோ. அதுதான் பாருங்கோ விதானமாரும் சனத்திட்ட எரிஞ்சு விழுகினம் எண்டு நினைக்கிறன் பாருங்கோ. பொலிசுக்காரருக்கு தங்கண்ட விசுவாசத்தக் காட்டுறமெண்டு சனத்திட்ட இப்படியோ நடக்கிறது.

எண்டாலும் பாருங்கோ எங்கட ஆக்கள் வலு கெட்டிக்காரர் தானுங்கோ. யாழ்ப்பாணத்தில சனத்தப் பதியக்கூடாதெண்டு பொலிசுக்கும் ஆமிக்கும் நீதி மன்றம் தீர்ப்புச் சொல்ல, எங்கட ஆக்கள் அத வேண்டி தங்கட கணக்க பதிச்சு குடுக்கிறது மாதிரி செய்யிறத் துக்கும் ஒரு கெட்டித்தனம் வேண்டும் தானுங்கோ.

- வண்டில்கார வைரவி அப்பு

சிறுகதை




பஸ் நகர்ந்து கொண்டிருந்தது. அழகான இளைஞன் ஒருவன் எனது ஆசனத்துக்குப் பக்கத்தில் சாய்ந்து கொண்டிருந்தான். பஸ்ஸினுள் உள்ள பிரயாணிகளைப் பின்னால் நகர்ந்து போகும்படி பல தடவை, கண்டக்டர் கேட்டுக்கொண்ட போதிலும் அந்த இளைஞன் ஒரு அங்குலம் தானும் அப்பால் போகாமல் நான் உட்காந்திருந்த ஆசனத்தையே பிடித்துக் கொண்டு நின்றான். அப்பால் அவன் நகர்ந்து போகாமல் அவ்விடத்திலேயே நின்றுகொண்டிருந்தது எனக்குள் சந்தேகத்தை உண்டாக்கியது.

ஐந்து ஆண்டுகளாக பஸ் பிரயாணம் செய்து வரும் நான், பல்வேறுபட்ட பிரயாணிகளை, அவர்களின் பார்வை எவ்வாறிருந்த போதிலும் அவைகளை நான் புரிந்து வைத்திருக்கிறேன். ஆனாலும் கண்ணியவானாகக் காட்சியளிக்கும் ஒருவன் பெண்மைக்குப் பங்கம் செய்பவன் என்பது என்னைப் பொறுத்தமட்டில் உண்மை என்றுதான் சொல்லுவேன்.

எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த பெண், கல்கிசையில் இறங்கிக் கொண்டதும் கண்ணியவானாகக் காட்சி தந்த வாலிபன் அந்த இடத்தைப் பிடித்துக்கொண்டான். சில நிமிடங்களில் அவன் தூங்க ஆரம்பித்துவிட்டான். இவ்வாறான வாலிபர்கள் தூங்குவதுபோல் பாசாங்கு செய்து பருவப் பெண்களின் உடலில் ஊடல்களை உண்டாக்கிச் சுகம் அனுபவிப்பது அவர்களின் தேவையாக இருக்கும். இவ்வாறு பிரயாணம் செய்யும் பருவப் பெண்களின் மீது தமது சுகத்தை அனுபவித்துக் கொள்ளுவதானது ஆண் வர்க்கத்தின் ஆதிக்க வெளிப்பாடு என்றுதான் சொல்ல வேண்டியுள்ளது.

இவ்வாறான இடர்நிலை ஏற்படும் பொழுது பெண்ணானவள் பரிதவிப்புக்குள்ளாகிறாள். இந்த நிலைமையை எதிர்த்துப் பேசினால் சில சந்தர்ப்பங்களில் அவள் கேவலமாகப் பார்க்கப்படுகின்றாள். அல்லது இன்னலுக்குள்ளாக்கப் படுகின்றாள். பெண்களின் தலைவிதி இதுதானோ?

எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த அந்த இளைஞன் தூங்க ஆரம்பித்ததும், அடுத்ததாக என்ன நடக்கும் என்பதையும் நான் அறியாமலில்லை.மனப்புழுக்கமும் ஆத்திரமும் ஒன்றுபட்ட நிலையில் எனக்குள் சீற்றமும் உருக் கொண்டது.

நான் எதிர்பார்த்தது போலவே தூங்கும் மனிதனின் தலை எனது தோளில்தஞ்சம் தேடியது. விளைவு. எனக்குள் ஆத்திரம் கொழுந்துவிட்டு எரிந்தது. அவனது தலையைத் தட்டிவிட்டு பத்திரகாளியாக மாறி ஏனைய பிரயாணிகளுக்கும் கேட்கத்தக்கதாக 'என்ன ஐயா! நீ செய்யுற வேலை! பொம்புளங்க பஸ்ஸில பயணம் போக ஏலாது போல இருக்கு' அதன் பிறகு பிரயாணிகள் மத்தியிலே சலசலப்பும், வார்த்தைப் பிரயோகங்களும் ஏற்பட்டன.

அதனால் அவமதிப்பும் வெட்கமும் அடைந்த அந்த இளைஞன் சோர்ந்து போனான். அவன் வதனத்தில் வாட்டம் பளிச்சிட்டது. அந்த வாட்டமும் சோர்வும் அவனை வெகுவாகத் தாக்கம் செய்திருந்ததை நான் விளங்கிக் கொண்டேன்.

அவன் குற்றவாளியல்ல, குழந்தையாகி விட்டிருந்தான். ஐயோ! ஒரு நல்ல மனிதனை வெட்கித் தலைகுனிய வைத்து அபகீர்த்தி உண்டாக்கி விட்டேனா? என் உள்ளம் வேதனைப்பட்டது.

உண்மையாகவே களைப்பினால் தூங்கியிருக்கிறான். அதனால், என் தோள்மீது சாய்ந்துவிழ ஏதுவாகியிருக்கலாம். என்னை நானே நொந்து கொண்டேன். சந்தேகம் விலகியதும் எனது ஆத்திரம் தணிந்தது. ஆயினும் மனம் அலை பாய்ந்தது. அதற்கான பரிகாரம்? ஏன் நான் கவலைப்பட வேண்டும்? மீண்டும் ஒரு முறை அவனை நான் சந்திக்க மாட்டேனா?

என்ன ஆச்சரியம்! விதி வேலை செய்தது. ஒரு நாள் பஸ்ஸில் ஏறிக்கொண்டேன். கால் வைக்கக்கூட இடமில்லை. மனித வெக்கை வேறு. நகரவே முடியாத நிலை. ஆள்மேல் ஆள்நெருக்கி அவதிக்குள்ளான நிலைமை.

அவ்வாறான நெருக்கடியில் எனது முழங்கையை தொட்டு ஒரு அழைப்பு. என் கண்ணை என்னால் நம்பமுடியவில்லை. அன்று என்னால் அவமானத் துக்குள்ளான அதே இளைஞன்தான். தனது ஆசனத்தை எனக்குத் தந்தான். நான் ஆச்சரியப்பட்டதோடல்லாமல் பரபரப்புக்கும் உள்ளானேன். நன்றி சொல்லியவாறு அவன் காட்டிய ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டேன். எனக்குள் பெருமிதம் உண்டானது. அன்று பலர் மத்தியில் அவனை நான் அவமானப்படுத்தி இருந்தேன். ஆயினும் அதனைப் பொருட்படுத்தாது மறந்துவிட்டு, என்னை மதித்து இடம் தந்திருக்கிறானே. சே! நான் அவ்வாறு நடந்து கொண்டது தவறு தான். என் உள்மனம் குத்திக்காட்டியது.

'நான் உங்களை அவமானப் படுத்தியதை மறந்து எனக்கு இடம் தந்திருக்கிறியள். என்னை அவமானப்படுத்தவா.?'

'அப்படியான நோக்கம் எதுவும் இல்லை. அந்தச் சம்பவத்தை நான் மறந்தாச்சு. ஆனாலும் அந்த சம்பவத் தினால் பல வாரங்களாக நான் பஸ் பிரயாணம் செய்யல்ல. எனக்கே சங்கடமாக இருந்தது'

இதைக் கேட்டதும் எனக்கு வேதனையாக இருந்தது. விழிகளிலும் நீர் திரண்டது. கட்டுப்படுத்திக் கொண்டேன். பிறகு இளைஞன் சொன்னான்.

'நடந்ததைப் பத்தி நான் குற்றம் சொல்லல்ல. ஆனா சில மிடுக்கான இளைஞர்கள் பெண் பிரயாணிகளைச் சேட்டை பண்ணுறாங்க. நீங்கள் ஒரு கபடமில்லாத ஆண் மகனைக் குற்றவாளியாக்கிட்டீங்க அவ்வளவுதான்'

'தயவுசெய்து என்னை மன்னிச்சிடுங்க. இனிமேல் அவ்வாறான சம்பவம் நடக்க மாட்டா'

'இதுல மன்னிப்புக்கு ஒண்ணுமில்ல. உண்மையாகவே உங்களைப் பாராட்டுறன். துணிச்சலான பொம்புள! ஆனா இப்ப உங்களைப் பாராட்டுறன். அடக்கமான பொம்புள என்பதால'

அன்று நடைபெற்ற அசாத்தியமான நிகழ்வினால் இன்று மகிழ்ச்சியான திருப்பம் ஏற்பட்டுள்ளது. நாங்கள் இருவரும் பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொண்டோம். பஸ்ஸிலிருந்து இறங்கி விடைபெறும் போது என்ன ஆச்சரியம்! இருவரினது பஸ் தரிப்பிடமும் ஒரே இடமாக இருந்தது.

அந்த இளைஞன் வங்கியில் வேலை செய்கிறான். நான் வேலை செய்யும் காரியாலயத்திலிருந்து கொஞ்சம் தூரத்தில் அது அமைந்துள்ளது. அடிக்கடி எமக்குள் சந்திப்புக்கள் ஏற்பட்டன. அதன் பயனாக ஒருவரை ஒருவர் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பும் வசதியும் உண்டானது. அதன் பலன்! எமக்குள் காதல் அரும்பியது.

எமது நட்புறவை பெற்றாரும் தெரிந்து கொண்டார்கள். ஆனாலும் எமது உறவுக்கு சோதிடம் இரும்புத்திரையாக அமைந்தது. உடன்பாடும் ஒப்புதலும் காட்டவில்லை. மணவாழ்க்கை சாத்தியமில்லை என்று சோதிடம் திட்டவட்டமாக, அழுத்தம் திருத்தமாகச் சொல்லிவிட்டது.

இரண்டு தரப்பிலும் சோதிடம் காரணமாக எதிர்ப்பு எழுந்தது. ஆயினும் நாங்கள் இருவரும் திடமாக உறுதியாக நின்று தடைகளை முறியடித்து காதலை வெற்றி கொண்டோம். சோதிடம் பொய்யாகிவிட்ட நிலையில் ஆறு வருடங்கள் இனிப்பான இல்லற வாழ்க்கையில் இரண்டு பிள்ளைச் செல்வங்களோடு மனம் பொருந்திக் கொண்ட தம்பதிகளாக நாங்கள் இப்போது! மகிழ்ச்சிக்கும் நிறைவுக்கும் குறைகள் ஏதுமில்லை ●

◄ புன்னகை வேந்தன் ►



# கிழிக்கப்பட ஒப்பந்தங்களும் 13ஆவது திருத்தச் சட்டமும்

இலங்கையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மீண்டும் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்கவேண்டும் என்று யோசனை தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் நிருபமாராவ், பாதுகாப்புச் செயலாளர் பிரதீப்மேனன் ஆகியோரைக்கொண்ட இந்திய உயர்மட்டக் குழுவினர் கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் உயர் அதிகாரிகள், அமைச்சர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தித் திரும்பியுள்ளனர்.

தமிழ்நாடுசட்டசபையில் இலங்கைஅரசுக்கெதிராகப் பொருளாதாரத் தடைவிதிக்கக் கோரியும் போர்க்குற்றச்சாட்டு சுமத்தியும் இரண்டு முக்கிய தீர்மானங்கள் தமிழ் நாட்டு முதலமைச்சர் ஜெயலலிதா முன்மொழிந்து ஏகமனதாக நிறைவேற்றப் பட்டதைத் தொடர்ந்து இந்திய உயர்மட்டக் குழு அவசர அவசரமாக கொழும்புக்கு வந்து திரும்பியிருக்கிறது.

கொழும்புக்கு வரும் வழியில் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர்மேனன் தமிழ் நாட்டு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார். கொழும்பிலிருந்து திரும்பும் போதும் சந்திப்பதாக மேனன் சொல்லிச் சென்றிருந்தார். ஆனால் மீண்டும் தமிழ்நாடு முதல்வரை அவர் சந்திக்கப்போகவில்லை.

இலங்கையில் யுத்தம் உச்சக்கட்டத்திலிருந்த போது யுத்த நிறுத்தம் மேற்கொள்வதற்கு இந்தியா உதவ வேண்டும் என்ற கோரிக்கை பல இடங்களிலிருந்தும் எழுந்த சமயத்திலும் சிவசங்கர்மேனன் எம்.கே.நாராயணனுடன் தமிழ் நாட்டு முதல்வராக இருந்த கலைஞர் கருணாநிதியைச் சந்தித்தும் பேசியிருந்தார். கொழும்புக்கும் அவர்களிருவரும் வந்து சென்றனர்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு இதற்கு முன்னரும் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அமைக்கப்பட்டதுதான். சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க, காலம் கடந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தைக் கொண்டுவந்திருந்தார். இத்திட்டம் இதற்கு முன் கொண்டுவரப்பட்டவைகளிலிருந்து கொஞ்சம் சிறப்பானதாக இருப்பதாக சில வட்டாரங்களில் கருத்து வெளிவந்தது. வழமை போலவே இத்திட்டத்திற்கு எதிர்ப்பும் ஆதரவும் கிளம்பியது. இதனால் இத்திட்டம் பாராளுமன்ற தெரிவுக்குழுக்கு பாரப்படுத்தப்பட்டது. தெரிவுக்குழுவில் சந்திரிகா அம்மையாரின் திட்டம் அலசப்பட்டுக் குத்திக் குதறி உருக்குலைந்து கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக முடிந்தது.

தமிழ்நாட்டு சட்டசபைத் தீர்மானங்களைத் தொடர்ந்து அவசரமாகக் கொழும்புக்கு வந்த இந்திய உயர்மட்டக் குழுவினரிடம் தெரிவுக் குழு பற்றி இலங்கை அரசு தெரிவித்திருக்கிறது. அந்தக்குழு அதைக் கேட்டுக் கொண்டு திரும்பியிருந்தது.

இதேசமயம், இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக இந்தியாவும் இலங்கையும் முன்பு ஓர் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தன. இதில் 13வது திருத்தம் என்று ஓர் அம்சமும் உள்ளது. இந்த 13வது திருத்தத்தின் படி தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசத்துக்கென அமைக்கப்படும் மாகாண சபைக்கு வழங்கப்படும் அதிகாரங்களுடன் காணி, காவற்துறை [பொலிஸ்] அதிகாரங்களும் வழங்கப்படும் என்று ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

இப்போது புதுடில்லியிலிருந்து கொழும்புக்கு வந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த நிபுணர் குழுவிடம், 13வது திருத்தச்சட்டத்தில் காணி மற்றும் காவற்றுறைப் பொறுப்புக்களை அளிக்கும் அம்சம் சேர்த்துக் கொள்ளப்பட முடியாது என்று திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். ஆளும் கூட்டணியிலுள்ள கட்சித் தலைவர்கள் இந்த அதிகாரங்கள் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்ப்பதாக மகிந்தர் கூறியிருக்கிறார்.

இந்திய உயர்மட்டக் குழு கொழும்புக்கு வருவதற்கு சில மாதங்களுக்கு முன்னர் புதுடில்லியில் சென்று இந்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இந்திய அமைச்சருடன் சேர்ந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் 13வது திருத்தச் சட்டம் காணி, காவற்றுறை அதிகாரங்களுடன் இருக்கும் என்று உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இப்போது அமைச்சர் பீரிஸ் இந்திய அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தை, வெளியிட்ட கூட்டறிக்கை என்பன செல்லாக் காசாகிவிட்டன. இன்னமும் பீரிஸ் அமைச்சராகத்தான் இருக்கிறார்.



இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக இலங்கைக்குள்ளேயே நாம் தீர்வு காண்போம். வெளியாரின் தலையீடு தேவையில்லை. அந்நியரின் தலையீட்டுக்கு நாம் இடமளிக்க மாட்டோம் என்றும் தேசபக்தியை சிங்களத் தலைவர்கள் வெளியிடவும் தவறுவதில்லை.

இலங்கையின் பிரதம மந்திரியாக 'அப்பே ஆண்டுவ' [எங்கள் ஆட்சி] என்ற கோசத்துடன் மிகப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்து சிங்களத்தை ஒரேநாளில் அரியணையில் ஏற்றியவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க. இவரும் இவருடன் சேர்ந்த இனவாத மொழி வெறியாளர்களும் கிளப்பிய இனக் குரோதம் இன்றுவரை வளர்கிறதே தவிர குறைவதற்கோ அற்றுப் போவதற்கோ வழியைக் காணோம்.

பண்டாரநாயக்கா, 1956ஆம் ஆண்டில் நடந்த தேர்தல் பிரச்சாரத்தில் கிளப்பிவிடப்பட்ட மொழி வெறி, இனவெறிகளுக்கிடையில் ஆரவாரமாக சிங்களத்தை அரியணையில் ஏற்றும் சட்டத்தைக் கொண்டு வந்தார். இது தமிழ் மக்களை உரிமையற்றவர்களாக்கிவிடுமென்று தமிழ்அரசுக்கட்சியின் தலைவரும் ஈழத்துக் காந்தி என்றும் தந்தை என்றும் அழைக்கப்பட்டவருமான எஸ்.ஜே. செல்வநாயகம் தலைமையில் சாத்வீகமாக பாராளுமன்றப்படிகளில் பட்டினி கிடக்கச் சென்ற மக்கள் பிரதிநிதிகளையும் தொண்டர்களையும் ஆளும் கட்சியின் ஆசியுடன் காவல் துறையின் கண் முன்னால் காடையர்கள் தாக்கினார்கள். இது கிழக்கில், இங்கினியாகல, அம்பாறையிலும் பரவியது. இதுதான் இலங்கையில் தொடங்கிய முதல் பயங்கர வாதம்.

சிங்களச் சட்டம் நாட்டை சீர்குலைத்து விடும் என்பதை உணர்ந்த பிரதமர் பண்டாரநாயக்கா தமிழர் தந்தை செல்வநாயகத்துடன் பல நாட்கள் இரவுபகலாக பேச்சுவார்த்தை நடத்தி ஆலோசித்து வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சபைகள் அமைத்து அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதற்கு ஓர் ஒப்பந்தம் செய்தார்.

இலங்கைப் பிரச்சினையை வெளியார் தலையீடின்றி உள்நாட்டிலேயே இரு பிரிவினரும் தீர்த்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இந்த முதல் முயற்சியை ஆளும்கட்சிக்குள் இருந்த இனவெறியர்களும் எதிர்க்கட்சியிலிருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான இன வெறியர்களும் எதிர்த்தனர். ஒப்பந்தம் பண்டாரநாயக்காவினாலேயே கிழித்தெறியப்பட்டது.

செல்வநாயகமோ தமிழரசுக்கட்சியோ ஆயுதம் ஏந்தவுமில்லை. பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபடவும் இல்லை. காந்திவழியில் சாத்வீகப் போராட்டங்களை தொடர்ந்து மேற்கொண்டனர். 'கத்தியின்றி இரத்தம் இன்றி' உரிமைக்காக போராடிய போது ஆயுதப் படையினரும் குண்டர்களும் தமிழ் இளைஞர்களைச் சிறைபிடித்து சித்திரவதை செய்யத் தொடங்கியதுடன் சாத்வீகப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தி இரத்தம் சிந்த வைத்தனர்.

பண்டா-செல்வா ஒப்பந்தம் பயனற்றுப் போக அடுத்து ஆட்சிக்கு வந்த டட்லி சேனநாயக்கவுடன் பேச்சு நடத்தி ஓர் ஒப்பந்தத்தில் தந்தை செல்வாவும் பிரதமர் டட்லியும் கைச்சாத்திட்டனர். இந்த ஒப்பந்தமும் காலம் கடத்தி தம்முடன் சேர்ந்தவர்கள் எதிர்ப்பதாகச் சொல்லி அந்த ஒப்பந்தமும் டட்லியால் குப்பைக் கூடைக்குள் வீசப்பட்டது.

காந்திவழியில் நடத்திய சாத்வீகப் போராட்டங்கள் ஆயுதபலத்தால் அடக்கப்பட்ட போது காந்தியின் குரங்குப் பொம்மைகளுக்கு வேறுவிதமாக அர்த்தம் கற்பித்து காந்தி நாடு கண், காது, வாய் பொத்தி நின்றது. பயங்கரவாதம் என்று இலங்கை திசைதிரும்பிய போது அதற்கும் செவிசாய்த்து தமிழ்இன அழிப்புக்கு உதவியும் செய்தது. இப்பொழுது இலங்கையின் வசதிக்காகவும் தனது நலனுக்காகவும் இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் செய்கிறது. இந்தியா அந்நிய நாடா இல்லையா என்பது போக, இந்த ஒப்பந்தங்களும் உருப்படியாகச் செயற்படுகின்றனவா?

சாத்வீகப் போராட்டம் தோல்வியடைந்ததும் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினார்கள். இதற்கு ஆயுதமும் பயிற்சியும் அளித்து உதவி செய்த இந்தியா, ஆயுதம் ஏந்திய இளைஞர்கள் பிளவுபட்டு நிற்பதிலும் உறுதியாகச் செயற்பட்டு தமிழ் இன அழிப்புக்கு பங்களித்தது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் ஆட்சிக்கு வந்தவர்களும் வருபவர்களும் இன்று ஆட்சியில் இருப்பவர்களும் அர்ப்பணிப்புடன் செயற்படவில்லை. இனியும் செயற்படுவதற்கான அறிகுறிகளும் இல்லை. சிங்கள அரசியல் தலைவர்கள் எவரும் இனப்பிரச்சினைக்கு நியாயமான சுமூகமான தீர்வுகாண வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவும் தெரியவில்லை. இடதுசாரித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்தின ஒருவரே குரல் கொடுத்து வருகிறார். ஆனால் யார் காதிலும் அந்தக் குரல் விழுவதாகக் காணோம்.

13 பிளஸ் மூலம் தீர்வு காணலாம் என்று மகிந்தசிந்தனைக்கு ஒத்துழைக்கும் புதிய தமிழ்த்தலைமைக்கு விரும்பிச் செயல்படுபவர்களும் 13வது திருத்தச்சட்டத்தில் காணி, காவற்றுறை அதிகாரங்கள் கொடுக்கமுடியாது என்று திட்டவட்டமாக அறிவித்த பின்னர் எதுவும் சொன்னதாகத் தெரியவில்லை. அவர்கள் எதுவும் சொல்வார்களானால் அது 'அதுவும் சரிதான்' என்பதாகத்தானிருக்கும் என்பது தெரிந்ததே!

**◀ எஸ்.எம்.ஜி ▶**

13வது திருத்தச்சட்டத்தில் காணி, காவற்றுறை அதிகாரங்கள் வழங்க முடியாது என்று ஜனாதிபதி மகிந்தர் சொன்னால் சரியா? அவருக்கும் மிஞ்சியதாக ஒருவரும் இல்லையா? இருக்கிறார்.

'இலங்கைத் தமிழ் மக்களுக்கென்று தனிப்பட்டபிரச்சினைகள்என்றுஎதுவும்கிடையாது. இந்தியாவோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரோவலியுறுத்துவதைதேசியஅரசியலில் செயல்படுத்தவும் முடியாது. எனவே கனவுலகத்திற்குள் இருந்து கொண்டு அடம்பிடித்தால் அப்பாவித் தமிழ் மக்களே மீண்டும் அழிவுகளைச் சந்திப்பார்கள்' என்று ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க மிரட்டியுள்ளார்.

செல்வநாயகம் காலம் தொட்டு சம்பந்தன் காலம் வரையில் கோரப்படும் சுயநிர்ணய உரிமையோ காணி, பொலிஸ் அதிகாரங்களையோ வழங்க முடியாது என்று தெரிவித்த சம்பிக்க ரணவக்க கடந்த காலங்களில் இவ்வாறான கோரிக்கைகளினால் வடக்கு கிழக்குத் தமிழ் மக்கள் பேரழிவைச் சந்தித்தனர். இதே நிலையை மீண்டும் ஏற்படுத்த வேண்டாம் என்றும் எச்சரித்திருக்கிறார். இதற்கும் காலம் பதில் சொல்லும்!



# ‘வாசிக்காதவனை படித்தவனாக ஏற்றுக்கொள்ள முடியாது’

## சின்னத்தம்பி ஸ்ரீதயாளன்

யாழ்ப்பாணத்தில் பட்டதாரிகள் குறைவாகக் காணப்பட்ட அந்தக் காலத்தில் தமிழ்ப் பண்டிதராக இருந்தவர் பண்டிதர் முத்தையா சின்னத்தம்பி. கொக்குவில் இந்துக் கல்லூரியில் தமிழ் ஆசிரியராக மட்டுமன்றி தமிழ்த் தொண்டு செய்த பெருமையும் இவரையே சாரும். இவரது கடைசி மகன்தான் சின்னத் தம்பி ஸ்ரீதயாளன். கொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் கல்வி கற்று நாடளாவியரீதியில் பல்வேறு பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றி அதிபராக நியமனம் பெற்றவர். அந்தக் காலகட்டங்களிலேயே நாடகங்கள் இயற்றுதல், கட்டுரை எழுதுதல் போன்றவற்றில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி வந்தவர். இவரது அபார திறமை காரணமாக அக்காலகட்டத்தில் இந்து சமயத் துக்கான ஆசிரியர் ஆலோசகராக நியமிக்கப்பட்டார். பின் தமிழ்த் துறை உதவிப் பணிப்பாளராகி இந்து கலாசார அமைச்சின் மேலதிக பணிப்பாளராக நியமனம் பெற்றார். இவற்றிலிருந்து ஓய்வுபெற்றிருக்கும் இவர் தற்போது யாழ். அச்சகத்தில் தமிழ்க் கல்வி நூல்களுக்கான நிபுணத்துவ ஆலோசகராக இருக்கின்றார். அண்மையில் எமது விருந்தினர் பக்கத்துக்காக எமது அலுவலகத்தில் இவரை சந்தித்தோம்.

◀ வர்ஷனி ▶

அதிகமான துறைகளில் பாண்டித்தியம் பெற்றிருந்த இவரிடம் எதைப்பற்றிக் கதைப்பதென்று சற்று குழம்பித் தான் போனேன். இவரது இரத்தத்திலேயே தமிழ்ப் பற்று ஊறியிருந்தமை அவரது பேச்சில் நன்கு தெரிந்தது. நாங்கள் கூறும் ஒவ்வொரு சொல்லுக்கும் அழகான விளக்கத்தைத் தந்த இவரிடம் தமிழ் மொழி பற்றியே உரையாடலாமே என்று எனக்குத் தோன்றியது. காரணம் இன்று எமக்கு அது அவசியமான ஒன்றாகிவிட்டதே.

**இன்று தமிழ் மொழியில் வரலாற்று இலக்கணம் எவ்வாறு இருக்கின்றது?**

‘வயலுக்கு வரம்புபோல இலக்கியத்துக்கு இலக்கணம் என்று நான் சொல்லுவேன். இலக்கணம் என்பது சில வரையறை, கட்டுக்கோப்பு. இலக்கணத்தோடு கவிதை எழுதுவதெல்லாம் மரபிலக்கியங்களுக்குள் வரும். நன்நூலையும் சூத்திரத்தையும் இலக்கணத்துக்காக தேடிப்பிடிக்கும் ஒரு காலம்



படங்கள் : க.மாலா

இருந்தது. துறைபோன வல்லுநர்கள் அதனைப் பாடமாக்கி அதிலுள்ளவற்றை எமக்குக் காட்டினார்கள். அந்தளவு காரணங்கள் எங்களுக்கு எடுத்துக்காட்டுகளோடு சொல்ல முடியாவிட்டாலும் மொழியை அழுத்தம் திருத்தமாக பேசி னாலே போதுமானது. இலக்கணம் தெரியாதவர்கள் அதாவது வேற்று மொழிக்காரர்கள் இலக்கணப் பிழையோடு பேசலாம். நாம் அவ்வாறு பேசலாமா?’ என்று கேட்டவர் இலக்கணத்தோடு தொடர்புபட்ட தன் வாழ்வில் தனக்கு நடந்த ஒரு சுவாரஷ்யத்தை எம்மிடம் பகிர்ந்துகொண்டார். மாமைட் வாங்குவதற்காக கடைக் குச் சென்று மொழி தெரியாமல் சிங்களத்தில் மாமைட் இன்னவாத? (மாமைட் இருக்கின்றாரா) என்று கேட்க சுற்றியுள்ளவர்கள் இவரைப்பார்த்து சிரித்தார்களாம்.

சிங்களத்தில் அது இலக்கணப் பிழை. அதுபோல் அவர்கள் பேசும்போது இலக்கணப் பிழை ஏற்படலாம், நாம் சரியாக பேசவேண்டும். செந்தமிழில்தான் பேச வேண்டும் என்று நான் கூறவில்லை. ஓரளவுக்கு அங்கீகரிக்கப்பட்ட அல்லது உலகமறிந்த சரியான சொற்பிரயோகங்களை பிரயோகிக்கவேண்டும் என்று தான் வலியுறுத்துகின்றேன்’ என்றவரிடம்,

**இலக்கண இயல்புகளின் போக்கு இன்று எவ்வாறு இருக்கின்றது என்று கேட்டேன்.**

‘இன்று அதன் போக்கு படுமோசமாகத்தான் இருக் கின்றது. குறிப்பாக புணர்ச்சிகளை நாங்கள் தவறவிடுகி றோம். ராசிப்பலனுக்கு ‘ராசிபலன்’ என்கிறர்கள். ‘ஆங்கிலத்தில் செய்திகள்’ என்பதை ‘ஆங்கில செய்திகள்’ என்கின்றனர் இப்படி நிறைய சொற்பிழைகள் பொருட்பிழைகளை ஏற்படுத்துகின்றன. நற்சிந்தனைகள் என்று கூறுகிறார்கள். அப்போது துர்சிந்தனைகள் என்று இருக்கின்றனவா? சைவ சிந்தனைகள், இஸ்லாமிய சிந்தனைகள் என்று கூறலாமே..? இலக்கணம் மொழியை மாசுபடுத்தாமல் இருப்பதற்குத்தான் வந்தது.

இலக்கணம் இவ்வாறுதான் இருக்கவேண்டும் என்று வகுத்து வைத்திருக்கிறார்கள். அந்த வகுப்பினைத் தெரிந்து வைத்துக்கொண்டு இலக்கியம் படைப்பவர்கள் மரபு சார்ந்த கவிஞர்கள் எனப்படுவர். இதையெல்லாம் விட்டு விட்டு ‘அழகியவள், அதரங்கள் சிவந் தன. கடைக்கண்ணால் என்னைப் பார்த்தாள். அவளை வாரி அணைக் கத் தூண்டியது என் மனம்.. அருகே சென்றேன். ச்ச்ச்... நாணி தலை குனிந்தாள்’ என்று எழுதுகிறார்கள்? என்ன இது? ‘சொற்றுணை வேதியன் சோதி வானவன்’ என்று எவ்வளவு அழகாக அன்று பாடியிருக் கின்றார்கள். மரபு பாடல்களில் சந்த அமைதி, எதுகை, மோனை என அழகாக இருக்கும். அவற்றை நாங்கள் புதுக்கவிதைகளிலே, நவீன இலக்கியங் களிலே காணமுடியாது. இப்படித்தான் இப்போது போய்க்கொண்டிருக்கின்றது’ என்று தமிழின் நிலைகுறித்து வருந்தி னார்.

> ‘அழகியவள், அதரங்கள் சிவந்தன.. கடைக் கண்ணால் என்னைப் பார்த்தாள். அவளை வாரி அணைக்கத் தூண்டியது என் மனம்.. அருகே சென்றேன். ச்ச்ச்.... நாணி தலைகுனிந்தாள்’’ என்று எழுதுகிறார்கள். என்ன இது...?

**அதுமட்டுமல்ல. இன்று தமிழில் பிறமொழிகள் கலந்து பெரும் அட்ட காசமே நடத்துகின்றன. போகும் போக்கைப் பார்த்தால் எதிர்காலத்தில் எங்குபோய் முடியுமென்று தெரியவில்லை. இது தொடர் பான அவரது அபிப்பிராயத்தைக் கேட்டேன்.**

உடனே ஒரு உதாரணத்துடன் ஆரம்பித்தார். ‘யாழ்ப் பாணத்தில் ஒரு சிறுவன் தந்தையுடன் சைக்கிள் டயர் ஒட்டுவதற்குச் செல்கின்றான். சைக்கிள் டயர் ஒட்டும் இடத் தின் பெயர் ‘தாசன் ஒட்டகம்’ என்றிருக்க உடனே பையன் கேட்டான். ‘அப்பா ஒட்டகம் பாலைவனத்தில்தானே இருக்கின்றது. இங்கு எப்படி வந்தது’ என்று... இப்படி சில விசயங்கள வில்லங்கமா தமிழ்ப்படுத்த போகக்கூடாது. ஒரு பண்டிதரின் வீட்டில் அவரது தாய் கிணற்றில் விழுந்து இறந்துவிட்டார். பண்டிதர் தெருவில் சென்று ‘ஐயோ...! என்றாய் கூவலிலே... வம்மின் வம்மின்’ என்றாராம். அதற்கிடையில் தாய் செத்துப்போச்சுது. இப்படி ஒரு நகைச்சுவைக் கதை இருக்கின்றது. ஆகவே, எமது மொழிப்பிரயோகம் மற்றவர்களுக்கு விளங்கக் கூடிய வகையில் இருக்கவேண்டும். சில இடங்களில் தேவை கருதி பிறமொழி சொற்கள் பயன்படுத்தப்பட்டு வந்தால் நாங்கள் அதிலிருந்து தப்பிக்கொள்ள முடியாது. அந்நிய மோகம்தான் எல்லாவற்றுக்கும் காரணம். ஆரோக்கிய மான சில சொற்களை நாங்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆரம்பத்தில் யாழ்ப்பாணத்துக்குச் சென்று பேரூந்து நிலையம் எங்கு இருக்கின்றது என்று கேட்டால் எல்லோருக்கும் தெரியும். இப்போது சென்று கேட்டுப்பாருங்கள். கார ணம் பஸ் என்பது பழக்கப்பட்டு வந்துவிட்டது’ என்று தன் கருத்தைக் கூறினார்.

**தமிழ் மொழியின் இன்றைய நிலை பற்றிக் கூறுங்களேன்.**

‘பாடசாலையில் கட்டாயம் ஒரு பாடவேளை தமிழுக்கு ஒதுக்க வேண்டும் என்பது அரசாங்கச் சட்டம். அது எம் தாய் மொழியா யிற்றே. ஒருவன் தன் சுயமொழி யிலே சிந்தித்து எழுதுகின்ற பொழுது அவனுக்கு அவனுடைய கல்வி ஆற்றல் அல்லது அவன் கூறுகின்ற விசயங்கள் அதிகமாக வரும். அப்படி ஒரு தாய் மொழித் திட்டம் வந்தும் இன்று சர்வ தேச பாடசாலைகளில் எமது பிள்ளைகள் கற்றுக்கொண்டிருக் கின்றனர். ஆங்கிலம் பேசுபவ னுக்குத்தான் சமூகத்தில் அந்தஸ்து உண்டு என்று தமிழ் மக்களிடையே ஒரு மையல் இருக்கின்றது. நல்லா உழைக்கலாம் என்றும் நம்புகின்றனர். உண்மைதான். ஆனால் இப்படியே நாங்கள் தொடர்ந்தோமானால் தமிழ் மொழியை எமது பிள்ளைகள் இழக்கும் காலம் வந்து விடும். இன்று வாசிப்பதற்கே சந்தர்ப்பம் இல்லையே. பாடசாலை மட்டத்திலும் அது இழக்கப்படுமானால் எங்கள் தமிழுக்க ஒரு ஆபத்தான நிலை ஏற்படும். சிலருக்கு சில எழுத்துக்களே தெரியாது. பிறகு என்ன செய்வது’ என்று ஆதங்கப்பட்டார்.

**இதற்கு இன்றைய ஊடகங்களின் செல்வாக்குதான் காரணம் என்று கூறலாம். காரணம் எம்மவர்கள்**




**மத்தியில் இன்று வாசிப்புப்பழக்கம் வெகுவாக அருகிக்கொண்டு வருகின்றது. கணனியை நம்பி நம் இளசுகள் சோம்பேறிகளாகி விட்டனர். இது பற்றி அவரிடம் கேட்டேன்.**

'கணனி வந்தபிறகுதான் கலாசார சீரழிவு அதிகமாக நடக்கின்றது. உலக மயமாக்கல் என்று நினைத்துக்கொண்டு எங்களை படுபயங்கர படுகுழியில் கொண்டு தள்ளப் போகின்றார்கள். கணனி, தொலைக் காட்சி, வானொலி எல்லாமே வாசிப்பதற்குத் தடையாக இருக்கின்றன. நேரம் கிடைப்பதில்லை. அத்தோடு பாடசாலை மட்டங்களில்கூட வாசிப்பு அறிவை வளர்ப்பதற்கான வசதி வாய்ப்புகள் இல்லை. அதற்கான திட்டங்கள் ஏற்படுத்தப்படவில்லை. வாசிக்க நேரமில்லை என்பது ஒரு புறம். அதற்கான அவசரமான நாகரீகமான வாழ்க்கை ஒருபுறம். விஞ்ஞான தேடல்கள், கண்டுபிடிப்புகளை கணனியிலேயே படித்துக் கொள்ளலாம் என்றிருக்கின்றார்கள்.

பிள்ளைகளுடைய பொழுதுபோக்கு இன்று திசை திருப்பப்பட்டிருக்கின்றது. வாசிப்பதை பெற்றோர்கள், ஆசிரியர்கள்கூட ஊக்குவிப்பதாகத் தெரியவில்லை. பிள்ளைகளுக்கு வாசிக்க சந்தர்ப்பம் இல்லை. ஒரு கட்டுரை எழுதச் சொன்னால் அவர்கள் இணைத்தில் பார்த்து விட்டு அப்படியே கொப்பி அடிக்கிறார்கள். பானையில் இருந்தால்தானே அகப்பையில் வரும். அப்படி வரவேண்டு மென்றால் அவன் நிறைய வாசிக்க வேண்டும். வாசிக் காதவனாக இருப்பவனை படித்தவனாக ஏற்றுக்கொள்ள முடியாது. வாசிப்பை இன்று நாம் இழந்துகொண்டு போகிறோம்' என்று உண்மையைக் கூறினார்.

**இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் இன்று தமிழ் மொழிப் பிரயோகம் எவ்வாறு இருக்கின்றது?**


'எழுத்து ஊடகங்களாக நீங்கள் இன்று நின்று நிலைப்பதற்கு உங்களை நான் பாராட்டுகின்றேன். வானொலி, தொலைக்காட்சிகளைவிட எழுத்து ஊடகங் களான நீங்கள்தான் இன்று தமிழ்ப் பணியை சரிவர செய்கின்றீர்கள்என்றுநான்கூறுவேன். விஞ்ஞானத்தோடு நாங்கள் போட்டிபோட வரவில்லை. அது முடியாது. எங்கள் தமிழை வளர்ப்பதற்கு எழுத்து ஊடகங்கள்தான் தேவை. சினிமாத் தாக்கமும் ஒருவிதமான பறங்கிக் கலாசாரமும் நாகரிக மோகமும் தாக்கப்பட்டதாக இன்றைய இலத்திரனியல் ஊடகங்கள் ஆகிப்போய்விட்டன.

தமிழ்மொழியை இன்று வர்த்தக மயப்படுத்தி அதனை ஊடகமயப்படுத்திவிட்டார்கள். இது எமக்கு ஆபத்தைத்தான் தரும். தொலைக்காட்சி ஊடகங்களில் இதனை நாகரீகம் என்று நினைத்துக் கொண்டு செய்கின்றார்கள். இதற்கு காரணம் என்னவென்று சொன்னால் இந்த இளசுகள் சினிமா தாக்கம் காரண மாகவும் மேலைநாட்டு கலாசாரம் காரணமாகவும் அதைத்தான் விரும்பு கிறார்கள். அதில் ஒரு எடுப்பும் ஒரு கவர்ச்சியும் இருப்பதாக நினைத்துக் கொண்டு அதனை பயன்படுத்தப் பார்க்கி றார்கள். தேசிய வானொலிகள் அல்லது தேசிய தொலைக்காட்சிகளில் அது தவிர்க்கப்படுவதை நாங்கள் ஓரளவு காணலாம்'

**இதற்கு என்ன செய்யலாம்?**

'எல்லா ஊடகங்களும் தங்களுக்குள் கருத்தொருமித்து தமிழை வளர்க்கவேண்டும். பிரசாரம் செய்துகொண்டே மாற்ற வேண்டும். எவ்வாறு நல்ல சொற்களை பேச வேண்டும், எவ்வாறு அதற்கு அங்கீகாரம் கொடுக்க வேண்டுமென ஆராய்ந்து ஊடகங்கள் அதற்கு முன்னு ரிமை கொடுக்கவேண்டும். 'இருக்கிறாங்க', 'போறாங்க', 'வாறாங்க', 'ஹாய்!' என்று கூறுகின்றனர். இது எங்கு போய் முடியும்? இதை மாற்றவேண்டும். அது காலத்தின் தேவை. இப்போ இந்த இரவுநேர நிகழ்ச்சிகளிலெல்லாம் பெண்களும் ஆண்களும் சேர்ந்து தங்களுடைய சொந்தக் கதைகளையும் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். அதெல்லாம் ஒரு வகையான கலாசார சீரழிவு. எனவே ஊடகங்கள்தான் 'இதை நாங்கள் எல்லாம் திருத்தப்போகி றோம். இதற்கு எல்லோரும் சேர்ந்து ஒத்துழையுங்கள் என்று களத்தில் இறங்க வேண்டும்' என்று நல்லதோர் முடிவை முன்வைத்தார்.

ஒரு காலத்தில் அகிலமெங்கும் ஆட்சிமொழியாக இருந்தது தமிழ் மொழி என்று வரலாறு கூறுகின்றது. பரிஸ் நகரத்திலே உலகத்து மொழிகள் சம்மந்தமாக செய்யப் பட்ட ஆய்வில் இன்னும் 100 ஆண்டுகளின் பின் வாழப் போகும் மொழிகளில் தமிழ் மொழி இல்லை என்று கூறியி ருக்கின்றார்கள். இது எமது தமிழ் மொழிக்கு அடிக்கப் பட்டிருக்கும் அபாய சங்கு. இப்போதே நீதி மன்றங்களிலும் நிறுவனங்களிலும் ஆலயங்களிலும் தமிழ் இல்லாமல் போய்க்கொண்டிருக்கின்றது. எஸ்.எம்.எஸ். கலாசாரம் இன்று தந்தி சேவையையும் நிறுத்திவிட்டது. இன்னும் சிறிது காலத்தில் கடித சேவைகளும் நிறுத்தப்படலாம். இப்படி இருக்கும்போது அடுத்த தலைமுறையினர் தமிழை எழுத, படிக்கத் தெரியாதவர்களாக இருந்தால் அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. அடுத்த தலை முறைகள் இப்போதே ஆங்கில மொழிக்கு தங்களை அர்ப்பணம் செய்துகொண்டிருக்கின்றனர். போதாக் குறைக்கு தமிழை அழிப்பதுவே தம் தலையாய கடமை என்பது போல சில வானொலிகளும் தொலைக்காட்சி களும் தமிழைக் குத்திக் கிழித்து குதறித் துப்பி நிகழ்ச்சி களை நடாத்துகின்றன. இன்று தமிழ் மொழியின் நிலை எவ்வாறு உள்ளது என்பதை ஒவ்வொரு தமிழ் மகனும்



சற்றுச் சிந்திக்க வேண்டும். பழங்காலம் முதற்கொண்டு இன்றைய காலம்வரை சகல சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த தமிழ் மொழி இன்று பிறமொழிகளின் தாக்குதல்களில் சிக்குண்டுதிணறிக்கொண்டிருக்கின்றது. தமிழன் என்னும் தன்மானமுடைய அனைவரும் இதனைக் கருத்திற் கொண்டு தமிழை வளர்க்க ஆவண செய்ய வேண்டும். அதுதான் எம் தாய்மொழிக்கு நாம் செய்யும் தலையாய கடமையாகும்

---

## கல்லறைத் தோட்டம்

கல்லறைத்
தோட்டங்களில்
எல்லாம் பௌத்த கோயில்கள்
முளைத்திருக்கின்றன
எம் புன்னகைகளை
புதைத்துக்கொண்டு

விட்டுச் சென்ற
மண் மேடுகள்
அத்தனையும்
பத்திரமாக
இருக்கின்றன

எம்மூர்களில்
வீடு கட்டத்தான்
பலருக்கு
கைகளில்லை

எம் வீட்டுத்
தோட்டத்தில்
எதிர் தேசத்து
அணில்கள்
பழம்
சாப்பிடுகின்றன.

- மருதோடை நிலா




## இயலாமை

மந்திரிக்கு
நாங்கள் ஒன்றுதான்
போட்டோம்
வாக்குச் சீட்டிலே
பதிலுக்கு அவர்
மூன்று போட்டார்
எங்கள் நெத்தியிலே

பின்னர்தான் புரிந்தது
மனிதரில் இருந்து
மந்திரியை தெரிந்தெடுத்தோம்
மந்திரியில் இருந்த
மனிதனைத் தொலைத்து
விட்டோமென...

மட்டுவில் ஞானக்குமரன்




## ஒற்றுமைக்கான உறவுப்பாலம் 2011

'லக்ஸ்டோ' அமைப்பினால் எதிர்வரும் 26.06.2011 காலை 09.00 மணிக்கு சாய்ந்தமருது அல்-ஹிலால் பாடசாலையில் 'ஒற்றுமைக்கான உறவுப்பாலம் 2011' எனும் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சப்னா அமீனின் 'நிலாச்சோறு', ஏ.எல்.அன்சாரின் 'உன்னை நினைப்பதற்கு' எனும் கவிதைத் தொகுதிகள் வெளியிடப்படவுள்ளன.

அன்றையதினம் கலை நிகழ்ச்சியும் கலைஞர்களுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வுடன் கவியரங்கமும் இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.பீர் முஹம்மட் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பலர் அதிதிகளாக கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

# குழந்தைகளுக்கு பாதுகாப்பான KidZui இணைய உலாவி

The Internet for Kids

இன்று குழந்தைகளும் இணையத்தில் உலா வரத் தொடங்கிவிட்டனர். எல்லா விடயங்களும் கலந்திருக்கும் இணையத்தில் தம் குழந்தைகள் ஆபாசத் தளங்கள், தேவையில்லாத வன்முறைத் தளங்கள், சட்டிங் போன்றவற்றில் போய்விடக்கூடாது என்பது பெற்றோர்களின் எதிர்பார்ப்பு.


குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட இணைய உலாவியான Kidzuiஜப் பயன்படுத்தினால் பெற்றோருக்கு குழந்தைகள் மீதான பயம் போய்விடும். இணைய உலகத்தில் குழந்தைகள் நுழைய சரியான உலவியாக இருக்கிறது இந்த உலவி. இதை உருவாக்கியவர்கள் பல மில்லியன் தளங்கள், வீடியோப் படங்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றை இணைத்திருக்கிறார்கள். அதுவும் நிர்வாகிகளால் பலமுறை சோதனை செய்யப்பட்டு பாதுகாப்பானவை என்ற பின்னரே இதில் இணைக்கப்பட்டிருக்கின்றன.




இதில் குழந்தைகள் பாதுகாப்பான யூடியூப் வீடியோக்களை மட்டுமே காணமுடியும். மேலும் ஏராளமான விளையாட்டுக்களை இணைத்திருப்பது குழந்தைகளை மகிழ்ச்சியடையச் செய்யும். அது மட்டுமல்ல, குழந்தைகள் எவற்றைப் பார்த்தார்கள் என்பதைப் பற்றிய வாராந்த அறிக்கையும் நமக்குக் கிடைக்கும்.

இதில் முதலில் பெற்றோர்கள் தங்களது கணக்கை உருவாக்கி குழந்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கான (Parental Controls) அமைப்பை செய்துகொள்ள முடியும். இந்த உலாவியை மட்டுமே குழந்தைகள் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லிவிட்டால் கணனியில் வேறெங்கும் போகமுடியாது. நம் குழந்தைகள் எதிர்காலத்தில் நற்பிரஜையாக உருவாக இது நல்ல முறை.


தரவிறக்கச்சுட்டி: http://www.kidzui.com/download/




# ஒரே நேரத்தில் பல 'ஸ்கைப்' கணக்குகளைப் பயன்படுத்தலாம்

Voive Over IP என்ற தொழில்நுட்பத்தில் இயங்கும் ஸ்கைப் சேவையை இன்று உலகளாவியரீதியில் பயன்படுத்துகின்றனர். ஆனால், இந்த சேவையில் ஒரு நேரத்தில் ஒரு பயனர் கணக்கைத்தான் பயன்படுத்த முடியும்.

உங்களுக்கு ஒரே நேரத்தில் பல ஸ்கைப் கணக்குகளில் நுழைய வேண்டும் என ஆசைப்பட்டால், அதற்கு Multi Skype Launcher எனும் ஒரு இலவச மென்பொருள் உதவுகிறது. இதன்மூலம் ஒரே கணனியில் பல ஸ்கைப் கணக்குகளில் நுழைந்து பல நண்பர்களிடம் பேசமுடியும்.




இந்த மென்பொருளைத் தரவிறக்கி, நிறுவிவிட்டு தங்களது கணக்கில் முதலில் நுழையவும். பின்னர் ADD என்பதைக் கிளிக்செய்து பல கணக்குகளை சேர்த்துக் கொண்டு பயன்படுத்தலாம். இது வெறும் 1.7 MB அளவுடைய இலவச மென்பொருளாகும்.

தரவிறக்கச்சுட்டி: http://multi-skype-launcher.com/

# மின்னஞ்சலில் விளையாட்டுக்கள்

*இப்போது மின்னஞ்சலில் இருந்து கொண்டே செஸ் விளையாடலாம் என்றால் நம்புவீர்களா? கணனி விளையாட்டுக்களை விளையாட வேண்டுமாயின் அவ்விளையாட்டுக்களை கணனியில் நிறுவவேண்டும். ஆனால், இதற்கு அந்த அவசியமே இல்லாமல் இத்தளத்திற்குச் செல்லுங்கள்.*

*இணையத்தள முகவரி:* http://mailgames24.com/en-US/




*முதலில்* Start Game *என்ற பொத்தானை சொடுக்கி நமது பெயர் மற்றும் மின்னஞ்சல் முகவரியைக் கொடுத்து அங்கு இருக்கும்* Start Game *என்ற பொத்தானை சொடுக்கினால் போதும். சில நிமிடங்களில் விளையாட்டு நமக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுவிடும்.*

*அடுத்து நம் மின்னஞ்சல் திறந்து அங்கு கொடுக்கப்பட்டிருக்கும் படத்தைப் பார்த்து எங்கு நகர்த்த வேண்டுமோ அதற்கான* Row *மற்றும்* Column*க்கு உண்டான எண்ணையும் தேர்ந்தெடுத்து* Reply *என்பதை சொடுக்கி அனுப்பவேண்டும். உடனடியாக நமக்கு அடுத்த மின்னஞ்சலில் அடுத்த* Move *அதற்கு இணையான படமும் வரும். செஸ் விளையாட்டு மட்டுமல்ல இத்தளத்தில் உள்ள அத்தனை விளையாட்டுகளையும் மின்னஞ்சலில் விளையாடலாம்.*





# Youtube வீடியோக்களை GIF அனிமேஷனாக்கலாம்

மிகப் பிரபலமான வீடியோ தளமான YOUTUBE தளத்தில் ஏகப்பட்ட வீடியோ காட்சிகள் உள்ளன. இத்தகைய வீடியோக்களில் இருந்து மிக சுவாரஸ்யமான காட்சிகளை வெட்டி GIF அனிமேஷன்களை உருவாக்கலாம்.

இணையத்தள முகவரி: http://www.gifsoup.com/

இத்தளத்தில் உங்களை பதிவு செய்துகொண்ட பின்னர் YOUTUBE தளத்திற்குச் சென்று நீங்கள் அனிமேஷனாக மாற்ற விரும்பும் காட்சி கொண்ட வீடியோவின் URL கோடிங்கை கொப்பி செய்து GIF SOUP தளத்தில்சென்று CREATE ANIMATED GIFS FROM YOUTUBE VIDEO என்பதை கிளிக்செய்து கொள்க. பின்னர் URL கோடிங்கை அதன் Boxஇல் Paste செய்து CREATE GIFTS என்பதை கிளிக் செய்யவும்.







பின்னர் உங்கள் வீடியோவில் அனிமேஷனாக மாற்ற விரும்பும் பகுதியை START TIME, END TIME என்பவற்றின் மூலம் தெரிவுசெய்து கொண்டு CATEGORY, TITLE என்பவற்றை அதற்கான பெட்டியில் வழங்கி APPLY என்பதை கிளிக் செய்யவும். அதன்கீழ் உங்கள் வீடியோ அனிமேஷனாக மாற்றம்பெறும். நீங்கள் வடிவமைத்ததை Preview செய்து பார்க்கலாம். பின்னர் FINISH என்பதைக் கிளிக் செய்தால் நீங்கள் வடிவமைத்த அனிமேஷன் தோன்றும்.

அதன்கீழ் தரவிறக்கம் செய்யவும் மற்றும் லிங்க் மூலம் நண்பர்களுடன் பகிர முடிவதுடன் HTML கோடிங் மூலம் இணையத்தளங்களில் பயன்படுத்த முடியும். அத்துடன் ஏற்கனவே செய்யப்பட்ட பல அனிமேஷன்களையும் பெற்றுக் கொள்ளமுடியும்.




# கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட பிரேமகாந்தி


கொலைசெய்யப்பட்ட லேகம்லாகே பிரேமகாந்தி

மிகிந்தலை என்றதும் சட்டென்று ஞாபகத்துக்கு வருவது ரஜமஹா விகாரைதான். பௌத்த மக்களின் இந்த வணக்கஸ்தலம் அங்கிருப்பதால் மிகிந்தலை புனித நகராக கருதப்படுகின்றது. இப்படிப்பட்ட புனித நகரத்தில் யாரும் எதிர்பார்க்காத வகையில் ஒரு கொலை வெறி நடத்தப்பட்டிருக்கின்றது.

கடந்த மாதம் 21 ஆம் திகதி இரவு கூர்மையான கத்தி ஒன்றினால் ஒரு பெண் கழுத்து வெட்டப்பட்டு கொத்தான வீதியில் உள்ள மஹகந்தலாவ ஓடையில் வீசப்பட்டுக் கிடந்தார். இக்கோரக் கொலை மிகிந்தலை நகரையே பரபரப்புக்குள்ளாக்கியது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். மரணவிசாரணையின் போது குறித்த பெண் 51 வயதான பாலசூரிய லேகம்லாகே பிரேமகாந்தி என்று தெளிவாகியது. சுமாரான தோற்றமுடைய இப்பெண்மணி, திவிலபிட்டி



பொலிஸ் பகுதியிலுள்ள வாதுராகொட ரஸபாத்த என்ற இடத்தில், 125 ஆவது இலக்க வீட்டில் வசித்து வந்தார். பாலசூரிய லேகம்லாகே ஜயதிலக (54) என்ற பெயருடைய இவருடைய கணவன் ஒரு சாஸ்திரக்காரர். அதிகமான மது பாவனையால் அவரும் கடந்த மாத ஆரம்பத்தில் இறந்துவிட்டார்.

குறித்த பெண்மணி இரண்டு திருமணங்கள் செய்துகொண்டவர். முதலாவது கணவருக்குக் கிடைத்த மூன்று குழந்தைகளையும் விட்டு விட்டுத்தான் இரண்டாவது திருமணத்தைச் செய்துள்ளார். அந்தத் திருமணத்திலும் அவருக்கு இரண்டு குழந்தைகள். ஆனால் இவர் நிம்மதியான வாழ்க்கை வாழ்ந்ததாகவே கூறப்படுகின்றது.

இவர் இரண்டாவது கணவருடன் வாழ்ந்த காலப்பகுதியில் 22.01.2009 அன்று 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பணத்தை நிரந்தர வைப்புப் பணமாக திவுலப்பிட்டிய மக்கள் வங்கியில் வைப்பிலிட்டுள்ளார். தனது கணவன் ஜயதிலகவின் மரணத்தின் சில நாட்களின் பின்னர் அந்தப் பணத்திலிருந்து 3 இலட்சம் ரூபாவை பிரேமகாந்தி மீளப்பெற்றுள்ளார்.

கணவரின் மரணத்திற்குப் பிறகு குடும்பத்தில் ஏதாவது பிரச்சினை ஏற்படும் என நினைத்து அவர் அந்தப் பணத்தை எடுத்திருக்கலாம் என்று பொலிஸார் நம்புகின்றனர். அந்தப் பணத்தை எடுத்து வேறொரு வங்கியில் வைப்புச் செய்துள்ளார். கடந்த மாதம் 20ஆம் திகதி ராகம வைத்தியசாலைக்குச் சென்ற பிரேமகாந்தி கணவனின் மரண அத்தாட்சிப் பத்திரத்தையும் திவுலப்பிட்டிய வங்கியில் வைத்துள்ள 3 இலட்சம் ரூபா பணத்தையும் எடுத்துக்கொண்டு அன்று மாலை ரஸபான கிராமத்தில் உள்ள தனது வீட்டுக்கு வந்துள்ளார்.

அவரது இரண்டாவது திருமணத்தில் கிடைத்த இரண்டு பிள்ளைகளில், மூத்தவள் நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள். இந்நிலையில் பக்கத்து வீட்டிலிருக்கும் பெண்மணியை மகளுக்குத் துணையாக வைத்துவிட்டு மறுநாள் காலை காணியொன்றை வாங்க வேண்டும் என்று குறித்த பெண்மணி குருநாகலுக்குச் சென்றுள்ளார்.

## மிகிந்தலையை உலுக்கிய பரபரப்புச் சம்பவம்

வீட்டை விட்டு சென்ற அவர் மிகிந்தலை மஹக்கந்தலாவ ஓடையில் பிணமாக மிதந்துள்ளார். முக்கியமான விடயம் ஒன்றுக்காக மிகிந்தலைக்குச் சென்ற மிகிந்தலை பிரதேசசபையின் உபதலைவரான லால் செனவிரத்ன உயிரற்ற அந்த பெண்மணியின் உடலைக்கண்டுவிட்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இக்கொலை சம்பந்தமான குற்றவாளியைப் பிடிப்பதற்காக பொலிஸார் உடனடியாகவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்தப் பெண்ணைக் கொலை செய்வதற்காக பயன்படுத்திய கத்தியை ராகமையிலிருந்து பொலிஸார் கண்டுபிடித்தனர். பொலிஸார் அங்கே சென்றபோது அப்பெண்ணின் சடலம் குப்புறக் கிடந்துள்ளது. அந்தப் பெண்மணி பாவித்த கைப்பையும் சற்றுத் தொலைவில் இருந்து பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த இடத்தில் பெண் இரவில் அணியும் உடையொன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த உடை இந்தப் பெண்மணியினுடையதா என்று இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. கைப்பையில் இருந்த ஐந்து வங்கிப் புத்தகங்களும் அடையாள அட்டையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இன்னும் பல விதமான சாட்சிகளும் தடயங்களும் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளன. கைப்பை இருந்த இடத்தில் இரத்தத் தடயங்களும் இருந்தன. அதேநேரம் குறித்த பெண்ணின் இரண்டு கைகளிலும் வெட்டுக்காயங்கள் ஏற்பட்டிருந்தன. அவளது இடது கை கமக்கட்டுப் பகுதியில் கத்தியால் வெட்டப்பட்ட காயம் இருந்ததாக மரண விசாரணைகளின்போது தெரியவந்தது.

தேடுதலின்போது கந்தளாவ ஓடையில் மிதந்து கொண்டிருந்த ஹெல்மெட் ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. விசாரணைகளைத் திசை திருப்புவதற்காக கொலைகாரர்கள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கலாம் என பொலிஸார் கருதுகின்றனர். பிரேத பரிசோதனையின் பின் உடல் அப்பெண்ணின் மூத்த மகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இக்கொலை தொடர்பாக குறித்த பெண் தங்கியிருந்த வீட்டுப்பகுதியில் வசிக்கும் பலரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

◀ மனோலி சுபசிங்க ▶
◀ நாகாமத்தான் ▶

உயர்பொலிஸ் அதிகாரியான ஜயந்த கமகேயின் ஆலோசனையின் பேரில் விசாரணைகள் நடைபெற்று வருவதாக மிகிந்தலை பொலிஸ் அதிகாரி சுஜீவ ஜிநேந்திர தெரிவித்தார். வடமத்திய பகுதிக்குப் பொறுப்பான உயர் அதிகாரியான ஜயந்த சமரகமகே, உதவி பொலிஸ் அதிகாரி கித்ஸ்ரீ தயாகந்த, உயர் பொலிஸ் அதிகாரி நந்தன விஜயரத்ன, துணைப்பொலிஸ் அதிகாரி ராஜவிக்கிரம நாயக்க ஆகியோரின் ஆலோசனையின் பேரில் மிகிந்தலை பொலிஸ் அதிகாரி சுஜீவஜிநேந்திர மேற்படி விசாரணைகளை நடத்திவருகின்றார்.

CRIME REPORT

இந்தப் பெண்மணியிடமிருந்து பணத்தை பெற்றுக்கொள்ள முடியாததால் திட்டமிட்டு இந்தக் கொலையைச் செய்தார்களா அல்லது வேறு ஏதாவது காரணங்கள் இருக்கின்றனவா என்று பொலிஸார் விசாரணைகளை துரிதப்படுத்தியுள்ளனர். இந்தக் கொலை சம்பந்தமான மேலும் விபரங்களும் பிரேமகாந்தியின் வாழ்க்கை ரகசியங்களும் எதிர்காலத்தில் தெரிய வரலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எது தெரியவந்தாலும் இறந்து போன பிரேமகாந்தி உயிருடனா வரப்போகிறார்? இல்லை. அதனால் இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பங்களை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்றுதான் சிந்திக்கவேண்டியுள்ளது. அத்தோடு கொலையாளிகளும் பொலிஸாரின் கவனத்தை திசைதிருப்பும் நடவடிக்கைகளை செய்துள்ளனர். ஆகவே, அவர்களை தந்திரமாக அணுகி தகுந்த பாடம் புகட்டவேண்டும்.

இக்காலங்களில் ஆயிரம் இரண்டாயிரத்திற்கும் உயிரை பலியெடுக்கும் கூட்டங்களும் இருக்கத்தான் செய்கின்றன. அவ்வாறான நிலையில் ஒரு பெண் இலட்சக்கணக்கான பணத்துடன் தனியாக வீட்டை விட்டு வெளியேறும்போது அவரது உயிருக்கு என்ன உத்தரவாதம்? ஆகவே, இவ்வாறான விடயங்களை முடியுமானவரை தவிர்த்துக் கொள்ள வேண்டும் ●

## ◀ சிலோன் சின்னத்தம்பி ▶

*வணக்கம் பாருங்கோ! எப்பிடிச் சுகமா இருக்கிறியளே...?*

*வரவர ஊரில திருட்டுக் கூடிட்டுது பாருங்கோ, சனங்களிண்ட நகைகளைத் தான் அடிக்கிறாங்கள் எண்டு பாத்தா இப்ப சாமியையும் விட்டுவைக்கிறாங்கள் இல்ல பாருங்கோ. குடாநாட்டில சனம் கிலியால உறைஞ்சுபோய்க்கிடக்குதுகள். வெளிய இருந்து பிசினஸ் எண்டு வாறவையள்ண்ட கைங்கரியம்தானாம் உது எண்டு அண்டைக்கு பொலிசுகாரப் பெடியொண்டு எனக்குச் சொன்னது கண்டியளே. அவங்களுக்கு நல்லாத் தெரியும் பாருங்கோ, எங்கட சனங்கள் நகைகள் சேக்கிறதில வலு விண்ணரெண்டு. அதுமட்டுமில்ல கோயில்களில சாமியும் என்ன சும்மாவே...? கோயிலுக்கு போறதெண்டாலும் எங்கட சனங்கள் சும்மாவே போகுதுகள் கை, கழுத்தெல்லாம் அடுக்கிக்கொண்டெல்லோ போகுதுகள். இப்புடித்தான் பாருங்கோ அண்டைக்கு குப்பிளான் வடக்குக் கடற்கரை கற்பக விநாயகர் ஆலயத்தில சாமிக்குச் சாத்தின நகைகள ஆட்டையப் போட்டுட்டாங்கள். கோயில் கூரையைப்பிய்ச்சு உள்ள இறங்கினவையள் விக்கிரகத்தோட சேர்த்து பெயர்த்தெடுத்து போட்டினமாம் பாருங்கோ. பத்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் களவுபோட்டுதெண்டு அயல் சனங்கள் கதைக்குது பாருங்கோ. அதோட விட்டாங்களே...? உண்டியலுக்குள்ளயிருந்த பத்தாயிரம் ரூபாய்க்கும் ஆட்டயப் போட்டுட்டாங்களாம். நகைய அடிக்கிறவங்கள் தாங்கள் மாட்டுப்படாமல் போய்ச்சேரோணுமெண்டு காவலுக்கு சாமியையும் தூக்கிட்டுப் போறதால எங்கட பக்த கோடிகள் கும்பிடுறத்துக்கு சாமி சிலையைத் தேடி அலையினமாம் பாருங்கோ. அதுவும் இனி நாங்கள் வலு அவதானமாய் ஒவ்வொரு விசயத்திலயும் நடக்கோணும் பாருங்கோ.*

*அப்ப நான் போட்டு வரட்டே...!*



'பூமியை வெல்ல ஆயுதம் எதற்கு, பூப்பறிக்க கோடரி எதற்கு...
பொன்னோ பொருளோ போர்க்களம் எதற்கு
ஆசை துறந்தால் அகிலம் உனக்கு...'



# தத்துவ விசாரம்

ஆசை என்பதற்கு மட்டும்தான் மனிதர்கள் ஆசைப்படுவதில்லை. ஆசைப்படுவது மட்டுமல்ல, அவையெல்லாமே தீராத ஆசையாகவும் இருக்கின்றன. ஒருமுறை இருமுறை அனுபவித்தால் போதாது. இயன்ற மட்டும் அனுபவித்து விட்டேன், இனிப்போதும் என்று யாரும் சொல்லுவதில்லை. உணவின்மேல் ஆசை, காசின் மேல் ஆசை, காணி நிலத்தின்மேல் ஆசை, பட்டம் பதவிகளில்மீது ஆசை, அதிகாரத்தை எடுக்கவும் அதனை பிறர்மீது பிரயோகிக்கவும் ஆசை. எங்கள் சமூகங்களிலும் நாட்டிலும் ஏற்படும் சண்டை சச்சரவுகள், யுத்தங்கள் எல்லாவற்றிற்கும் இந்த ஆசை ஒன்றுதான் காரணமாக இருக்கின்றதென்பதை சட்டென சொல்லிவிடலாம்.

இரண்டு குடும்பங்கள் ஒன்றாக வாழத் தொடங்கியவுடனே அவற்றுக்கிடையே ஏற்படக்கூடிய முதல் சண்டை உணவைப் பற்றியதாகும் என்று நேரே சொல்லி விடலாம். எங்கள் ஊர்களில் நடக்கும் காணிச் சண்டைகளினால் முழுக்குடும்ப அங்கத்தவர்களும் கொலையுறும் அவலங்கள் பத்திரிகைகளில் வெளிவருவதைக் காண்கின்றோம். காசைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. கொலை செய்தல் மட்டுமல்ல, அதனைப் பெற்றுக்கொள்வதற்காக எங்களையே நாங்கள் அவலட்சணமான காசு விசுவாசிகளாக மாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கின்றோம். அதிகம் காசு தருகிறார்கள் என்கின்ற அடிப்படையிலேயே எங்கள் வாழ்க்கைத் துணையையும் தீர்மானிக்கத் துணிகின்றோம். பட்டம் பதவியைப் பெறவும் தக்கவைத்துக் கொள்ளவும் வேண்டி அதற்காக ஒரு நிறுவனத்தையே குலைக்கத் தயாராக இருக்கின்றோம். வைத்திருக்கின்ற அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாமல் அதைத் தடுப்பதற்காக ஊர்களை அழித்து லட்சோப லட்சம் மக்களைக் கொன்று குவிக்கவும் தயங்க மாட்டோம் நாங்கள்.




ஒன்றின் மீது ஆசைப்படும்போது அது கிடைத்தவுடனே நாங்கள் நிம்மதியாக வாழுவோம் என்பதும் இல்லை. அந்த ஆசையின் அளவு காரணமாக, எந்த நேரமும், அது எமது கையை விட்டுப் போய்விடுமோ என்கின்ற பயமே எங்கள் நெஞ்சை நிறைக்கின்றது. எனவே எங்கள் வாழ்வின் மிகுதி நடவடிக்கைகள் கையில் கிடைத்ததைப் பாதுகாப்பதில் செலவழிக்கப்படுகின்றன. காசைப் பத்திரப்படுத்தவேண்டும், பெருக்க வேண்டும். பதவியை மற்றவன் எடுக்காமல் அவனை வெட்டிவிட பலதந்திரங்கள்செய்ய வேண்டும். அதிகாரம் எந்தநேரமும் பறிபோய்விடுமோ என்கின்ற பயத்தில் தேர்தல் மோசடிகளில் ஈடுபடுகின்றோம், ஒருவனை உபயோகித்து இன்னொருவனை வெட்டும் சாணக்கிய தந்திரங்களில் நித்தமும் மூளையை விடுகின்றோம். இவையெல்லாம் பற்றி ஒன்றொன்றாக யோசிக்கும்போது நாம் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழும் கணம் ஒன்றுகூட இல்லை என்பது புரிபடும்.

ஆசையைத் துற என சமயத் தத்துவங்கள் போதிப்பதன்கருத்து ஒருவிதமானபற்றுதலும்இல்லாமல் இருப்பது எனத்தான் அனேகமானோர் தவறுதலாக விளங்கிக் கொள்ளுகின்றனர். அதுவல்ல. ஆசைப்படும் மனநிலையிலிருந்து விடுதலை பெறு என்பதே அதன் தத்துவமாகும். ஆசை என்பது எந்த நேரமும் 'எனக்கு அது வேண்டும், இது வேண்டும்' என்கின்ற ஏதோவொரு குறைபாடுள்ள மனநிலையிலேயே எங்களை நித்தமும் வைத்திருக்கின்றது. நாம் நினைக்கின்ற அனைத்தும் இந்தப் பிரபஞ்சத்தினால் எங்களுக்குத் தரப்படுகின்றதாகையால் எங்களுடைய இந்த குறைபாடுள்ள 'வேண்டும் வேண்டும்' என்கின்ற மனநிலையையும் தொடர்ந்து அது தந்துகொண்டிருக்கின்றது. இது வேண்டும் என்று நாம் நினைத்தால் அப்படியான வேண்டும் நிலைமையிலேயே எங்களை வைத்திருக்கின்றது. எனவே எப்பொழுதும் தேவையுடன் இருப்போம், அது கிடைக்காது.

இந்த உலகத்தில் வாழும் சகல மக்களினதும் சகல தேவைகளையும் பூர்த்தி செய்யக்கூடிய அளவு செல்வமும் வளங்களும் இருக்கின்றன. எங்களுக்குத் தேவையான எல்லாமும் இருக்கின்றன என்று முழுத்திருப்தியும் சந்தோசமும் நாங்கள் அடையும் அந்தக் கணத்திலேயே எமக்குத் தேவைப்படும் அந்த அகிலமே நம்முடையதாகின்றது. காசோ, காணியோ, பதவியோ, அதிகாரமோ எல்லாமே எங்களுக்குண்டு என்று நாம் உணரும் அக்கணமே, அந்த நம்பிக்கையில் வாழத் தொடங்கும் அக்கணமே, இந்தப் பிரபஞ்சம் அவற்றையெல்லாம் எங்களுடையதாக்குகின்றது. வாழ்க்கை எவ்வளவு சிம்பிள் பார்த்தீர்களா? அதனால்தான் பூப்பறிக்க கோடரி தேவையில்லை, ஆசையை, அதாவது வேண்டும் என்னும் மன நிலையிலிருந்து விட்டு விடுதலையாகு, எல்லாமே உன் கையில் கிட்டும் எனப்படுகின்றது.

◄ ரிஷி பத்தினி ►




**நூல்: தென்றலின் வேகம்**
**நூலாசிரியர்: வெலிகம ரிம்ஸா முஹம்மத்**
**வெளியீடு: முற்போக்கு கலை இலக்கியப் பேரவை**
**முகவரி:** 21 E, Sri Dharmapala Road, Mount Lavinia, Sri Lanka
**தொலைபேசி:** 077 500 9222
**ஈ-மெயில்:** poetrimza@yahoo.com
**விலை: 150 ரூபா**

இலங்கையின் பெண் எழுத்தாளர்களில் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒருவர்தான் வெலிகம ரிம்ஸா முஹம்மத். வெலிகம மண்ணுக்கு பெருமைசேர்க்கும் முகமாக வெளிவந்திருக்கின்றது இவரது தென்றலின் வேகம் என்ற கவிதைத் தொகுப்பு. மொத்தம் 64 கவிதைகள். அத்தனையும் முத்துக்கள் எனலாம்.

சமுத்திரம் சூழ்ந்த இலங்கைத்தீவிலும் தரித்திரமாய் வந்து பல லட்சம் மக்களைக் காவுகொண்ட சுனாமி தொடக்கம் பெண்களை போகப்பொருளாக பார்க்கிற வக்கிர ஆண்கள், அந்த போராட்டங்களுடன் பெண்களின் கண்களில் ஊற்றெடுக்கம் நீரோட்டம், இன்றைய சமூகத்தில் நிலவும் வர்க்க பேதங்கள் மற்றும் வளர் இளம் கவிஞர்களை உருவாக்கும் காதல் என்ற கருவரை அனைத்தும் இதில் அச்சேறியிருக்கிறது.

தன்னுடைய அனுபவங்களே தன் எழுத்துக்கு ஏணியாக இருந்ததை என்னுள் உற்பத்தியாகி தினமும் வதைத்துக் கொண்டிருந்த சோகத்தீ, நானறியாமலேயே ஓர் சூரியனாய் மாறி என் எழுத்துக்கு வெளிச்சம் பரப்பியபோதுதான் நான் என்னை உணர்ந்தேன், காலம் தந்துவிட்டுப்போன சில ரணங்களும் உலகை வெல்லவேண்டும் என்று நான் பொறுத்துக்கொண்ட வடுக்களும் இன்று உங்கள் கரங்களில் தவழும் வரம் பெற்றிருப்பதை எண்ணி பெருமகிழ்வடைகிறேன் என்று ஆசிரியர் தன்னுரையில் கூறியிருப்பதிலிருந்து, எத்தகைய தாக்கம் இருந்திருக்கும் என்பதை அனுமானிக்க முடிகிறது.


முதல் கவிதையான 'ஆராதனை' என்பது கருவில் உரு கொடுத்த தாய் பற்றியதாகும். தாய் பிரிந்த வேதனையை மிகவும் உருக்கமான முறையில் கவியாக வடித்திருக்கிறார். அடுத்து கண்ணீரில் பிறந்த காவியம் என்ற தலைப்பில் அமைந்திருக்கும் கவிதையானது சமூகத்தில் புரையோடிப்போயிருக்கிற மனித உள்ளங்களின் கறைகளை பிரதிபலிக்கிறது.

விடியலைத்தேடும் வினாக்குறிகள் என்ற கவிதை வர்க்க பேதத்தைஅம்பலமாக்குகிற வரிகளால் புனையப்பட்டிருக்கிறது.

*'இவர்கள் எல்லாம்*
*வறுமைக்கோட்டுக்குள்*
*உங்களால் வரையறுக்கப்*
*பட்டிருந்தாலும்*
*சிறுமைப்பட்டு*
*வாழ்ந்தவர்களல்லர்'*

எனும் வரிகள் பணக்கார வர்க்கத்தின் கீழ்த்தர எண்ணங்களை படம்போட்டுக் காட்டுவது மட்டுமல்லாமல் ஏழைகள்மீது இரங்கக்கூடிய அனைத்து மக்களின் உள்ளங்களிலும் ஊடுருவி நீளமான வலி தரக்கூடியதாக அமைந்துள்ளது. கவிதைகள் அனைத்திலும் கற்கண்டு சொற்கொண்டு இவர் யாத்துள்ள வசனங்கள் இதயத்தை தூண்டில்போட்டு இழுப்பதுடன், எழுத்துநடை எளிமையாகவும் இருக்கிறது. ஒரு கருவை மனதில் விதைப்பதற்கு இலகுவான உத்திகளை கையாள வேண்டும். அது இந்தத்தொகுப்பில் இயல்பாகவே அமைந்திருப்பது ஆறுதலான விடயம்.

மண்ணிலே பெண்ணாய்ப் பிறந்து துன்பங்களை சொந்தமாய் ஏற்று வாழும் அபலைகளின் மனவோட்டத்தை 'புயலாடும் பெண்மை' என்ற கவிதையில் தரிசிக்க முடிகிறது. அகம்சார்ந்த கவிதைகள் மனதில் ஊஞ்சல் கட்டி உலா வருகின்றன. வார்த்தையாடல்கள் எளிய நடையில் அமைந்திருப்பதால் சிரமமில்லாது கவிதைகளை (சு)வாசிக்க முடிகிறது.




பல கவிஞர்களும் பல தடவைகள் எழுதி சலித்த விடயம் என்றாலும் ரிம்ஸாவின் வரிகள் புதியதொரு பரிணாமத்தில் பயணிப்பதைக் காணலாம். இத்தொகுதியில் மனித வாழ்வின் விழுமியங்களை சீர்ப்படுத்தக்கூடிய ஆத்மீகம் சார்ந்த கருத்துக்கள் அடங்கிய கவிதைகளும் உண்டு. 'பாவங்களின் பாதணி', 'உயிர் செய்' என்பன இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். அது தவிர நட்பின் வலிமையை உணர்த்தும் நட்பு வாழ்வின் நரம்பு போன்ற கவிதைகளும் இதில் இடம்பிடிக்கத் தவறவில்லை.

தேசிய பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலி உட்பட இணைய சஞ்சிகைகளிலும், தன் வலைப்பூக்களிலும் எழுதிவரும் ரிம்ஸா முஹம்மத், எதிர்கால இலக்கிய உலகின் நம்பிக்கை நட்சத்திரமாக மிளிர வேண்டும். காத்திரமான பல படைப்புக்களைத் தந்து அவர் பெயர் இன்னும் ஒளிர வேண்டும்.

**- எச்.எப். ரிஸ்னா**

எழுத்தாளர்களே...!
நீங்களும் நூல்களை வெளியிட்டிருந்தால், உங்களுடைய நூலின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள். நிச்சயமாக அவை 'இருக்கிறம்' சஞ்சிகையின் 'ராக்கை' பகுதியில் பிரசுரிக்கப்படும்.

'இருக்கிறம்' வார இதழ்,
03, டொரிங்டன் அவனியூ, கொழும்பு-7
தொலைபேசி: 011 3150836.
மின்னஞ்சல்: irukiram@gmail.com

*அப்பா அவருடைய 5 வயது மகனிடம்...*

*அப்பா: ஏண்டா, அழுவுற? நான் உன் பிரெண்ட் மாதிரி என்கிட்ட சொல்லுடா...*
*மகன்: 'அது ஒண்டுமில்ல மச்சி..., கொஞ்சம் ஹோர்லிக்ஸ் கூடுதலாக் கேட்டதுக்கு உன்ட ஆளு என்ன அடிச்சிட்டா...'*



# வறண்டுபோன பூமியில்

## பச்சை வயல் கனவு

இடிந்து தகர்ந்து போன சுவர்களின் எச்சங்களையும் நீண்டு வளர்ந்துபோன மரங்களையும் பற்றைகளையும் தவிர எதையுமே காணக்கிடைக்கவில்லை வலி வடக்கில். சர்வதேச கரிசனையும் நீதி மன்ற தலையீடுமே வலிவடக்கிற்கான மீள் குடியேற்றத்திற்கு வழிகோலியிருக்கிறது. ஆனால் வலிவடக்கில் மீண்டும் மக்கள் குடியேறி வாழ்வதென்பது வறண்டுபோன பூமியில் பச்சைவயல்கள் பற்றிய கனவு போலவே இருக்கிறது. வலிவடக்கில் மீள் குடியமர்விற்கு அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் மீண்டும் முழுமையாக மீள்குடியமர்வதென்றால் அதற்கு இன்னும் ஒரு வருடம் கூட ஆகலாம். அப்படித்தான் தகர்ந்து போய்க்கிடக்கிறது வலிவடக்கு.

வலி வடக்கிற்கான மீள் குடியேற்றம் கடந்த மாதம் விசேட பூஜை வழிபாட்டுடன் அமைச்சர் பசில் ராஜபக்ஷ மற்றும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உட்பட சில பாராளுமன்ற உறுப்பினர்களும் சமூகமளிக்க உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. அன்றையதினம் வலி வடக்கில் கொல்லன்கலட்டி, நகுலேஸ்வரம், தெல்லிப்பளை, தந்தைசெல்வாபுரம், மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, பழவீமன்காமம் வடக்கு, பழவீமன்காமம் தெற்கு, வறுத்தலைவிளான் ஆகிய பிரதேசங்களில் மீளக் குடியேறலாம் என்று அறிவிக்கப்பட்டது.

உடனடியாகவும் அடுத்தடுத்த நாட்களிலும் தமது சொந்த இடங்களுக்கு சென்று பார்வையிட்ட மக்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளானார்கள். அவர்கள் உண்டு உறங்கி மகிழ்வாய் வாழ்ந்த மனைகள் முழுதாய் இடிந்து தகர்ந்தும் வீடுகளில் கூரையும் கதவும் கதவு நிலைகளும் ஜன்னல்களும் இடித்து அப்புறப் படுத்தப்பட்டும் கிணறுகள் மூடப்பட்ட நிலையிலும் காணப்பட்டன. வலிமிகு போராட்டங்களைத்தாண்டி தங்கள் நிலங்களில் மீளக் குடியமரப்போகிறோம் என்று நம்பிய மக்களின் நம்பிக்கைகள் இடிந்துபோன அவர்களின் வீடுகளைப் போலத்தான் இன்று தகர்ந்து போயிருக்கிறது.

தெல்லிப்பளை இராணுவ காவலரண் தாண்டி சிறிது தூரம் சென்றதுமே இடிந்து போன கட்டடங்கள் கண்ணில் தெரிய ஆரம்பித்தன. நீண்டு நெடிதாய் வளர்ந்துபோன மரங்களும் பற்றைக் காடுகளும்தான் எங்கும் மிஞ்சிப் போயிருக்கின்றன. மாவிட்டபுரம்கோவில் சந்தியில் 'தம்பலபடுன செல்லும் வழி' என்ற ஒரு வழிகாட்டிப்பலகை. அதன்கீழ் பெரிய எழுத்துக்களில் தம்பல படுன என தமிழிலும் சிங்களத்திலும் பெயர் பொறிக்கப்பட்ட ஒரு பெயர்ப்பலகை நடப்பட்டு இருந்தது. அதைத்தாண்டி மாவிட்டபுரம் முருகனைத் தரிசித்து விட்டு ஆலயத்திற்கு வடக்கே காங்கேசன் துறை வீதி வழியே சென்றபோது ஆலயத்திலிருந்து அரைக்கிலோமீற்றருக்கும் சற்றுக் குறைவான தூரத்தில் அதற்கு அப்பால் செல்ல முடியாதென படையினர் மறித்துவிட மாவிட்டபுரத்திற்கு கிழக்கே எமது பயணம் தொடர்ந்தது.

◀ கலியுகன் ▶

அங்கு மக்கள் இன்னும் மீளக் குடியமரவில்லை. சில மக்கள் தங்கள் காணிகளுக்கு எல்லை போட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கு காணிக்கு எல்லையிட்டுக்கொண்டிருந்த ஒருவரிடம் மீள்குடியேற்றம் தொடர்பாகக் கேட்டேன்.

'என்னத்த தம்பியவை சொல்லுறது. என்ர காணியப் பாருங்கோ! உழுது விட்ட காணிமாதிரிக் கிடக்கு. நான் விவசாயம் செய்யுறத்துக்கு உழுத நான் எண்டு நினைச்சுப் போடாதை




# வலி வடக்கு மீள்குடியேற்ற சவால்கள்

யுங்கோ. இதில என்ர வீடு இருந்தது. அங்க பாருங்கோ அதில குவிச்சுக் கிடக்குற கல்லுக்கும்பதான் என்ர வீட்டின்ர எச்சங்கள்' என யுத்தத்தின் கோரங்கள் காறி உழிழ்ந்த ஒரு பெரிய மண்திட்டைக் காட்டினார். அது படையினரால் மண் அணை அமைப்பதற்காக குவிக்கப்பட்ட மண்திட்டு. அந்த வயதானவரின் வீடு இருந்த இடமே தெரியவில்லை. 'என்னால என்ர காணியின்ர எல்லையையே கண்டுபிடிக்க முடியாமப் போச்சு. அக்கம்பக்கத்து ஆக்களின்ர காணியள வச்சுத்தான் என்ர காணியக் கண்டுபிடிச்சனான். எல்லையையாவது போட்டுவைப்பம்' என்றார்.


அந்த வயதானவரின் வீட்டிற்கு அண்மையாகத்தான் இராணுவத்தினரின் மண் அரண் (பண்ட்) ஊடறுத்துச் செல்கிறது. அதற்கு அப்பால் இன்னமும் மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படவில்லை. அப்பகுதியில் இன்னமும் மிதிவெடியகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை அப்பிரதேசமெங்கும் உறுமிக்கொண்டு திரியும் மிதிவெடியகற்றும் குழுவினரின் வாகனங்கள் பறைசாற்றின.

நாம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு தெற்கே நகர்ந்தோம். அங்கும் மக்கள் காணிகளைத் துப்பரவு செய்யும் பணியிலும் காணிகளுக்கு எல்லையிடும் வேலையிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அங்கு யன்னல்கள், கதவுகள் யாவும் கழற்றப்பட்ட நிலையில் பற்றைக் காடாய்க்கிடந்த ஒரு வீட்டினை துப்பரவு செய்து கொண்டிருந்த ஒரு தாய் எம்முடன் உரையாடினார். 'இப்போதைக்கு இங்க வந்து குடியிருக்கிறது சாத்தியமில்ல. ஏதோ நாங்கள் செய்த புண்ணியம். வந்து பார்க்கவே மாட்டம் எண்டு நினைச்ச எங்கட வீடுகள வந்து பாக்கிறம். இப்ப யன்னல், கதவு செய்யிறதெண்டாலே லச்சக்கணக்கா காசு வேண்டும். வீடும் உடைஞ்சு போச்சு. கிணறு இருந்த அடையாளத்தையே காணேல்ல. என்ர கணவரும் இறந்திட்டார். பொம்பிளப் பிள்ளையள வச்சுக் கொண்டு இங்க உடனடியா வந்து குடியேறேலாது. வீடுவாசல முதலிலதுப்புரவு செய்யவேணும். அதுக்கு ஆறு மாதமோ அல்லது ஒரு வருசமோ கூட ஆகும். எங்கட இடத்தில வீடுகள் நல்லா பாதிக்கப்பட்டிருக்கு. ஆனா ஒருத்தரும் இஞ்ச உடன வந்து இருக்கப்போறமாதிரித் தெரியேல்ல. வந்து வந்து பாத்திட்டும் காணியளத் துப்பரவாக்கிட்டும் போகினம்' என்றார்.

தங்கள் இடப்பெயர்வின் துயரங்கள் குறித்துக் கூறும் ஒருவர். '1983ஆம் ஆண்டு தொடக்கம் கட்டம் கட்டமாக வெளியேற்றப்பட்டு 1990ஆம் ஆண்டு ஆனி மாதத்துடன் மிக மோசமான இராணுவ நடவடிக்கை மூலம் முழுமையாக வெளியேற்றப்பட்டுட்டம். தெல்லிப்பளை, கொக்குவில், சாவகச்சேரி என இடம்பெயர்ந்து திரும்ப கொக்குவிலில வந்து இருக்கிறம். எங்கட இடத்தில இப்ப எங்கள இருக்க விடுறது சந்தோசம்தான். ஆனா எந்த உதவியும் செய்யாம என்ன செய்யிறது. இந்த வீட்டப்பாருங்கோ இப்படியே வந்து இருக்கேலுமோ. இருந்தனாங்கள் கொஞ்சக்காலம் பாப்பம் ஏதாவது உதவிகிடைச்சா இத திருத்திப்போட்டு வந்து இருப்பம்' என்றார்.

இப்படி வலிகளும் வேதனைகளும் தாங்கி மீட்டெடுத்த தமது நிலங்களில் மீளக்குடியமர்வதற்கு எந்தவித அடிப்படை வசதிகளையும் அரசு இதுவரை செய்து தரவில்லை என மனம் வெதும்பும் ஒரு இளைஞன் தான் தன்னிலை அறியாத வயதிலேயே இடம்பெயர்ந்து விட்டதாகக் கூறுகிறார். இன்று அவர் தனது சொந்த நிலத்தில் மீளக்குடியமர ஆவலாய் இருப்பதாகவும் கூறுகிறார்.

இடப்பெயர்வுகள் எனும் அவலங்களிலிருந்தும் அகதிகள் எனும் கோரங்களிலிருந்தும் நாம் மெல்ல விடுபடத் தொடங்கியிருக்கிறோம். வலிவடக்கு மீள்குடியேற்றமும் அதற்கு வழிகோலியிருக்கிறது. ஆனால் அந்த நிரந்த மீள்குடியேற்றத்திற்கு நாம் இன்னமும் சவால்களோடு பயணிக்கவேண்டித்தானிருக்கிறது



# திருமண வாழ்வில் நான்கு பெண்களின் உணர்ச்சிப் போராட்டம்

## 'நாலு பெண்ணுகள்' மலையாளத் திரைப்படம்




நான்கு பெண்களின் வாழ்க்கை பற்றிய திரைப்படம் தான் 'நாலு பெண்ணுகள்' என்ற 2007ஆம் ஆண்டு வெளிவந்த மலையாள திரைப்படம். இந்தியப் பெண்களின் வாழ்வில் திருமணம் என்ற விடயம் எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை திரையில் யதார்த்தமாக காட்டியிருக்கிறார் இயக்குநர் அதூர் கோபாலகிருஷ்ணன்.



மலையாள சினிமா உலகிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஒரு திரைப்படமாக பேசப்படும் இப்படத்தின் கதை 1940-1960களில் கேரளாவில் நடந்த காட்டப்படுகிறது. நான்கு பெண்களது திருமண வாழ்க்கையில் எற்படும் மாற்றங்கள் ஒவ்வொரு கதையாக திரையில் காட்டப்படுகின்றது. ஆக நான்கு குறுந்திரைப்படங்களின் தொகுப்பு என்றுகூடச் சொல்லலாம்.

வீதியோர விபச்சாரம் செய்யும் குஞ்சுப்பொண்ணு (பத்மப்பிரியா) சமூகத்தினரால் குற்றவாளியாக்கப்பட்டு சிறைக்குச் செல்கிறாள். நீண்ட நாட்கள் திருமணம் முடிக்காமல் இருக்கும் குமாரி (கீது மோகனதாஸ்) இல்லற வாழ்வில் துளியளவும் விருப்பமில்லாத ஒருவனைப் பெற்றோருக்காக திருமணம் செய்து கன்னிப் பெண்ணாகவே காலம் கழிக்கிறாள்.

திருமணம் முடிந்தும் குழந்தையில்லாத சின்னு அம்மா (மஞ்சுப் பிள்ளை) அவரை அடைய நினைக்கும் பழைய பள்ளித் தோழன், திருமண ராசியில்லாமல் முதிர் கன்னியாகவே இருக்கும் நடுத்தரக் குடும்பப் பெண் (நந்திதா தாஸ்) என இந்த நான்கு பேருடைய கதைகளையும் நான்கு தலைப்பின் கீழ் மிக அழகாகத் தந்திருக்கிறார் இயக்குநர்.

கதைக்கேற்ற வகையில் பாத்திரங்களை தெரிவுசெய்த இயக்குநருக்கு ஒரு சபாஷ் சொல்ல லாம். பத்மப்பிரியா, நந்திதாதாஸ், கீதுமோகனதாஸ், மஞ்சுப்பிள்ளை ஆகியோரைப் பற்றி சொல்லத் தேவையில்லை. தமிழ், மலையாளம், தெலுங்கு திரைப்படங்களில் நடித்து அனுபவம் பெற்ற இவர்கள் தமது பாத்திரத்தை உணர்ந்து அளவான நடிப்பை தேவையான விதத்தில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

பிரதான பாத்திரங்கள் நான்குதான் என்றாலும் படத்தில்வரும் காவ்யா மாதவன், ரம்யா நம்பீஷன், லலித், முகேஸ், மனோஜ் கே, ஜெயன் என அனைவருமே தனது பாத்திரத்தையுணர்ந்து நடித்திருக்கிறார்கள்.

படத்தில் வரும் பல சிறப்பம்சங்களில் ஒன்று குறியீடுகள். நந்திதா தாஸின் தாய் இறந்து விட்டார் என்பதை தென்னையிலிருந்து விழும் காய்ந்த 'தென்னம் பாளை'யைக் குறியீடாக காட்டுவது, குஞ்சுப்பெண் வேலைக்குப் போவதாக காட்டுவது என பல இடங்களில் குறியீடுகள் எமக்கு கதை சொல்கின்றன.

**கண்ணன்**

படத்தின் ஒலியமைப்பு பற்றி குறிப்பிட்டே ஆகவேண்டும். ஒவ்வொரு சிறு அசைவிலிருந்து வரும் ஒலியையும் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக விளக்கிற்கு எண்ணெய் ஊற்றும் ஓசை, ஆற்றில் படகு செல்லும் போது துடுப்பின் ஒலி, வயலில் நாற்று நடும் ஓசை என ஒலியமைப்பு கன கச்சிதமாகப் பொருந்தியிருக்கிறது.

ஆரவாரமில்லாத பின்னணி இசை படத்திற்குப் பக்க பலம். தேவையான இடத்தில் தேவையானளவு இசைக் கோர்ப்பு இடம்பெற்றுள்ளது. சில இடங்களில் இயற்கை ஒலிகள்தான் இசை. இசாக் தோமஸுக்குப் பாராட்டுகள்.

உடுத்தும் ஆடைகள் எம்மை 40களுக்கே கொண்டு செல்கிறது. நேர்த்தியான ஆடை வடிவமைப்பு, ஒளிப்பதிவுக் காட்சிகளை உயிரோட்ட முள்ளதாக மாற்றியிருக்கிறது. பெரும்பாலான காட்சிகள் 'குளோசப்'இல் காட்டப்பட்டிருக்கின்றன. சில காட்சிகளுக்கே 'செட்' போடப்பட்டுள்ளது. ஏனைய காட்சிகள் இயற்கைச் சூழலில் படமாக்கப்பட்டுள்ளன.

படத்தில் பெரிதாக குறைகள் என்று சொல்வதற்கில்லை. அதனால்தான் என்னவோ 2007ஆம் ஆண்டுக்கான தேசிய விருது (மலையாள திரைப் படத்திற்கான) உட்பட பல விருதுகளை இத்திரைப்படம் தன் வசப்படுத்தியிருக்கிறது. படத்தில் ஆரம்பம் முதல் சோகம் இழையோடுவதைக் காணக்கூடியவாறு இருக்கிறது. ஆனாலும் ஒவ்வொரு கதையும் 30 நிமிடங்களுக்குள் முடிவடைவதால் ரசிக்கக் கூடியதாக இருக்கிறது.


சோகம் கூடுதலாக இருந்ததாலோ என்னவோ, கீது மோகனதாஸின் கணவரை 'சாப்பாட்டு ராமனாகக்' காட்டி சிரிக்க வைக்க முயற்சிக்கிறார் இயக்குநர். இது தேவையற்றதொரு முயற்சியாகவே தெரிகிறது. கதைகளின் சோகம் தான் படத்தின் வெற்றியே.

மலையாள சினிமா உலகில் அவ்வப்போது நடைபெறும் பரீட் சார்த்த முயற்சிகளில் ஒன்றுதான் இப்படம் என்று சொல்லலாம். தமிழில் ஒரே விடயத்தையே திரும்பத்திரும்ப பார்த்துப் புளித்துப்போன நமக்கு இப்படியான கதையுள்ள படங்கள் வித்தியாசமான அனுபவ உணர்வை ஏற்படுத்தக் கூடியன.


நல்ல கதையம்சம், அமைதியான இசை, இயற்கையான கிராமத்துப் பின்னணியுடன் வாழ்வியலைச் சொல்லும் படங்கள் இன்று குறைவு என்றே சொல்லலாம். அந்த வகையில் மலையாளத்தில் வெளிவந்திருக்கும் 'நாலு பெண்ணுகள்' என்ற இத்திரைப்படம் நிச்சயமாக நமது தமிழ் ரசிகர்களைக் கவரும்.

ஆனாலும் நம்நாட்டு திரையரங்கு முதலாளிகள் மாற்று சினிமாக் களையும் திரையில்காட்ட முன்வர வேண்டும். இவ்வாறான சமூகக் கருத்துக்களைச் சொல்லும் படங்கள் நம்நாட்டுத் திரையரங்குகளில் திரையிடப்படவேண்டும்.

எது எப்படியோ, நல்ல தரமான படைப்புக்கு எப்பொழுதும் வரவேற்பும், மதிப்பும் உண்டு என்பதற்கு இப்படம் நல்லதொரு சான்று



'நாலு பெண்ணுகள்' - வாழ்க்கை



**இயக்கம்:** அதூர் கோபாலகிருஷ்னன்
**தயாரிப்பு:** அதூர் கோபாலகிருஷ்னன், பென்சி மார்டின்.
**இசை:** இசாக் தோமஸ்
**ஒளிப்பதிவு:** எம்.ஜே. ராதாகிருஷ்ணன்
**படத்தொகுப்பு:** அஜித்



உண்மையின் பதிவு

## சுற்றுச்சூழல் தினத்தில்...

# மின்சாரத்துக்காக தறிக்கப்பட்ட பனை மரங்கள்

அன்று ஞாயிற்றுக்கிழமை. (05.06.2011) சர்வதேச சூழல் சுற்றாடல் பாதுகாப்புத் தினம். அன்றைய தினத்தில் நான் மட்டக் களப்பு படுவான்கரைப்பிரதேசத்திற்குச் சென்றவேளை அங்கே நூற்றுக்கணக் கான பனை மரங்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்ததை பார்த்து மிகவும் வேதனையுற்றேன். சர்வதேச சுற்றாடல் தினத்திலுமா இப்படியொரு செயல் நடை பெறுகின்றது என்பதை என்னால் ஜீரணிக் கவே முடியவில்லை.

சரி! இந்த பனைகளை எதற்காக வெட்டுகின்றார்கள் என்பதை அறியும் நோக்கில் அக்கிராமத்திற்குள்ளே சென் றேன். அங்கு மக்கள் என்றுமில்லாதவாறு சந்தோஷமாக இருந்ததையும் என்னால் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இதற்கான காரணத்தை ஆராய்ந்தபோது தான் விடயம் விளங்கியது. பல காலமாக மின்சாரமின்றி இருளில் மூழ்கிக் கிடந்த நாவற்காடு, நெல்லுச்சேனை, விளாவெட் டுவான், கரவெட்டி, சொறுவாமுனை ஆகிய ஒதுக்குப்புறக் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு மின்சாரம் கிடைக்கப் போவதையிட்டுதான் இவர்கள் குதூகலித் துப் போயிருந்தார்கள். இதற்காகத்தான் இந்தப் பனைவெட்டும் வைபவம் நடை பெறுகின்றது என்பதை அறிந்தேன்.

மட்டக்களப்பு படுவான்கரைப் பிரதே சத்திலுள்ள வீதிகளின் இருமருங்கிலும் பல ஆண்டுகளுக்கு முன்னர் மூத்தோர்களால் நடப்பட்டு, இன்று பசுஞ்சோலையாய் வளர்ந்து நிற்கும் இந்தக் கற்பக தருக்கள் ஈவிரக்கமில்லாமல் கண்ணிமைக்கும் வேளையில் தறித்து வீழ்த்தப்பட்டுக் கொண்டிருந்ததைக் காணும்போது மனசு பதறியது. இக்கிராம மக்களுக்கு மின் சாரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு இந்த பனைகள் வீதிகளில் தடையாக நிற்கின் றனவாம். அதற்காக இலங்கை மின்சார சபையின் ஏற்பாட்டிலே பனைகள் வெட்டப்படுகின்றன என்பதை அப்பிரதேச வாசியொருவர் என்னிடம் தெரிவித்தார்.

நாவற்காட்டிலிருந்து சுமார் 500 கிலோமீற்றர் அளவிலான தூரத்தில் உள்ள பிரதேசங்களிலே இந்த நாசவேலை நடந் தேறி வருகின்றது. அப்பகுதி பிரதேச செயலாளரும் இந்தப் பனைமர அழிப்புக்கு அனுமதி கொடுத்ததாகக் கூறப்படுகின்றது. சுமார் 400 பனை மரங்கள் இன்னும் வெட்டப்பட இருக்கின்றன என்ற தகவலை யும் அவரே வெளியிடுகிறார் என்பதை தெரிந்துகொண்ட நான் பிரதேச செயலா ளரிடம் மரங்களை அழிக்காமல் மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திக்கவில்லையா என்று கேட்டேன். 'மக்கள் மின்சாரம் வேணும் என்று கேட்கிறார்களே' என்று மழுப்பலாகப் பதிலளித்தார்.

பல நூற்றாண்டுகாலமாக எமக்கு சோறு தந்தது இந்தப் பனைமரமாகக்கூட இருக்கலாம் என்பதை இந்தப் பிரதேச மக்களோ, பிரதேச செயலாளரோ, மின்சார சபையோ உணரவில்லை. பனையை அழித்து நாட்டின் பனை வளத்தை அழிக்கவேண்டும் என்று திட்டம் தீட்டி னார்களோ தெரியாது. மின்சாரம் என்ற




ஒன்றில் குறிக்கோளாக நின்கின்றார்களே தவிர அழிந்து வருகின்ற பனை வளத்தை யாரும் கணக்கிலெடுக்கவே இல்லை என்பதுதான் வேதனைக்குரிய விடயம்.

மின்சாரத்தை பனைகளை வெட்டித் தான் பெறவேண்டும் என்று அவசியமா என்ன? வேறு மாற்று வழிகளை கையாண்டிருக்கலாமே. தமக்கான எல்லாவற்றையும் இழந்து நிற்கும் இம்மக்களுக்கு எஞ்சியிருக்கும் ஒரே ஒரு சொத்து இந்தப் பனைகள்தான். வீதிகளின் இருமருங்கிலும் வந்தோருக்கு நிழல் தந்து இளைப்பாற இடமளிக்கும் இந்த பனை மரங்கள் இன்று அறிவீனர்களால் அழிக்கப்பட்டு வருவதை கைகட்டி வேடிக்கை பார்க்கவேண்டிய நிலையில் நாம் இருக்கின்றோம்.

ஏற்கனவே இந்தப்பிரதேசங்களில் கொடிய வறட்சி நிலவுகிறது. பகலில் அனல் கக்குகிறது. மேட்டு நிலத்தாவரங்கள் கருகி விட்டன. கிணறுகள் வற்றி, வரண்டு போய்க்கிடக்கின்றன. மக்கள் குடிநீருக்காக நீண்டதூரம் தேடியலைகிறார்கள். இவ்வா றிருக்கும்போது இருக்கும் பசுமை யையும் இல்லாதொழித்தால் மழை யில்லாமல் கொடிய வறட்சிக்குள் மக்கள் வாடப்போகின்றார்கள் என்பது மட்டும் உண்மை.

சுற்றுச்சுழல் ஆர்வலரும் அபிவிருத் திக்கான சமூக வலையமைப்பின் நிறை வேற்றுப் பணிப்பாளருமான எஸ். செந்துராசாவிடம் இது பற்றிக் கேட்டேன். 'மரத்தை வெட்டி விழுத்தாமல் மக்களுக்கு மின்சாரம் வழங்க வழியிருக்கிறது. வீதியோரத்தைப் பாவிக்காமல் கட் டாந் தரையாக உள்ள வயல்வெளி களூடாக மின் கம்பங்களைக் கொண்டு செல்வ தற்குப் போதுமான வெறும்வயல்வெளி நிலப்பரப்பு கண் ணுக்கெட்டிய தூரம் வரைபரந்துவிரிந்து கிடக்கிறது.

மற்றப்பிரதேசங் களிலுள்ளது போல பிளாஸ்ரிக் கேபிள் களைப் பயன்படுத்தி யிருக்கவும் முடியும். சரித்திரத்திலே மின்சாரம் இல்லாமல் இருளில் மூழ்கிக் கிடக்கும் கிராமங்களுக்கு மின்சாரம் வழங்க வேண்டும் என்பதில் எமக்கு எந்தவித ஆட்சேபனையுமில்லை. மர அழிப்பு விடயத்தை நான் நிச்சயமாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர இருக்கிறேன். ஜனாதிபதி ஒரு புறத்தில் மரநடுகையை ஊக்குவித்துக் கொண் டிருக்க மறுபுறத்தில் சுற்றுச் சுழல் தினத்திலும்கூட மனித உயிர்களை வெட் டுவது போன்று பனைகளை வெட்டி வீழ்த்துவது அறிவற்ற செயலாகவே தென் படுகின்றது' என்று மரம் வெட்டுவதை வன்மையாகக் கண்டித்தார்.

இது தொடர்பாக மட்டக்களப்பு நாவற்காடு பிரதேசத்துக்கு பொறுப்பான மின்சாரசபை மேலதிகாரி ஜெயபிரசாந் திடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது;

தனக்கு இது சம்மந்தமாக எந்த விடயமும் தெரியாது என்று கூறிவிட்டார். 'இதை நீங்கள் construction division க்குத் தான் கதைக்கவேண்டும். என்ன நடக்கிற தென்று எனக்கு தெரியாது. நான் கடைசி யாகத்தான் take over பண்ணுவன். ஒருவேளை மரங்களை வெட்டினால் தான் அதனை செய்யலாம் என்று வெட்டி யிருப்பார்கள் என்று நினைக்கின்றேன். றோட்ல தூண்கள் நாட்டவேண்டும். அதனால்தான் வெட்டியிருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன்' என்றார். அவர் களது construction பகுதிக்கு பொறுப்பான வரை எம்மால் தொலைபேசியில் பிடிக்க முடியவில்லை.

◀ வ. சக்திவேல் ▶

புதிதாக ஒரு பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படும்போது அது சம்மந்தமாக மட்டக்களப்பு மின்சார சபைக்கு ஒன்றும் தெரிய வராதாம். பொதுவாக அரசசார்பற்ற நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் இவ்வாறான பிரதேசங்களுக்கு மின்சாரம் பெற்றுக்கொடுக்க முன்வருகின்றனர். மின்சார பணிகள் முற்றாக முடிவடைந்த பின்தான் அதனை மின்சார சபை பொறுப்பேற்குமாம். மின்சாரம் பெற்றுக் கொடுப்பது வரவேற்கத்தக்க விடயம். ஆனால், எவ்வளவு வளங்களை வீணாக்கி அது பெறப்படுகின்றது என்பதுதான் இங்கு முக்கியமானது.

மரங்கள் இருந்தால் மின்சாரம் வழங்க முடியாதென்று மட்டக்களப்பு மின்சார சபை சொல்வது புரியாத புதிராக இருக்கிறது. இலங்கையின் வேறுபல பிரதேசங்களில் மரங்கள் இருக்கத்தக்க தாகவே மின் விநியோகம் தங்கு தடையின்றி விநியோகிக்கப்பட்டிருப் பதைக் கண்கூடாகப் பார்க்கின்றோம். அப்படியிருக்கும்போது இப்பிரதேசத்தில் மாத்திரம் அதுவும் வேறு வழியும் இருக் கின்ற நிலையில் இவ்வாறு மரங்களை வெட்டித்தான் மின்சாரம் வழங்கவேண்டு மென்பது எம்மை சந்தேத்தில் ஆழ்த்து கின்றது.

இப்படி ஒவ்வொருவரும் பொறுப்பற்ற விதத்தில் பதில் கூறினால் அழிந்துவரும் வளங்களின் நிலையென்ன? சம்பந்தப் பட்டவர்கள் உடனடியாக இது தொடர்பில் சிரத்தையெடுக்க வேண்டும்.

03



# திகிலோடு மர்மம் நிறைந்த தொடர்!

மரகதத் தீவின் இரகசிய ஒற்றன் 'நெடுமாறன் 999' உளவறியும்

# கறுப்பு செப்டெம்பர் அழகி



'ட்ரிங் ட்ரிங்'

ஹோட்டல் ஒப்ராய் அறைக்குள் இருந்த அந்த தொலைபேசி,

அலறு அலறு என்று அலறியது.

தன் அணைப்பில்,

தன் நினைவின்றிக் கிடந்த அந்த அப்பிள் பழ அழகியை மெல்ல தள்ளிவிட்டு எழுந்து நின்ற நெடுமாறன்

தொலைபேசியைக் கையில் எடுத்தார்.

'ஹலோ!'

'என்ன நெடுமாறன் எப்படி இருக்கிறீர்கள்? தனியாகத்தான் இருக்கிறீர்களா அல்லது...?'

மறுபக்கத்தில் இருந்து பேசும் குரல் யாருடையது என்று நெடுமாறனுக்குத் தெரியும்.

எமகாதகன்!

மரகதத்தீவின் இரகசிய ஒற்றர் படைத்தலைவர்.

"இல்லை சார். நெடுமாறன் எப்போதும் தனியாளாக இருப்பதில்லை என்பது உங்களுக்குத் தெரியுமே! இப்போது என் பக்கத்தில் மல்லிகா இருக்கிறாள். நாளை அவளையும் அழைத்துக்கொண்டு திருமலைக்குப் போகலாம் என்று ப்ளான் போட்டிருக்கிறேன்!"

"அந்தப் பயணத்தை நிறுத்திவிட்டு நீங்கள் உடனே இங்கே வரவேண்டும்!"

**ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன்**

"ஏன் சார்? சி.ஐ.ஏ. இயக்கம் மீண்டும் யாரையாவது அனுப்பியிருக்கிறதா?" பரபரப்புடன் கேட்டார் நெடுமாறன்.

"இல்லை நெடுமாறன், இந்த முறை அதைவிட பயங்கரமான இயக்க மொன்று இங்கே முகாமிட்டிருக்கின்றது. நீங்கள் உடனே இங்கே வாருங்கள். விபரமாகச் சொல்லுகிறேன்!"

"ஆகட்டும் சார்!" சொல்லியபடியே தொலைபேசியை தொட்டிலில் வைத்தார் நெடுமாறன்.

"என்ன டார்லிங்.... இந்த நேரத்தில் யார் போனில் பேசியது?' நெடுமாறனின் முதுகில் சாய்ந்து கொண்டது,

மல்லிகா என்ற அந்த மாதுளம் கனி.

'எனக்கு அவசரமான வேலை கொஞ்சம் இருக்கிறது. நான் பிறகு வந்து உன்னைச் சந்திக்கிறேன்"

சொல்லியபடியே உடைகளை மாற்றிக் கொண்டார் நெடுமாறன்.

நெடுமாறன், நெடுமரத்தைப் போல் நல்ல வளர்த்தி.

அவர் உயரம்,

6 அடி 6 அங்குலம்.

அவர் கண்கள் பூனைக்கண்கள்.

கவர்ச்சியான கண்கள்.

நெடுமாறனை ஒருமுறை பார்த்துவிட்ட எந்தப்பெண்ணும்,

அவரை தங்களது படுக்கையறைக்கு வரும்படி அழைப்பு விடுக்காமல் இருந்தால்,

அது எட்டாவது அதிசயம்தான்.

மரகதத்தீவின் இரகசிய ஒற்றர் படையில்,

தலையாய ஒற்றர் நெடுமாறன் 999 தான்.

தலைவன் எமகாதகன் தீட்டும் திட்டங்களை திறமையுடன் நிறைவேற்றக் கூடிய ஒரே நபர்,

நெடுமாறன் 999!

நெடுமாறனுக்கு தெரியாத சண்டை முறைகளே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

கராட்டி, ஜூடோ எல்லாம் இவருக்கு தண்ணீர் பட்டபாடு.

கத்திக்கு கத்தியால் பதில் சொல்லுவார்.

இரத்தத்திற்கு இரத்தத்தால் பதில் சொல்லுவார்.

துப்பாக்கி பிடித்து சுடுவதில் அவர் எமகாதகனுக்கு இரண்டாவதாக வருவார்.

அவர் வலது கையால் விடும் குத்தின் எடை,

கெஷியஸ்கிளே விடும் குத்தின் எடையை விட அதிகமாகத்தான் இருக்கும்.

வலது காலால் ஓர் உதைவிட்டு அது எதிரியின் அடிவயிற்றில் பட்டுவிட்டால்,

ஆள் அவுட்!

நெடுமாறனின் பொக்கெட்டில் பலவிதமான பாஸ்போட்டுகள் இருக்கும்.

ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பெயர் இருக்கும்.

ஆனால்,

ஒன்றில் கூட நெடுமாறன் என்ற பெயர் இருக்காது.

நெடுமாறன் நினைத்தால் எவரை வேண்டுமானாலும் சுட்டுக் கொள் ளலாம்.

அதற்காக அரசாங்கம் அவருக்கு வழங்கியிருக்கும் அனுமதிதான்.

999!

அவருக்கு நீதிமன்றம் இல்லை.

வழக்கில்லை.

எந்த சட்டமும் அவரை எதுவும் செய்யமுடியாது.

இவர்தான்,

மரகதத்தீவின் இரகசிய ஒற்றர் நெடுமாறன் 999.

காற்றைக் கிழித்துக் கொண்டுவந்த அந்த சனீபீம் கார்,

பெரிய மாடிக்கட்டிடத்தின் முன்னால் நின்றது.

காரின் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்த நெடுமாறன்,

முன்னால் ஊர்ந்து சென்று லிப்டில் ஏறினார்.

மாடியில் இருந்த அந்த அறையினுள் அவர் நுழைந்தபோது,

ஒற்றர் படைத் தலைவன் எமகாதகன் அவருக்காக காத்துக் கொண்டிருந்தார்.

அவர் வாயில் மேல்நாட்டு சுருட்டு புகையைக் கக்கிக் கொண்டிருந்தது.

எமகாதகன்!

உண்மையிலேயே அவர் பெயர் எமகாதகன் அல்ல.

தேசத்துரோகிகள் அவருக்கு சூட்டியுள்ள பெயர்தான் அது.

அவர் பெயர் வாசுதேவன்.

சதிகாரர்களின் முயற்சிகளை அவர் மிகத் திறமையாக முறியடித்து தனது தாய்நாட்டிற்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததால்தான் அவரது எதிரிகள்,

சுமார் நாற்பது வயது நிரம்பிய அந்த மனிதரை, எமகாதகன் என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

"வாருங்கள் நெடுமாறன். உங்களைத் தான் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறேன்!" சுருட்டை வாயில் வைத்தபடியே பேசினார்.

"காரியம் அவ்வளவு அவசர மானதா?" கேட்டபடியே எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார் நெடுமாறன்.

"ஆமாம், நேற்று இரவு எனக்கு ஒரு செய்தி கிடைத்தது. அதாவது, நமது எல்லைக்குள் சட்ட விரோதமாக நுழைந்த ஒரு விமானம், எங்கள் விமான சேவை அதிகாரிகளின் கட்டளையைக்கூட பொருட்படுத்தாமல் இலங்கையில் எங்கேயோ அந்த விமானத்தை இறக்கியிருக்கிறார்கள்"

"இதில் எதுவும் அதிசயம் இருப்பதாகத் தெரியவில்லையே. அந்த விமானத்தில் ஏதாவது கோளாறு ஏற்பட்டு திசைமாறியிருக்கலாம்!"



அமைதியாகச் சொன்னார் நெடுமாறன்.

"நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் கெய்ரோ அரசு நமது அரசுக்கு அதிர்ச்சிதரும் செய்தியொன்றை அனுப்பியிருக்கிறது. அதாவது தங்கள் நாட்டிற்கு யுத்த ஆயுதங்களை ஏற்றிவந்த விமானம் ஒன்றை பலஸ்தீன நாட்டு கெரில்லாக்கள் இலங்கைக்கு கடத்திக் கொண்டுவந்து அதில் இருந்த நவீன யுத்த ஆயுதங்களை இறக்கிவிட்டு விமானத்தை மட்டும் திருப்பி அனுப்பி விட்டார்களாம்!"

"பலஸ்தீன கெரில்லாக்களா!"

நெடுமாறன் நிமிர்ந்து உட்கார்ந்தார்.

"ஆமாம். இவர்கள் எந்த இயக்கத்தை சேர்ந்தவர்கள் தெரியுமா?"

"சொல்லுங்கள்!"

"கறுப்பு செப்டெம்பர் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள். இந்த இயக்கத்தை பற்றி உங்களுக்கு ஏதாவது தெரியுமா நெடுமாறன்?"

(தொடரும்)



# மடியில் விழுந்தது மாதுளங்கனி! தொலைபேசி மூலம் வந்தது சனி!

# சிறுவர்களுக்கு எதிரான யுத்தத்தை நிறுத்த போராடிய உகண்டா யுவதியின் பயணம்

''எல்.ஆர்.ஏ. (Lord Resistance Army) தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இவுலின் அபொன்கோ என்ற 9 வயது சிறுமி, சிறுவர்களை யுத்தத்திலிருந்து காப்பாற்றுவதற்காக கனேடிய மக்கள் பிரதிநிதிகளிடம் உதவி கோருகிறாள். அவள் தனது கதையை முதலில் செனெட்டர் மொபனா சாபர் மற்றும் லிபரல் கட்சி எம்.பி. கீத் மார்டின் (Libeal Senator, Mobina Jaffer and Liberal M. P. Keith Martin) முன்னிலையில் ஒட்டாவாவில் முன்வைத்தபோது கோபத்துடனும் ஆவேசத்துடனும் சாடினாள். ஆனால், விரைவில் அமைதியுடன் தனது உடல் ஊனங்களைக் கடந்து தன்னம்பிக்கையுடன் தொடர்ந்தாள்.''

இவுலின் அபொன்கோ என்ற 9 வயது சிறுமி எல்.ஆர்.ஏ. தீவிரவாதிகளின் தலைவர் ஜோசப் கோனியின் கும்பலால் வட உகண்டாவில் கடத்தப்பட்டாள். ஏனைய சிறுவர்களைப்போலவே ஏதோ ஒரு விதத்தில் போர் ஆயுதமாக உகண்டா அரசுக்கு எதிரான யுத்தத்தில் உபயோகப்படுத்தப்பட்டாள். ஒன்பதே வயதில் தன்னைவிட மிகக்கூடுதலான சுமைகளை தூக்குபவளாகவும் ஏனைய சிறுவர்களைப் பராமரிப்பவளாகவும் அவள் மாற்றப்பட்டாள். புதர்களுக்கிடையில் மூன்று வருடங்கள் எல்.ஆர்.ஏ. தீவிரவாதிகளுடன் நடந்தாள். அவளுடைய கால்கள் நன்கு வீங்கியிருந்தன. ஆனாலும் தனது கைகளிலிருந்து ஏதாவது தவறி விழுந்தால் தான் மிருகத்தனமாக தாக்கப்படுவாள் அல்லது கொல்லப்படுவாள் என்பதை அவள் நன்றாக அறிந்திருந்தாள்.



அதிகமான இரவுகளில் அவள் மிகக் குறைவாகவே தூங்கினாள். அவள் ஒரு சிறுமியாக இருந்த போதிலும் எல்.ஆர்.ஏ. தீவிரவாதிகளின் தலைவர்களுள் ஒருவரின் பல மனைவியரின் பல குழந்தைகளைப் பராமரிக்க வேண்டியவளாக இருந்தாள். இப்படி ஒரு குழந்தையைப் பராமரிக்கும் போதுதான் ஒருநாள் உகண்டா இராணுவத்தினர் ஏவிய குண்டொன்று அங்கு வந்து விழுந்தது. விமானங்களைக் கண்டதும் தனது உடம்பினால் குழந்தையை மறைத்தபடி ஒரு மரத்தின் கீழ் ஒதுங்கிக்கொண்டாள்.

குண்டொன்று அவளது முகத்தை உரசிக்கொண்டு சென்றதால் அவளது முகம் கடும் காயத்துக்குள்ளானது. அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உட்பட்டு வாயிலும் மூக்கிலும் இரத்தம் வடியும் நிலையிலும் மனிதாபிமானத்துடன் இறந்த குழந்தையின் தாயைத் தேடினாள். இறந்த குழந்தையின் கோரம், கற்பனை செய்ய முடியாததென்று பின்னாளில் அவள் கூறியிருந்தாள்.

ஒரு பத்திரிகை நிருபர் அவளைச் சந்தித்தபோது, அவரது முகத்தில் காயம் பட்ட இடத்தை கீறிக்காட்டினாள். அவள் அவரது வாய், மூக்கு, பற்கள், தாடையைச் சுற்றி வட்டமிட்டு அவை இல்லாமல் போனதைச் சுட்டிக் காட்டியிருந்தாள். ஆனாலும் தீவிரவாதிகள் அவளைத் தொடர்ந்தும் நடக்க வைத்தனர். குனிந்த அவளது தலை வேதனையால் வெடிப்பது போலிருந்தும் உதட்டிலிருந்து இரத்தம் வடியும் நிலையிலும் தொடர்ந்து அவர்களுடன் நடந்தாள். அந்நிலையிலும் தான் அப்போது எண்ணியதை நினைவு கூர்ந்தாள்.

'ஆண்டவனே நான் ஏதாவதொரு குற்றம் செய்திருந்தாலும் எனக்கு இவ்வளவு பெரிய தண்டனையா? நான் இறக்க வேண்டுமானால் உன் விருப்பப்படியே என்னை சாகடித்துவிடு' ஆனால், அவள் சாகவில்லை. அவள் மருத்துவ உதவியின்றி எவ்வாறு பிழைத்தாள் என்பது தத்துவங்களுக்கும் அப்பாற்பட்டது.

அவள் தொடர்ந்தும் தனியே நடக்க வைக்கப்பட்டாள். ஏனென்றால் அவளது கோரமான முகத்தை யாரும் பார்க்க விரும்பவில்லை. அவள் உடை மாற்றவில்லை. அவளது புண்கள் அவளை சாப்பிடவோ குடிக்கவோ விடவில்லை. உதடுகள் இல்லாத வாயை மூட முடியாததால் வாயிலிருந்து எச்சில் வடிந்த வண்ணம் இருந்தது. அவளால் ஒரு மாதம் வரையில் பேசக்கூட முடியவில்லை.

அவள் தனது நினைவுகளை மீட்டிப் பார்க்கிறாள். 'நான்சிதைந்துபோனவாயிலிருந்து வடியும் ஏனைய திரவங்களினாலும் துர்நாற்றத்துடனும் எனது முகம், கை, கால்களில்புண்களினால்ஏற்பட்டவேதனையுடனும் இருந்தேன். என்னை ஒரு மனிதப் பிறவியாகவே என்னால் நினைக்க முடியவில்லை'

அவளைப் பிடித்தவர்கள் அவளை வெறுத்தார்கள். கேலி செய்தார்கள். எச்சிலும் சீழும் அவளது உடையை நனைத்திருந்தன. அவளது புண்கள் புரையோடிப் போயிருந்தன. அவளது எஜமானர்கள் அவளைப்பார்க்கவும் அவளுடன் எவ்வித தொடர்பும் வைக்கவும் விரும்பவில்லை. அவளை 'அசிங்கம்' என்று அழைத்தனர். ஆனால், அவளைக்கொண்டு செய்யக் கூடிய எல்லா வேலைகளையும் செய்து கொண்டார்கள். அவளுக்குப்பொருட்களைச் சுமப்பதும் குழந்தைகளைப் பராமரிப்பது மான வேலைகள் பொறுப்பளிக்கப்பட்டன.

அவளுக்குக் காயம் பட்ட மறுதினம் அவளைப் படமெடுத்து ஜோசப் கோனிக்கு அனுப்பி அவளைக் கொன்றுவிட அனுமதி கேட்டனர். ஆனால், அவளைத் தொடர்ந்து எல்.ஆர்.ஏ. தீவிரவாதிகளுடன் நடக்க வைக்கவும்அவள்கீழேவிழுந்தால்கொன்று விடும்படியும் உத்தரவு வந்திருந்தது. இதுபற்றி அவளுக்கு அறிவிக்கப்பட, இவுலின் தைரியத்தை இறுக்கிப் பிடித்துக் கொண்டு முன்னேறினாள். அவள் தனிமையாக தனது உயிருக்காக நடந்தாள். தானும் தன்னுடன் இருக்கும் குழந்தைகளும் மீண்டும் சுதந்திரக்காற்றை எப்போதாவது அனுபவிப்போமா என்று அங்கலாய்த்தபடியே நடப்பாள்.

இவுலின் அனுபவித்த கொடூரங்கள் அவளது உடலிலும் மனதிலும் சமூக ரீதியிலும் ஆழ்ந்த வடுக்களை ஏற்படுத்தியிருந்தன. அவள் கடத்தப்பட்டு ஒரு வருடத்தினுள் நடந்த சம்பவமொன்று பசுமையாக இருந்ததை நினைவு கூர்ந்தாள். 16 வயதுப் பையனொருவன் நடு இரவில் தப்பிவிட முயன்றான். அடுத்த நாள் அவனைக்கண்டு பிடித்துவிட்டார்கள். அவனது கைகளைக்கட்டி நடக்க வைத்து பகல் முழுவதும் கடும் வெயிலில் நிற்க வைத்தார்கள். அந்த நாள் முடிவில் அவன் இறந்து விடுவான் என்று சொல்லியே கொடுமைப்படுத்தினார்கள்.

தலைவனொருவனின் கட்டளைப்படி ஒரு சிறுவன் சுத்தியலைத்தூக்கி மண்டையில் அடிக்க ஓங்கியபோது இவுலினுடைய தலையை அது உரசிச்சென்றது. ஏனைய சிறுவர்களுக்கும் தமது கைக்கு எட்டிய வைகளை எடுத்து முகத்தை அறிந்து கொள்ள முடியாதபடி சிதைக்குமாறு அறிவிக்கப்பட்டது. அவள் அந்த நிகழ்வை மிகவும் நுணுக்கமாக மீட்டிப்பார்த்தாள். 'நான் அவனைப் பார்த்தேன். அவனது கண்களில் அப்பாவித்தனம் தெரிந்தது. இந்த வேதனையை அனுபவிக்க அவன் என்ன செய்திருப்பான்' அவனைக் கொல்லும்போது சிறுவர்களை சிரித்துக் கும்மாளமிட்டபடி சுற்றி வருமாறு அந்த அயோக்கியர்கள் உத்தரவு போட்டார்கள்.



ஏன் இப்படி செய்தார்கள் என்று கேட்டபோது மற்றைய சிறுவர்களும் தப்பிப் போகாமலிருக்கும்படியான எச்சரிக்கையாக இருக்கும் என்றார்கள். அவன் இறந்து போனாலும் முகம் தெரியாத சிறுவர்களின் மேல் கவனயீர்ப்பு செய்யும் தனது முயற்சியில் அவனது நினைவை பசுமையாக வைத்திருந்தாள். தப்ப முயன்று பிடிபட்டால் நேரக்கூடிய விளைவுகளைப் பற்றி நன்கு தெரிந்திருந்தாலும் இவுலின் தப்ப வேண்டும் என்ற நோக்கத்திலிருந்து மாறவேயில்லை. அவளது தெரிவுகளாக அப்போது இருந்தவை தப்புவது அல்லது தப்பும்போது இறப்பது அல்லது 14 வயதாகும் போது யாருக்காவது கொடுக்கப் படுவது என்பவை தான். நோக்கம் எதுவாக இருந்தபோதும் அவள் சுதந்திரத்தையே விரும்பினாள்.

12 வயதாகும்போது விடிவதற்கு சிலமணி நேரத்திற்கு முன்பாக ஒரு இரவினுள் உகண்டாவின் புதர்களை நோக்கி இவுலின் ஓடத்தொடங்கினாள். அந்த இருளில் கொடிய நச்சுப் பாம்புகளுக்கும் சிறுத்தைகளுக்கும் ஏனைய பயங்கர மிருகங்களுக்கும் மத்தியில் அவளுடைய உயிருக்கு எந்த உத்தரவாதமும் இருக்கவில்லை. அடுத்த நாள் காலையில் அவளுக்கு ஒரு பாதை தெரிந்தது. அங்கே அவளை சாதாரண உடையணிந்த சிப்பாய்களிருவர் எதிர் கொண்டனர். அவளை அவர்கள் ஒரு எல்.ஆர்.ஏ. சிப்பாய்ச் சிறுமியாக நினைத்து விடுவார்களோ என்று பயந்தாள்.

இவுலின் அவர்களுக்கு தனது கதையை விபரித்தாள். சிப்பாய்கள் அவளைத் தமது முகாமிற்கு அழைத்துச் சென்று ஒரு பெண்ணிடம் கையளித்தனர். அந்தப்பெண் பின்னர் அவளை உகண்டாவின் எல்.ஆர். ஏயிடமிருந்து மீட்ட சிறார்களின் காப்பகத்திற்கு கொண்டு வந்தாள். இவுலினுக்கு இரண்டுமாதங்களின்பின்முதன்முறையாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. அதன் பிறகு ஐக்கிய அமெரிக்காவில் குழந்தைகளுக்கான மருத்துவ மிஷனால் (Children's Medical Mission) சிகிச்சை அளிக்கப்பட்டது.


இன்று இவுலின் லைபீரியாவின் ஸ்ட்ரோங் ஹார்ட் ஹவுஸ் (Strong heart House, Liberia) என்ற நிலையத்தில் பாதுகாப்பாகஇருக்கிறாள். இதுபோரினால் இடம் பெயர்ந்த, அநாதைகளாக்கப்பட்ட குழந்தைகளுக்கு கல்வி புகட்டும் ஒரு நிலையமாகும். இங்குள்ள குழந்தைகள் அவர்களது தலைமைத்துவ தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

அவள் தப்பியதிலிருந்து குழந்தைகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற அவளது முயற்சிகள் அவளை இன்று ஒரு சமாதானத் தூதுவராக்கியுள்ளது.

2010 நவம்பர் மாதம் 20ஆம் திகதி அவருக்கு வயது 19. கனேடிய பாராளுமன்றத்தில் அவளை லிபரல் கட்சி எம். பி. கீத் மார்டின் கொண்டு சென்றபோது சகல பாராளுமன்ற பிரதிநிதிகளும் அவளைக் கௌரவித்து எழுந்து நின்று கை தட்டிப் பாராட்டியதை பார்வையாளர் வரிசையிலிருந்து எழுந்த இவுலின், புன்சிரிப்புடன் கையசைத்து ஏற்றுக்கொண்டது ஒரு நெகிழ்ச்சி மிக்க தருணமாக இருந்தது.


இவுலினின் வார்த்தைகளில் சொல்லப் போனால் 'இவ்வுலகில் ஒவ்வொரு மனிதரும் முக்கியமானவர். அவர்கள் யாவருக்கும் ஒரு நோக்கம் இருக்கிறது.'

**நன்றி: Hill Times சஞ்சிகை**
**தொகுப்பு: சரோஜினி கனேந்திரன்**



## இப்படியும் நடக்கிறது

### சமுதாயத்தின் மறுபக்கம்



# யாழில் இளம் மாணவிகள் சட்டவிரோத கருக்கலைப்பு

யாழ். மாவட்டத்தில் சட்டவிரோத இளவயது கருக்கலைப்புகள் அதிகரித்து வருவதாகவும் பிரபல பாடசாலை மாணவிகள் இதில் உள்ளடங்குவதாகவும் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் கலாச்சாரப் பிறழ்வும் சமூகச் சீரழிவுச் செயல்பாடுகளும் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டாலும் மனச்சாட்சிக்கு பதில் சொல்லியே ஆகவேண்டுமென அவர் குறிப்பிட்டார். இளம் பெண் பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர்கள் கவனமாக இருக்கவேண்டும். அத்துடன் இளவயது பெண் பிள்ளைகள் விடயத்தில் கூடிய அக்கறையெடுத்து அவர்களின் படிப்பு, பாதுகாப்பு இரண்டு விடயங்களிலும் பெற்றோர் கண்டிப்பாக நடந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

(இளமையில் க(ல)ல்வி...????)

# 'கூட்ட மண்டபம்' பெயரால் யாழில் கள்ளுத் தவறணை

சுன்னாகம் கதிரமலை வீதிப்பகுதியில் அமைந்துள்ள கள்ளுத் தவறணையால் அங்கு தரிசனம் செய்கின்ற 'குடிமகன்கள்' வீதியை மறித்து நின்று பயணிகளின் பயணத்துக்கு இடையூறு விளைவிப்பதாகவும் அதனால் தங்கள் பெரும்சிரமங்களை எதிர் நோக்குவதாகத் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காங்கேசன்துறை வீதியிலிருந்து 30 மீற்றர் தூரத்துக்குள் வங்கிகள், பாடசாலைகளுக்கு அருகில் மக்கள் குடியிருப்புக்கள் செறிந்த பகுதியில் இந்தத் தவறணை அமைக்கப்பட்டுள்ளது. 'கூட்ட மண்டபம்' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தவறணையாலேயே இந்தப் பிரதேச மக்கள் சொல்லொனாத் துயரங்களை அனுபவிப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

(கௌரவமான 'குடி'மக்கள்)

# மாறிவரும் தமிழ்க் கிராமம்

நெடுங்கேணி பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட வெடிவைத்தகல்லு கிராமசேவை அலுவலர் பிரிவைச்சேர்ந்ததே கொக்கச்சான்குளம் என்ற தமிழ்க் கிராமம். இன்று அது 'கலாபோவசேவ' என்ற சிங்களக் கிராமமாக மாறியுள்ளது. செழிப்புமிக்க வயல் நிலங்களை உள்ளடக்கிய கொக்கச்சான்குளம் கிராமத்தில் இன்று சிங்களவர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர்.

கொக்கச்சான்குளத்தின் கீழ் சுமார் 200 ஏக்கர் வயல் நிலங்கள் உரித்துடையது. இப்பகுதியில் உள்ள வயல்காணி முழுவதும் தமிழ் மக்களுக்குச் சொந்தமானது. அங்கு சிங்கள மக்கள் அத்துமீறி குடியேற எடுத்த முயற்சி 1985ஆம் ஆண்டில் தடுத்து நிறுத்தப்பட்டது.

(வாழ்க ஜனநாயகம்!!!)

# ஏன் இந்தப் பாரபட்சம்?

சிங்கள சாரதி ஒருவருக்கும் தமிழ் சாரதி ஒருவருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பின் காரணமாக சிங்கள சாரதியுடன் இணைந்து இராணுவத்தினர் தமிழ் சாரதியை தாக்கியதில் அவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து யாழ். நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு வந்த சிங்கள சாரதியொருவர் சாவகச்சேரியில் யாழ்ப் பாணத்துக்குச் செல்வதற்கு காத்திருந்த பயணியொருவரை ஏற்ற முற்பட்டபோது பயணிகளை ஏற்றவேண்டாமென யாழ். கொடிகாம பஸ் சேவையில் ஈடுபடும் தமிழ் சாரதி கூறினார்.

இதன்போது இருவருக்குமிடையிலான வாக்குவாதம் முற்றி கைகலப்பாக மாறியது. இதனை அவதானித்த இராணுவத்தினர் சிங்கள சாரதியுடன் இணைந்து தமிழ் சாரதியை பொல்லுகள், இரும்புகளைக் கொண்டுதாக்கியுள்ளனர். குறிப்பிட்டசாரதி உடல், உள காயங்களுக்கு ஆளாகியுள்ளதாக தெரிய வருகின்றது.

(பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த கதை)

# அடி, உதையில் முடிவடைந்த கிளிநொச்சி– மன்னார் உதைபந்தாட்டம்

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் ஆட்டத்தின்போது கிளிநொச்சி-மன்னார் மாவட்ட அணிகளுக்கு இடையில் ஏற்பட்ட மோதலால் 6 பேர் காயமடைந்ததுடன் கதிரைகள் பலவும் சேதமாக்கப்பட்டன.

இரு அணி வீரர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. சம்பவத்தை மைதானத்தில் நின்ற பொலிஸாரும் மேலதிகமாக அழைக்கப்பட்ட பொலிஸாரும் இணைந்து கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

(விளையாட்டில் இதெல்லாம் சகஜமப்பா...!)

# அறிவிப்பாளர்களின் அலட்சியப் போக்கு

அகிலத்திற்கு ஒளி கொடுக்கும் வானொலிக்கு கடந்தசில வாரங்களுக்குமுன் ஒரு நிகழ்வு தொடர்பாக பெக்ஸ் ஒன்றை அனுப்பினேன். பிறகு தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டபோது பெக்ஸ் கிடைக்கவில்லையென்று சொன்னார் ஒரு அறிவிப்பாளர்.

திரும்பவும் அனுப்பச் சொன்னார். சரியென்று அனுப்பினேன், மீண்டும் அனுப்பச் சொன்னார் இப்படி ஆறு தடவைகள் அனுப்பிய பிறகுதான் நிகழ்ச்சியில் சேர்த்துக் கொண்டார்கள்.

இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் எனது முதலாவது பெக்ஸே அவருக்குக் கிடைத்திருக்கிறது. இதை அவருடன் பணியாற்றும் ஒரு நண்பர் மூலம் அறிந்தேன். உண்மையில் ஏன் இப்படி இவர் நடந்து கொண்டார் என்று தெரியவில்லை. நான் குறித்த வானொலியின் அபிமானி. குறிப்பாக என்னோடு பேசிய அந்த அறிவிப்பாளரின் மாலை நேர நிகழ்ச்சியை தினமும் கேட்பவன்.

இவரது இச்செய்கையால் நான் மிகவும் மனமுடைந்து போனேன். வானொலி நேயர்களை வெறுப்பேற்றும் இவ்வாறான அறிவிப்பாளர்கள் தொடர்ந்து இருந்தால் உயரத்தில் இருக்கும் வானொலி கீழே இறங்கிவிடும் என்பதில் ஐயமில்லை.

- லெ.ரஞ்ஜித், நுவரெலியா.

# ஊடக மயக்கம்



# எம்மவருக்கும் இடம்தாருங்கள்

இன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பார்க்காதவர்களே இல்லை எனலாம். என்ன வருத்தம் என்றால் இவை அனைத்துமே இன்று இந்திய தொடர்களை நம்பி இயங்கத் தொடங்கிவிட்டன. நமது கலைஞர்களை வைத்து எவ்வளவோ நல்ல நிகழ்ச்சிகளை படைக்கக்கூடிய வாய்ப்பிருந்தும் எம் நாட்டவர்கள் அதனை தவறவிடுகிறார்கள். ஒரு நாளைக்கு 5–6 மணித்தியாலங்கள் இந்த தொலைக்காட்சி தொடர்களுக்காகவே ஒதுக்கப்படுகின்றன. அது தேவைதானா? மக்களின் தேவையுணர்ந்து எம் நாட்டு தொலைக்காட்சிகள் செயற்படவேண்டும். அப்போதுதான் அதற்கொரு மதிப்பு கிடைக்கும்.

- தர்ஷினி, கொட்டாஞ்சேனை.

# புறக்கணிக்கப்படும் நம்நாட்டுப் பாடல்கள்

எமது நாட்டில் எவ்வளவோ நல்ல தமிழ்ப் பாடல்கள் உருவாக்கப்படுகின்றன. வானொலிகளில்தான் அவற்றை கேட்கமுடிவதில்லை. இந்தியப் பாடல்களை நான், நீ என போட்டி போட்டுக்கொண்டு ஒலிபரப்புச் செய்யும் வானொலிகள் ஏன் எம்மவர்களின் பாடல்களை உதாசீனம் செய்கின்றன என்றுதான் புரியவில்லை.

சில வானொலிகள் கலைஞர்களை ஊக்குவிப்பதாகக் கூறிக்கொண்டு, அவர்களின் இசை தொகுப்புகளை வாங்கி பாடல்களை அறிமுகப் படுத்துவதோடு கடமையை முடித்துக் கொள்கின்றன. பிறகு அந்தப் பாடல்கள் அவர்களுக்கே ஞாபகம் இருப்பதில்லை.

- ந.தயாளன், ஹட்டன்.

# வயிறு குலுங்க வைக்கும் சூரியனின் 'வலியக் கொழுவி'

யாருக்கும்தெரியாமல்நேயர்களிடம்போய்அவர்களிடம் கொழுவி அதை நகைச்சுவையாகத் தொகுத்து வழங்கும் 'வலியக் கொழுவி' நிகழ்ச்சி எங்கள் எல்லோரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கிறது. எதுமாதிரியும் இல்லாமல் புதுமாதிரியாக நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கும் பாணி சூரியனையே சாரும்.

- நஜ்மா பேகம், காத்தான்குடி-02.

'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,
மின்னஞ்சல்: irukiram@gmail.com

# வாசகர் கடிதம்




உங்கள் 'இருக்கிறம்' சஞ்சிகையில் வெளிவருகின்ற சிறுகதைகள் மிகவும் நன்றாக உள்ளன. குறிப்பாக 23-05-2011 அன்று வெளிவந்த 'புதிய பாதை' மற்றும் 30-05-2011 அன்று வெளிவந்த 'சின்னவள்ளி' போன்ற சிறுகதைகள் சிறப்பாக இருந்தன. இயல்பான உணர்வுகளை வெளிப்படுத்தும், புதிய எழுத்தாளர்களின் படைப்புகளும் இதன் சிறப்புக்கு ஒரு காரணமாக நான் கருதுகின்றேன். 'இருக்கிறம்' உள்ள வரை தொடர்ந்தும் இவ்வாறு நல்ல சிறுகதைகளை பிரசுரிக்க வேண்டும். வாழ்த்துக்கள்...!

- கா.சரண்யா
வெள்ளவத்தை.

'இருக்கிறம்' சஞ்சிகையில் பலதரப்பட்ட விடயங்கள் வெளிவருகின்றன. ஆனால் நான் மிகவும் விரும்பிப்படிப்பது கவிதைகளைத்தான். ஏனெனில் ஏனைய பத்திரிகைகளில் வெளிவரும் கவிதைகளைவிட உங்கள் சஞ்சிகையில் வெளிவரும் கவிதைகள் மிகவும் வித்தியாசமாக உள்ளன. அனேகமாக இருக்கிறமில் வெளிவருகின்ற கவிதைகள் அனைத்துமே நம் நாட்டில் சாதாரணமாக பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாகத்தான் அமைகின்றன. தொடர்ந்தும் இவ்வாறு பொதுப்படையான கவிதைகளை வெளியிட வேண்டுகின்றேன்.

- நா.புவனேஸ்வரி, மானிப்பாய்,

உங்கள் சஞ்சிகைக்கு புதிய வாசகன் நான். நான் எழுதும் முதல் வாசகர் கடிதம் இது. அதனால் கட்டாயம் இதனை பிரசுரிப்பீர்கள் என நம்புகின்றேன். கடந்த திங்கட்கிழமை 'இருக்கிறம்' சஞ்சிகையில் வெளியான 'வவுனியாவில் முன்னாள் போராளிகள் விடுதலை' என்னும் கட்டுரை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. உண்மையிலேயே எம்மனதை உலுக்கிவிட்ட உறவுகளின் அழுகுரல்தான் அது. போர் முடிந்த பிற்பாடும் இன்றும் எம்மக்கள் அவர்களின் உறவுகளுக்காக காத்திருக்கின்றனரே. இது எப்போதுதான் மாறுமோ??? இவ்வாறான ஆக்கங்களை தொடர்ந்தும் எதிர்பார்க்கிறேன்.

- எஸ்.சுகந்தன், பூவரசங்குளம், வவுனியா.

எழுத்தில் மட்டுமல்ல எதிலும் ஒரு சுவாரஸ்யம் இருக்க வேண்டும். ஒரு சுவாரஸ்யம் இல்லையென்று சொன்னால் அந்த எழுத்தில் எந்த பிரயோசனமும் இல்லை. அது யாரையும் கவரவும் மாட்டாது. அந்த சுவாரஸ்யத்தை முதன் முதலில் இலங்கையில் அறிமுகப்படுத்தியது 'இருக்கிறம்' சஞ்சிகைதான். அதனால் அந்த சஞ்சிகையை விரும்புகிறேன். அது தொடர்ந்து வந்திருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டேன்.

இப்போது அது பத்திரிகையாக வருவது மனதுக்கு கவலையாக இருக்கின்றது. முடியுமாக இருந்தால் இந்தப் பத்திரிகைக்கு ஒரு சஞ்சிகை வடிவத்தைக் கொண்டுவரும் அளவிற்காவது அட்டைப்படம் போட்டு, சஞ்சிகை வடிவத்திற்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டும். அப்படி சஞ்சிகை வடிவத்திற்கு வருமாக இருந்தால் இன்று இருக்கும் விற்பனையைவிட கொஞ்சம் தூக்கலான விற்பனையாக இருக்குமென நினைக்கிறேன். நிறையப் பேர் படிப்பார்கள் என்ற நம்பிக்கையும் இருக்கிறது.

- அஷ்ரப் சிஹாப்தீன்.

'இருக்கிறம்' குழுவிற்கு வணக்கம்!!!

கடந்த வாரம் வெளியான 'இருக்கிறம்' சஞ்சிகையில் மூன்று நேரடி ரிப்போர்ட்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 'கொட்டாஞ்சேனை ஆட்டோ ஓட்டுநர்கள்', '6 மாதங்களுக்கென கொடுத்த அகதி முகாமில் 7 வருடங்களாக வாழும் சாய்ந்தமருது மக்கள்', 'மீண்டும் ஏமாற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள்' என மூன்று பிரதேசங்களிலிருந்து எடுக்கப்பட்ட நேரடி ரிப்போர்ட்களுமே சிறப்பாக இருந்தன. நீங்கள் நேரடியாக மக்கள் பிரச்சினைகளை ஆராய்வது பாராட்டுக்குரிய விடயமாகும்.

- இ.நாகேஸ்வரன், கொட்டாஞ்சேனை.

**'இருக்கிறம்' சஞ்சிகை பற்றி உங்களது விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம். அதுவே எமது வளர்ச்சிக்கான வித்தாக அமையும். மற்றும் உங்களது ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் நாம் வரவேற்கின்றோம்.**

# 'இருக்கிறம்' சஞ்சிகையின் ஊடகவியல் கருத்தரங்கு

'இருக்கிறம்'இன் 75ஆவது வெளியீட்டினை முன்னிட்டு சஞ்சிகையோடு இணைந்து பணியாற்றும் ஊடகவியலாளர்கள் பங்குகொண்ட கருத்துப் பரிமாறல் நிகழ்வொன்று கடந்த 12.06.2011 அன்று அலுவலகத்தில் நடைபெற்றது.


துணிச்சல்மிக்க இளம் ஊடகவியலாளர்களை உருவாக்கும் நோக்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வானது ஒரு நாள் செயலமர்வாக இடம்பெற்றது.

இந்நிகழ்வில் 'ஊடகங்களில் தமிழ் மொழி' என்ற தலைப்பில் பிரபல தமிழ் ஆசிரியர் எஸ்.இந்திரகுமாரும் 'புலனாய்வு ஊடகவியல்' பற்றி பிரபல பத்திரிகையாளரான என். வித்தியாதரனும் தமது விரிவுரையோடு இணைந்த கருத்துப் பரிமாறல்களை மேற்கொண்டனர்.

'இன்றைய ஊடகங்களும் ஊடகவியலாளர்களும்' பற்றி சட்டத்துறை மாணவனும் பேச்சாளருமான அசோக்பரனும் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

இருக்கிறமின் ஊடகப்பணி மற்றும் கள அனுபவங்கள் தொடர்பாக இருக்கிறமின் நிர்வாக ஆசிரியர் சாந்தி சச்சிதானந்தம் மற்றும் ஆசிரியர் அருளானந்தம் சஞ்ஜீத் ஆகியோரும் விளக்கமளித்தனர்.

எதிர்காலத்திலும் இவ்வாறான பல செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.




பிரபல தமிழ் ஆசிரியர் எஸ்.இந்திரகுமார், பத்திரிகையாளர் என்.வித்தியாதரன், அசோக்பரன் ஆகியோர் இளம் ஊடகவியலாளர்களுக்கு விரிவுரையாற்றுவதையும் 'இருக்கிறம்' சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் சாந்தி சச்சிதானந்தம், ஆசிரியர் அருளானந்தம் சஞ்ஜீத் ஆகியோரையும் இங்கு காணலாம்.



ஒருநாள் செயலமர்வில் கலந்துகொண்ட இளம் ஊடகவியலாளர்களை இங்கு காணலாம்.

# துணிச்சல்மிகு ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை



உலகறிந்த துணிச்சல்மிகு ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி தனது வீட்டிற்குள் வைத்து இனந்தெரியாத ஆயுததாரிகளால் கொல்லப்பட்டார். அவர் கொல்லப்பட்டு 10 வருடங்களும் 7 மாதங்களும் உருண்டோடியுள்ள நிலையில் அவரது படுகொலை தொடர்பான விடயங்கள் இன்னும் மர்மமாகவே நீடித்து வருகின்றன.

அக்கால கட்டத்தில் வடக்கு மண்ணில் இடம்பெற்று வந்த ஆயுததாரிகளின் அடாவடித்தனங்களையும் வன்முறைப் பிரயோகங்களையும்தெற்கிலுள்ளஊடகங்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டிய அஞ்சா நெஞ்சம் படைத்த ஊடகவியலாளர் தான் மயில்வாகனம் நிமலராஜன். தணலாகக் கனன்று கொண்டிருந்த யுத்தத்தில் பலிக்கடாக்களாக்கப்பட்டுக் கொண்டிருந்த தமிழ் மக்களது அல்லல்களை உணர்வு பூர்வமாக உயிரோட்டம்மிக்க எழுத்திலும் பேச்சிலும் தெற்கு ஊடகங்களுக்கு செய்தி வடித்தவர்களுள் நிமல ராஜனுக்கு அளப்பரிய பங்குண்டு. இவர் பல ஊடகங்களில் சுதந்திர ஊடகவியலாளராகவும் பணியாற்றி வந்தார். ராவய, ஹரய, வீரகேசரி போன்ற இன்ன பிற பத்திரிகைகளுக்கும் வடபுலத்து நிகழ்வுகளை அவ்வப்போது வழங்கி வந்தார். பி.பி.சி. ஒலிபரப்புச் சேவைக்கும் கனத்த தகவல்களை உடனுக்குடன் வழங்கி வந்தார்.

நிமலின் ஊடக வாழ்க்கை அச்சுறுத்தல் மிக்கதாகவும் அபாயகரமானதுமாகவே இருந்து வந்தது. வடபுலத்தில் இடம் பெற்றுவந்த வன்முறைகளை செய்திகளாக வெளியிட எவரும் முன்வராத ஒரு சந்தர்ப்பத்தில் நிமல் அதனை துணிச்சலோடு பொறுப்பேற்றிருந்தார். எந்தவொரு சுதந்திர ஊடகங்களுக்கும் சுதந்திரமாக செய்தி வெளியிடும் உரிமத்தை இரத்துச் செய்துவரும் அரசின் கைங்கரியம் ஒரு புறம் அரங்கேறிக் கொண்டிருந்த வேளையில் மரணபீதியில் உறைந்து போயிருந்த மண்ணில் இருந்துகொண்டு நீதிக்காகவும் மனித உரிமைக்காகவும் குரல்கொடுப்பதென்பது எந்தவொரு சமூகப் பலங்களும் இல்லாத தனி மனிதனால் செய்ய முடியாத காரியமாகும். ஆனாலும் நிமலராஜன் இவற்றுக்காகப் போராட தனது ஊடக வாழ்க்கையையே அர்ப்பணம் செய்தார்.

வழக்கம்போல யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டிருந்த அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்கு மத்தியிலும் ஊரடங்குச் சட்டமும் பிரயோகப்பட்டிருந்தவேளையிலேயே நிமலராஜன் இனம்தெரியாத ஆயுததாரிகளின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார். இவர் கொலை செய்யப்படும் வேளையில் பி.பி.சி. செய்தியை செவிமடுத்துக் கொண்டிருந்தார். கொலைகாரர் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதைத் தொடர்ந்து நிமலின் வீட்டுக்குள் ஒரு கைக்குண்டும் விழுந்து வெடித்தது. அதில் சிறு குழந்தையொன்றும் நிமலின் தாயாரும் காயப்பட்டனர். அதி உச்ச பாதுகாப்பு வலயத்திற்குள் அடுக்கடுக்காக அமைக்கப்பட்டுள்ள பலத்த பாதுகாப்புச் சோதனைச் சாவடிகளில் நிலைகொண்டிருந்த இராணுவச் சிப்பாய்களின் கண்களில் படாமல் கொலைகாரர்கள் தப்பிச் சென்றார்கள். அப்பிரதேசத்தில் சிறிய வெடிப்புச் சத்தம் கேட்டாலே ஆயுதங்களை கையில் தூக்கிப் பிடித்துக் கொண்டு அப்பாவி மக்களை அச்சுறுத்தி விடைகாண முயலும் இராணுவத்தினரின் வழக்கமான லீலைகள் அன்றைய தினம் மாத்திரம் அடங்கிக் கிடந்தது ஏனோ தெரியவில்லை. இராணுவத்தினருக்கும் கொலைகாரர்களுக்குமிடையில் ஏதோவொரு இணக்கப்பாடு காணப்பட்டிருந்ததைப் போன்றே அன்றைய தினம் அத்தனை நிகழ்வுகளும் அரங்கேறி முடிந்திருந்தன. சம்பவ தினம் சோதனைச் சாவடிகளில் பாதுகாப்புக் கடமையிலிருந்தஇராணுவதரப்புக்களிடம், நிமலராஜனைக் கொலை செய்தவர்கள் தப்பிச்சென்ற விதம் பற்றிய எந்தவொரு சாட்சிகளும் பெறப்படவில்லை.




துவக்குச் சூட்டிற்கு உட்பட்டிருந்த நிமலராஜனின் உடலையும் காயப்பட்டவர்களை யும் சோதனைச்சாவடிகளில் இருந்த இராணுவத்தினரின் கேள்விக் கணைகளுக்கு மத்தியில் வைத்தியசாலைக்குக் கொண்டு சேர்ப்பதற்கு, நிமலனின் உறவினருக்கு ஒரு மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் எடுத்தது. அதுவும் இருள் கவிழ்ந்திருந்த நேரம் கைப்பிடி விளக்கொன்றை அசைத்தபடி ஒவ்வொரு சோதனைச் சாவடிகளிலும் நின்றுகொண்டு தகவல் கூறிக்கொண்டே வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல நேர்ந்தது. அதற்கிடையில் கொலைகாரர்கள் இலகுவாகவே தப்பிச்சென்றார்கள்.



◀ ஹெட்டி ரம்ஸி ▶

பத்து வருடங்கள் கழிந்துள்ள நிலையில் இதுவரை காலமும் ஆட்சி பீடங்களில் ஏறி இறங்கிய எந்தவொரு அரசாங்கமும் நிமலராஜனின் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களை சட்டத்தின் முன்கொண்டு வரவில்லை. இந்நிலையில் ஊடகவியலாளர்கள் கொலை தொடர்பில் தீர்வு காணப்படாத வழக்குகளின் பட்டியலில் இலங்கை 4ஆவது இடத்தில் உள்ளது. இவ்வாறான 9 வழக்குகள் உண்டென சர்வதேச ஊடகவியலாளர் கண்காணிப்புக்குழு அண்மையில் தெரிவித்துள்ளது.

நிமலனின் கொலையின் பின்னர் இன்று அவருக்காகவோ அவரது குடும்பத்தவர்களுக்காகவோ எவ்வித நீதியும் நேர்மையும் நிலை நாட்டப்படவில்லை இவரது கொலையைத் தொடர்ந்து பல ஊடகவியலாளர்கள் அவர்களின் ஊடகப்பணியின் காரணமாக கொல்லப்பட்டுள்ளனர். அச்சுறுத்தல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் உட்பட்டனர். இன்றும் அதே நிலைமைதான்.
சிலர் தங்களுக்கு விடுக்கப்பட்டுவந்த மரண அச்சுறுத்தல்கள் காரணமாக நாட்டை விட்டே சென்றுள்ளனர். இவற்றுக்கு பொறுப்பு கூறக்கூடியவர்கள் யார் என்பது பற்றிசமூகம்கூடஅக்கறையெடுக்கவில்லை. பொறுப்புச் சொல்லக் கூடியவர்களை அம்பலப்படுத்தும் வல்லமையும் அதிகாரமும் கொண்ட அரசாங்கம் மௌன விரதம் பூண்டுள்ளது.

அமரர் நிமலராஜனின் கொலையை மட்டுமல்ல மற்றைய ஊடகவியலாளர்களை கொலை செய்தவர்கள் யாரென்பதும் தமிழர்களுக்கு நன்றாகவே தெரியும். அவர்கள் இன்று சமூகத்தில் சுதந்திரமாக இன்னுமின்னும் குற்றங்களைப் புரிந்து கொண்டு நடமாடி வருகிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது ஒரு சந்தர்ப்பத்தில் உலகு தனது நலன் சார்ந்த விடயத்திற்காக தமிழர் எப்படி போனாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றதா என எண்ணத் தோன்றுகிறது.

ஊடகவியலாளர்களை சமூகத்தைப் பாதுகாக்கும் மோப்ப நாய்கள் என்பார்கள். இக்கூற்றுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவர் நிமலராஜன் எனக் கூறினால் அது மிகையாகாது. மரண அச்சுறுத்தல் நிறைந்த பிரதேசத்தில் தனக்கு எந்நேரமும் மரணம் சம்பவிக்கலாம் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்தும், போர்த் தீ மூட்டத்தில் அல்லல்படும் மக்களைக் கண்டு அஞ்சா நெஞ்சம் படைத்தவராக களத்தில் இறங்கி செய்தி வெளியிட்டார். இதன்மூலம் ஒரு ஒடுக்கப்பட்ட இனத்திற்கெதிராக குரலெழுப்பினார். இறுதியில் இவரது குரல் வளையையே நெ(ரி)டித்துவிட்டார்கள். ஒரு தசாப்தம் கழிந்து விட்டுள்ள நிலையில் இவரது கொலை பற்றிய எவ்வித தடயங்களும் இதுவரை கண்டறியப்படவில்லை. நிறை வேற்றப்படாத ஒரு நீதிக்காக மனம் வெதும்ப கண்ணீர் சிந்துவதேயன்றி எமக்கொன்றும் இனி வழியில்லை.

நன்றி: ராவய

## 10 வருடங்களாகியும் நீதி கிடைக்கவில்லை





இச்சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர் பிரைவேற் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.